# தமிழ் ஒரு "கட்டமைப்புள்ள" மொழி



மெய்யப்பன் பதிப்பகம்

தமிழண்ணல்

# தமிழ்
# ஒரு 'கட்டமைப்புள்ள' மொழி

''செம்மொழித் தமிழைச் சிதைப்பவரைச்
சிறைசெய்தடைப்பினும், அது தகுமே!
நம்மொழி தமிழை அழிப்பவரை
நையப் புடைப்பினும், அது தகுமே!''

தமிழண்ணல்

மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு, சிதம்பரம்-608001.

முதல் பதிப்பு : ஏப்பிரல், 2008
திருவள்ளுவர் ஆண்டு : 2039
உரிமை : ஆசிரியர்க்கு
**விலை ரூ. 50.00**

மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் : 247



**நினைவில் வாழும்**
**நிறுவனர்**
**ச. மெய்யப்பனார்**

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச்செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடங்கள் :

## மணிவாசகர் நூலகம்

12–B, மேல சன்னதி, **சிதம்பரம்–608001.** ☎ **230069**

31, சிங்கர் தெரு, பாரிமுனை, **சென்னை–600108.** ☎ **25361039**

6, சிவஞானம் தெரு, தி. நகர், **சென்னை–600017.** ☎ **24357832**

110, வடக்கு ஆவணி மூல வீதி, **மதுரை–625001.** ☎ **2622853**

15, ராஜ வீதி, **கோயமுத்தூர்–641001.** ☎ **2397155**

78. செரி சாலை, **சேலம்–636001.** ☎ **3207722**

28, நந்தி கோயில் தெரு, **திருச்சி–620002.** ☎ **2706450**

**அச்சிட்டோர் :** மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 600 021.
தொலைபேசி: 25954528

# கருத்திற்கொள்வோம்!
# கடமையைச் செய்வோம்!

இன்று சிலர் மேடைகளில் கூறுகிறார்கள்; எழுதவும் செய்கிறார்கள். என்ன அது?

இன்னும் ஒரு நூற்றாண்டில் அழியப் போகும் நூறு மொழிகளுள் தமிழும் ஒன்றாம்!

'மெல்லத் தமிழினிச் சாகும்' என்று பாரதி பாடி விட்டானாம்.

இந்தியாவில் இந்தியும் வங்காளமும் தவிர, மற்ற மொழிகள் எல்லாம் அழிந்துவிடுமாம்!

ஆராய்ச்சியாளர்கள் கூறியதாக, அனைவருமே கூறத் தொடங்கிவிட்டனர்!

இதை நாம் ஒரு எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டும்; விழிப்புணர்வோடு செயற்பட வேண்டும்!

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே!
மாண்புகள் நீயே என்தமிழ்த் தாயே!
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரனின் வீரமும் வெற்றியும் நீயே!

✧ ✧ ✧

உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு
வருந்தீமை உனக்குவரும்
தீமை அன்றோ?
பிணி நீக்க எழுந்திருநீ
இளந்தமிழா, வரிப்புலியே
பிற்றை நாளுக்கு

✧ ✧ ✧

அணிசெய்யும் இலக்கியம் செய்!
அறத்தைச் செய், விடுதலைகொள்
அழகு நாட்டில்!

✧ ✧ ✧

பணிசெய்வாய்! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
பழநாட்டானே!

- பாவேந்தர் பாரதிதாசன்

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப

- தொல்காப்பியம்

# தேசியப் பெருங்கவிஞன் பாரதியார் பாட்டு

## தமிழ்த்தாய்

(தன் மக்களைப் புதிய அறிவியல், கலை நூல்கள் வேண்டுதல்)

ஆதிசிவன் பெற்று விட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்

மூன்றுகுலத் தமிழ்மன்னர் - என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளினுள்ளே - உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்

கள்ளையும் தீயையும் சேர்த்து - நல்ல
காற்றையும் வான வெளியைஞ் சேர்த்துத்
தெள்ளுதமிழ்ப் புலவோர்கள் - பல
தீஞ்சுவைக் காவியஞ் செய்து கொடுத்தார்

சாத்திரங்கள் பல தந்தார் - இந்தத்
தாரணி எங்கும் புகழந்திட வாழ்ந்தேன்!
நேத்திரங் கெட்டவன் காலன் - தன்முன்
நேர்ந்த தனைத்துந் துடைத்து முடிப்பான்

நன்றென்றும் தீதென்றும் பாரான் - முன்பு
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள்ளம்போல் - வையச்
சேர்க்கை அனைத்தையும் கொன்று நடப்பான்

கன்னிப் பருவத்தில் அந்நாள் - என்றன்
காதில் விழுந்த திசைமொழி எல்லாம்
என்னென்னவோ பெயருண்டு - பின்னர்
யாவும் அழிவுற்றிறந்தன கண்டீர்!

தந்தை அருள்வலியாலும் - முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணம் மட்டும் காலன் - என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சியிருந்தான்!

இன்றொரு சொல்லினைக் கேட்டேன் - இனி
ஏதுசெய்வேன் எனது ஆருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை - இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை!

சொல்லவுங் கூடுவ தில்லை - அவை
சொல்லும் திறமை தமிழ் மொழிக் கில்லை!
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்!

என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ
இந்த வசை எனக்கு எய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!

தந்தை அருள்வலி யாலும் - இன்று
சார்ந்த புலவர் தவவலியாலும்
இந்தப் பெரும்பழி தீரும் - புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்!

இந்தப் பாடலைப் பலமுறை படியுங்கள். தமிழின் வரலாறு இதிலுள்ளது. அகத்தியன் கதை கற்பனைச் செய்தி. சார்ந்த புலவோர் தவவலி வேண்டும்; தந்தை அருளும் வேண்டும். தமிழ்த்தாய் என்ன சொல்லி முடிக்கின்றார். இனி மேடைகளில் கடைசிப் பகுதியை மட்டுமே பாடுங்கள்! 'புகழ் ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்'! பாரதியின் அருள் வாக்கு –நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மந்திரமொழி – அதுவே வெற்றி பெறும்!

✧ ✧ ✧

# தமிழ்ச் சொல்லின் கட்டமைப்பு

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா
- பாரதியார்

தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை!
- பாரதிதாசன்

தமிழில் ஓரெழுத்துச் சொற்கள் கூடுதலாக உள. தமிழ் சைகை மொழியாக இருந்தபோதே பிறந்தது என அவை மெய்ப்பிக்கின்றன. வா, போ, ஆ, மா, கா, தா, நீ, ஈ, சா, ஏ, ஐ – என இலக்கணத்திலும் உலக வழக்கிலும் எண்ணிப் பார்க்கலாம்.

ஐ–என்பது வியப்பைக் குறிப்பது வியப்பே. ஆ– என்பது அவலத்தையும் வியப்பையும் பசுவையும் குறிக்கின்றது.

கா எனக் கத்தியதால் காக்கை என்றும் கூ எனக் கூவியதால் குயிலையும் குறிப்பிட்டது போல்வன, 'போறல் வகை' என்பர்.

தமிழில் ஈரெழுத்துச் சொற்களும் கணக்கில. நட, படி, கடி, தின், உண், கண், எடு, ஆடு, பாடு என ஆயிரம் சொற்கள் கூறலாம். இதுபோல் மூவெழுத்துச் சொற்களும் மிகுதி. இவை யாவும் தமிழின் தொன்மையையும் வளத்தையும் குறிப்பன.

தமிழ்ச் சொற்களின் 'கட்டமைப்பு' அதன் செவ்வியல் மொழிச் சிறப்பாகும். எவ்விதக் கூட்டுச் சொல்லையும் பிரித்துவிடலாம்; பிரித்தபடியே சேர்த்து விடலாம். அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்புக்கும் காரணமும் பொருளும் உண்டு.

உலக மொழிகளில் இத்தகைய அமைப்புடையவை மிகக் குறைவே. கூடப் பொறந்த பொறப்பு, பொறந்த வீடு என்றெல்லாம், உலக வழக்கில் திரித்து வழங்குவனவற்றை, சின்னத்திரை பெரிய திரைகளில் ஆயிரம் முறை திரும்பத் திரும்ப ஒலித்து மொழியைக் கெடுக்கிறார்கள்.

பிறந்த வீடு, பிறப்பு, உடன்பிறப்பு, பிறவி, பிறக்கும் நாள், பிறந்த நாள் – எல்லாம் போய் 'பொறந்த' ஆகலாமா? எல்லோரும் என்றோ ஒருநாள் சாவது உறுதி. அதையறியாது, உலகில் மூத்த நம் தமிழ், இன்றும் இளமையோடு திகழ்வதை எண்ணிப்பாராமல் அதாவது இவர்களுக்குப் பிறகும் இவ்வுலகில் நிலைபெறப் போகிற மொழியை, இப்படிச் சிதைக்கிறார்கள்; இவர்கள் உருப்படுவார்களா?

| | | |
|---|---|---|
| கூனன் | – | கூன் + அன் |
| அறிஞன் | – | அறி + ஞ் + அன் |
| பாடினான் | – | பாடு + இன் + ஆன் |
| படித்தனன் | – | படி + த் + த் + அன் + அன் |

இதில் வரும் உறுப்புக்கள் பொருளுடையன. இக் கட்டமைப்பைச் சிதைத்து, வாட்றான், ஒட்றான், பாட்றான், காட்றான் எனலாமா?

உலக மொழிகளை அடிப்படையில் மூன்று வகையாகப் பகுப்பர். தனிநிலை, ஒட்டுநிலை, உட்பிணைப்பு நிலை என. சீன மொழி தனிநிலை மொழி என்பர். எல்லா மொழிகளிலும் இம் மூவகையும் இருப்பதுண்டு. தமிழ் ஒட்டுநிலையில் உளது. ஒரு சொல்லைப் பிரிக்கவும் சேர்க்கவும் கூடியதே ஒட்டுநிலை. ஒட்றான், விளையாட்றான், செஞ்சுப்பிட்டான், பொசலான் என்னும் உலக வழக்குகள், ஒலித்திரிபுகள், பிழை வழக்குகள், கொச்சை மொழி, குறுமொழி வகையின. உட்பிணைந்துபோனதால், பிரித்து, தனித்தனி உறுப்பாக்கிப் பொருள் கூற முடியாது.

தமிழில் வட்டார வழக்குகளில் முழுமையான இன்னமும் அகராதியில் ஏறாத நூறாயிரம் சொற்களுக்கு மேல் உள. கைவினைஞர்கள், கல்தச்சர்கள், மரத்தச்சர்கள், கொத்தனார், பெருந்தச்சர் எனப்படும சிற்பிகள், கட்டிடக் கலைஞர்கள், பிறபல கலை, தொழில், வாணிகம் சார்ந்தார் அனைவரும் வாய்மொழியாக வழங்கி வரும் சொற்களைத் தொகுக்க வேண்டும்.

அதை விட்டுவிட்டு கரிசல் தமிழ் என்றும், கடற்கரைத் தமிழ் என்றும் கலப்படத் தமிழென்றும் இன்று கதை, நாவல்களை எழுதிக் குவிக்கின்றனர். அவர்களை ஆதரித்து, தமிழ்க்கொலை செய்யச் சில கிழமை இதழ்கள், தாளிகைகள் பணப் பரிசு தந்து, விளம்பரப்படுத்தி, துணை போகின்றன. கொலை செய்வதும் குற்றம், கொலைக்கு உடந்தையாவதும் குற்றமே. முதன்முதல் ஒரு தெலுங்கரே இந்நாளில் இதற்கு வித்திட்டுவிட்டார். நம் முழு மூடர்கள் அதைப் பின்பற்றி, மக்கள் வழக்காற்றியல், நாட்டார் வழக்காற்றியல் என்ற பெயர்களால் தமிழைச் சிதைத்து வருகின்றனர். இந்நூலை முழுவதுமே படிப்பவர்கள், இவற்றைப் பற்றி முழுமையாய் அறிந்து தமிழைக் காக்க முற்படுவர் என்பது உறுதி.

**- தமிழண்ணல்**

## பகுதி - 1

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் உயிருள்ள மொழி | 11 |
| 2. | தமிழ் ஒரு கட்டமைப்புள்ள மொழி | 15 |
| 3. | சாரியைகளின் பயன்பாடு | 20 |
| 4. | ஙப் போல் வளை | 23 |
| 5. | கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி | 30 |
| 6. | தமிழைத் தளரவிடலாமா? | 35 |
| 7. | தமிழனின் தலையெழுத்தும் தமிழின் தலையெழுத்தும் | 39 |
| 8. | தலையெழுத்தாகித் தடுமாற வைக்கும் ஆங்கிலமே | 43 |
| 9. | தலையெழுத்தில் தடுமாற்றமும் தமிழ் ஊற்றமும் | 49 |
| 10. | தமிழின் எதிர்காலம் - ஒரு தொலைநோக்குப் பார்வை | 54 |

# பகுதி-1

# 1. தமிழ் 'உயிருள்ள' மொழி

தமிழ் மட்டும்தான் உயிருள்ளதா? பிற மொழிகளுக் கெல்லாம் உயிரில்லையா? என்று யாரும் சீற்றம் கொள்ள வேண்டாம். தமிழில் உயிரெழுத்துக்களின் பயன்பாடு மிகுதி. உயிரொலிகள் ஒலிப்பதற்கு எளியன. உயிரொலிகள் வாய் அங்காத்தலால் மட்டுமே பிறப்பன. இதழ், நா, பல், அண்ணம் ஒட்டுதலும் உராய்தலும் மெய் எழுத்திற்கே உண்டு. இதை வைத்து உயிர், மெய் எனப் பெயர் வைத்தமை வியப்பளிக்கிறது. மூச்சுக்காற்று வெளிப்படுங்கால் ஏதேனும் ஒரு வகையில் தடைப்பட்டு வெளிப்படுமாயின் மெய்யொலிகள் பிறப்பதால், அவை அத்துணை எளியன அல்ல. தமிழின் உச்சரிப்பு எளிமைக்கும் பண்ணிசைபோல் இனிமையுடையதாய் ஒலிப்பதற்கும் உயிரொலிகள் மிகுதியாய்ப் பயன்படுவது ஒரு காரணமாகும். முக்கியமாக அ,இ, உ என்ற எழுத்துக்கள் இடைவிரவி வருதலும் சாரியைகள் கலந்து வருதலும் உச்சரிப்பை எளிமைப் படுத்துவதை உய்த்துணரலாம். உயிர் 'எழுத்துப்பேற்றினை', இக்காலத்திற்கு ஏற்ப 'ஒலித்துணை உயிர்' என்று குறிக்கலாம். புல், மண் எனக்கூறாமல் 'புல்லு', 'மண்ணு', 'தின்னு' என ஏவும் பழக்கம் இருக்கிறது. இவை பேச்சு வழக்கின என்றாலும், இம்மரபு தமிழில் பிற இடங்களிலும் காணப்படுகிறது. நாய், பேய் என்பதைப் பேச்சில் நாயி, பேயி என்பர். 'நீ அங்கே போயி' என நீட்டுவர். போய் என ஒற்றில் நிறுத்தாமல், 'போயி' என மூச்சுவிட்டுக் கொண்டே சொல்வதில் எளிமை இருக்கிறது. அன், இன் அம் எனச் சாரியையாக நின்றும் இவை பயன்படுமிடங்களைப் பார்த்தால், பெரிதும் இவை உச்சரிப்பு எளிமைக்காக வந்து, பொருளுணர்ச்சிக்கும் உதவுவதைக் கண்டு கொள்ளலாம். புளி + பழம் = புளிப்பழம் ஆகாமல் புளியம்பழம் ஆகும். ஆறு + கரை = ஆற்றுக்கரை ஆகாமல் ஆற்றங்கரை ஆகும். நெய்யாற்றங்கரைதான் சரி; ஆற்றின்கரை என்பது ஊர்ப்பெயரன்று. மடம் + இல் = மடத்திலாவதும் அவை + ஐ = அவற்றை யாவதும் ஒலித்துணை சேர்க்கும் பழக்கத்தினாலேதான்!

**பிறமொழிச் சொற்களின் தமிழாக்கம்**

பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கும்போது இம்முறை பெரிதும் பயன்படுகிறது. தமிழில் 'உயிரின்' உதவி எவ்வளவு அதிகம் என்பதை அப்போது நன்கு உணரமுடிகிறது. 'சந்தர்ப்பம்' என்பதை முன்பு 'சந்தருப்பம்' என்றே பேசியும் எழுதியும் வந்தனர். 'பாக்யம்' என்பதைத் திருவள்ளுவரும் 'பாக்கியம்' என்றே எடுத்தாண்டார் (1141). 'தர்மம், என்பதுதான் சமஸ்கிருதம். அதைத் தருமம் என்னும்போது, தமிழாகிவிடுகிறது. வேடிக்கையாகச் சொன்னால், பிறருக்கு உடல் பொருள் ஆவி அனைத்தையும் தருவதால் தருமம் ஆகிறது என்று வேர்ச்சொல் கூறுமளவு தமிழாகிவிடுகிறது. 'தருமம்' என்பதை வடசொல் என்றால் அயற்சொல்லாகக் கருதாமல் தமிழ்ச்சொல் வகைகளுள் ஒன்றாகச் சுட்டுவதாகும். அர்த்த – சமஸ்கிருதம், அருத்தம் – வடசொல். இறுதி ஒட்டுச் சேர்ப்பது, எழுத்துப்பேறு இடைவிரவிவருவது, சாரியைப் பயன்பாடு யாவும் தமிழ்ப் பண்புகளாகும். இவற்றில் உயிரொலிகள் சற்றுக்கூடுதலாக அமையும். சுந்தர் – தமிழில் சுந்தரம் ஆவார். கமல் தமிழில் கமலன் ஆவான்; அல்லது கமலி, கமலம் ஆவாள். ஜல் தமிழில் சலமாகும். வடநாட்டில் 'ஜனதாதள்' என்பதை இங்கு 'ஜனதாதளம்' என்றுதானே சொல்கிறோம். சலசல சலம்தான், ஜலமானது

தமிழின் இயல்பு தானாக அமையும், எந்த மொழியிலும் அந்த அந்தப் பண்பு தானாகத்தான் அமைகிறது. வலிந்து செயற்கையாகச் செயல்படும் போதுதான் சிக்கல்கள் தோன்றுகின்றன.

**ஈஸ்வரி ஈசுவரியாய்த் தமிழைக் காக்கின்றாள்**

பாவூர்ச்சத்திரம் வைத்தீஸ்வரியின் மேலும் பல வினாக்களுக்கு இம்முறைப்படி சிந்தித்தால் எளிதில் விடை கிடைத்துவிடும். 'சிவன் பாண்டியனா, சிவனுபாண்டியனா' என வினவுகிறார் அவர். சிவன் பாண்டியன் என்பதே பெயர். பேசும் போது சிவனுபாண்டியன் என்று கூறி, அதுவே நிலைத்து விட்டது. சிவன், திருமால் என்ற முழுமுதற் கடவுளரின் பெயர்கள் தெற்கே போகப் போகப் பரவலாகக் காணப்படுகின்றன. 'ராம் கிருஷ்ண' தமிழில் எவ்வாறு அழைக்கப்படுவார்? 'இராமகிருஷ்ணன்' என்றே அழைக்கப்படுவார். இராமகிருட்டிணன் என்பதே முழுமைத் தமிழாக்கம். அர்ஜுன் தமிழில் அருச்சுனன் ஆவதில் இம் மாற்றமெல்லாம் இருப்பதை எண்ணிப் பாருங்கள்.

புவனேஸ்வரி – புவனேசுவரி, மங்களேஸ்வரி – மங்களேசுவரி, வடிவீஸ்வரம் – வடிவீசுவரம், யோகீஸ்வரன் – யோகீசுவரன். இவற்றில் 'எது சரி' என வைத்தீசுவரி கேட்கிறார். வைத்தீசுவரியே தமிழாக்கம்.

முதலில் உள்ளனவற்றில் காணப்படும் வடமொழிச் சாயல் அவற்றுக்கு எதிரே உள்ளனவற்றில் தமிழாக்கம் பெற்றுள்ளன. ஈஸ்வரி தமிழ் இயல்புப்படி ஒலித்துணை உகரம் பெற்று அவள் 'ஈசுவரி' யாய்த் தமிழாக்கம் பெறுகிறாள். வடிவீசுவரம் என்பது கோயிலின் பெயர். கல்வெட்டுகளில் 'வடிவீச்சுரம்' என்று இவை மேலும் தமிழாக்கம் பெற்றுக்காணப்படும். ஈஸ்வரன் கோயில் ஈசுவரன் கோயிலாகி, ஈசுவரமாகி ஈச்சுரம் ஆகும். தஞ்சைப் பெரிய கோயில், அதனைக் கட்டிய சோழப் பெருவேந்தன் பெயரால் 'இராசராசேச்சுரம்' என அழைக்கப்பட்டது. குடந்தையிலுள்ள நாகேஸ்வரர் கோயில் திருநாகேச்சுரம் எனப்பட்டது. ஒலித்துணை உயிர் சேர்வதால் வருவனவே புவனேசுவரி முதல் மகேசுவரி வரை! அவ்வம் மொழி இயல்புகட்கேற்ப இம்மாற்றங்கள் தாமாக ஏற்படுகின்றன.

தமிழைப் பேசும்போது தமிழாகவும் ஆங்கிலத்தைப் பேசும்போது ஆங்கிலமாகவும் சமஸ்கிருதத்தை அதனியல்புப்படி உச்சரிப்புப் பிசகாமலும் பயன்படுத்துவதுதான் உயரிய நடைமுறை. நம் பெயர்களை ஆங்கிலேயர் ஆங்கில மரபுப்படியும் பிரெஞ்சுக்காரர் பிரெஞ்சு மரபுப்படியும்தான் மாற்றித்திரித்தனர்! மதுரை மெசுரா ஆயிற்று. திருநெல்வேலி – டின்னவேலி ஆனது. புதுச்சேரி பாண்டிச்சேரி ஆன கதையும் அதுதான்!

### எழுத்துப்பேறு - 'உயிர்' பெறுதல்

செல்கிறது – செல்லுகிறது. உகரப் பேறு எளிமை கருதிய பேச்சுநடை. சொல்கிறது – சொல்லுகிறது, கேட்டுக் கொள்கிறோம் – கேட்டுக் கொள்ளுகிறோம் என்பனவும் காண்க. சாதாரணமாக அவர்க்கும், அவருக்கும் அவர்கட்கும் அவர்களுக்கும் என்ற வடிவ மாற்றங்களில் உகரப்பேறு காணலாம். 'பிரச்னை' யைத் தமிழாக்கும் போது, 'அகரப் பேறு 'பிரச்சனை' ஆக்கும்; இகரப்பேறு பிரச்சினை ஆக்கும். எழுத்துப்பேற்றுக் கேற்பத் தமிழ்வடிவம் அமைவதால் இரண்டும் சரியே. சுதந்தரா – அகர எழுத்துப்பேற்றால் சுதந்தரமாகும்; இகரப் பேறுற்றால் சுதந்திரமாகும். இரண்டும் தவறல்ல. "தினம்தினம் தாம் அனுபவிக்கும் சுதந்தரம் தந்தநம் முன்னோர் நொந்த புண்எண்ணிச்

சிந்தை அன்புருகிச் சிந்துவர் கண்ணீர்'' (மனோன்மணீயம் 4–1–155; 57) என நன்றியுள்ள நாட்டுமக்களைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை படம் பிடித்தார். 'சுதந்திர தேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே' என்றார் பாரதியார் (தேசிய கீதங்கள் 29).

**ஊருணியா, ஊரணியா?**

ஊருணிதான் முறைப்படி அமைந்த சொல். திருவள்ளுவரும் 'ஊருணி நீர்நிறைந்தற்றே' (215) என்றார். 'ஊர் உண்கேணி' என்பது குறுந்தொகை (399). இன்று அதை 'ஊரணி' என்றது, பேச்சு வழக்கிலேற்பட்ட பிழைபாடுதான் என்றாலும், குடிநீரல்லாத குளங்களை வெறுமனே ஊருக்கு அழகு தருவன என்ற பொருளில் 'ஊரணி' என்றால் என்ன? ஆனாலும் அவை கற்றறியாதார் வாய்மொழியாக இருப்பதால், பிழைபடவும் வாய்ப்புகள் மிகுதி. எனவே பேச்சு வழக்குகளைக் கற்றவர்கள் ஆளும்போது, ''குற்றங்களைந்து குறைபெய்து பயன்படுத்துதலே, கற்றறிந்த மாந்தர் கடனாகும்''. ஊருணியே – எழுத்தில் இருக்கட்டும்.

*தினமணி சுடர் : 30.6.1990*

✧ ✧ ✧

# 2. தமிழ் ஒரு 'கட்டமைப்புள்ள' மொழி

தமிழில் ஒரு கட்டமைப்பு இருக்கிறது. எந்த மொழிக்கும் ஒரு வடிவமைப்பு இருக்கும். ஆயினும் தமிழில் கட்டுக்குலையாத கட்டமைப்பு – காரண காரியத்தோடு கூடிய கட்டமைப்பு – இருக்கிறது. தமிழில் ஒரு சொல் உண்டு. 'கட்டழகி' என்று! கட்டழகன், கட்டழகி என்பன பேச்சு வழக்குத்தான் என்றாலும், அதிலுள்ள நுட்பம் உணரத்தக்கது.

சிவப்பாக இருந்தால் போதுமா? உடல் திடமாக அமைந்து அவ்வவ்வுறுப்புகள் எந்த அளவினவாக இருக்க வேண்டுமோ அந்த அளவிலமைந்து, முழுமையிலும் அழகுடைமையை 'ஏர்', 'எழில்', 'சாயல்', 'வனப்பு' என்ற நான்கு சொற்களால் தமிழர்கள் குறித்தனர். அவை இலக்கியச் சொற்கள். மிக நுட்பமான பொருள் வேறுபாடு உடையவை என்பதை உரையாசிரியர்கள் விளக்கத்திலிருந்து அறியலாம்.

ஏர் – 'தளிரின்கண் தோன்றுவதோர் பொலிவுபோல, எல்லா உறுப்பினும் ஒப்பக் கிடந்து, கண்டார்க்கு இன்பத்தைத் தருவதோர் நிற வேறுபாடு. இது எல்லா வண்ணத்திற்கும் பொது'. **இளம்பூரணர்** கூறும் இவ்விளக்கங்கள் மிகவும் கூர்ந்து சிந்திக்கத்தக்கன. புது மணமக்களிடம் – அல்லது வறுமையில் உழன்று பிறகு புதுப்பணக்காரர் ஆனவரிடம் – தளதளவென்று, அவர் தம் இயல்பான நிறத்திலேயே ஓர் ஒளி தோன்றி, களையான முகத்துடன் காட்சியளிப்பதைப் பார்த்திருக்கலாம். தளிரும் பயிரும் பூரித்துவரும் போது தோன்றும் பொலிவு போன்ற ஓர் ஒளிவண்ணம் அது.

எழில் – அழகு. 'அது மிக்கும் குறைந்தும் நீடியும் குறுகியும் உயர்ந்தும் மெலிதாகியும் வலிதாகியும் உள்ள உறுப்புகள் அவ்வளவிற் குறையாமல் அமைந்தவழி வருவதோர் அழகு. இவ் அழகினைப் பிரித்துச் சுட்டிக் காட்டல் இயலாது'. சிலருக்கு நெற்றிமட்டும் மிக அகலமாக

இருக்கும். சிலர் மூக்கு மிக நீண்டு போயிருக்கும். சிலருக்கு வாய் அகலமாக இருக்கும். சிலரது பற்கள் உள்ளடங்கியிருக்காமல் வெளிப்பட்டுத் தோன்றும். உறுப்புகள் அனைத்தும் அளவாக அமைவதால் ஏற்படும் மொத்த அழகையே 'எழில்' என்றனர். அவை காண்பார்க்கு எழுச்சி தரும் அழகாகும். 'அவள் எழிலுடையாள்' என்றால் காண்பதற்கு இளிமையுடையவள் என்பது பொருள். ஏர் முதலிய இவை அனைத்தும் முழுமையில் தோன்றும் அழகு பற்றியன.

சாயல் என்பது 'மென்மை'. அது மயிலும் குயிலும் போல்வதோர் தன்மை'. 'மயில் போன்ற சாயலுடையாள்' என வருணிப்பதுண்டு. அதுவும் ஒரு முழுமையழகு. இச்சாயலழகை 'ஐம்பொறிகளால் நுகரப்படும் மென்மை' என்று **நச்சினார்க்கினியர்** கூறுவார். உறுப்பு நலனிலும் சாயலழகால் மட்டுமே மனங்கவர்வார் பலர். எனவே இவை சிறு வேறுபாடுடையன.

'வனப்பு' என்பதற்குப் **பேராசிரியர்** 'உறுப்புகள் அனைத்தும் திரண்டவழிப் பெறுவதோர் அழகு' என விளக்கம் தந்தார். சிலை, சிற்பம் முதலியனபோல மனங்கவரும் ஆளுமையைத் தருவதே வனப்பாகும். சிலர் எழிலுடையவராக இருப்பர். அவர்கள் உறுப்புகளின் வழி அமைந்த அழகுடையவர்; உறுப்புகளை மறந்து விட்டு அதற்கப்பால், அவற்றின் கட்டமைப்பால் பெறுகிற அழகே வனப்பாகும். தமிழ்மொழியில் ஏர், எழில், சாயல், வனப்பு – எனும் நான்கு வகைப் பெயர்களும் ஒத்துவருமாறு சொற்களும் தொடர்களும் உள்ளன. இதனை ஒவ்வொரு சொல்லை வைத்தும், தொடரைவைத்தும் நூற்றுக்கணக்கில் விளக்கலாம். எம்மொழிக்கும் இல்லாத 'செவ்வியல் அழகுகள்' தமிழுக்கு உண்டு.

தமிழில் மகளிரை வடிவு, வடிவுக்கரசி எனப் பெயரிட்டு அழைப்பர். இந்த வடிவம்மையை, வடிவம்மாளை, வடிவாம்பாள் எனச் சிறிது மாற்றிவிட்டால், பிராமணருக்கு ஒரு மகிழ்ச்சி. தமிழ் மொழி வடிவமைப்புடையது; தமிழன்னை சொற்களின் கட்டமைப்பில், ஒரு வடிவுக்கரசியே. அம்பாளும் நம் அம்மையிலிருந்து வந்தவளே.

### கட்டமைப்பும் ஓர் அழகு

'கட்டழகு' என்பது இத்தகைய வனப்பேயாகும். தமிழின் கட்டமைப்பு அழகானது, எளிமை நோக்கியது, பிற மொழிகள் பலவற்றினின்றும் வேறுபட்டது. சமஸ்கிருதத்தில் சந்த இனிமை அதன்

பலவகை நீர்மைகளில் தலைமையானது. வருக்க எழுத்துக்களால் உச்சரிப்புக் கடினம். அதுவே அதற்கமைந்த தனித் தன்மையாகத் திகழ்கிறது. ஏற்ற இறக்கத்தோடு, உச்சரிப்புப் பிசகாமல் கூறப்படும் வடமொழிச் சுலோகங்களைத் தமிழில் எழுதி உச்சரிப்பது, இரு மொழிக்கும் கேடு; வட மொழிக்கே பெருங்கேடு. ஆங்கிலம் நெளிவு சுளிவுமிக்க உரையாடலுக்கு ஏற்ற எவ்விதக்கருத்தையும் கூர்மையாகவும் திட்ப நுட்பத்தோடும் வெளிப்படுத்த வல்ல – கருத்துத் தொடர்பு மொழியாகிவிட்டது. தமிழ் கட்டமைப்பு மிக்க மொழி. அதன் 'சாயல்' அழகு மிகமிக மென்மையானது. 'கன்னித்தமிழ்' ஆதலாலேதான் தமிழுக்குக் 'காப்பு' ணர்ச்சியும் தேவைப்படுகிறது.

**தமிழச்சாதி**

பொதுவாக மொழிகள் பல உறுப்புகளை விட்டுவிட்டு (Droppings) வரவரக் குறைந்து போகும் இயல்பினால் எளிமைப் படுவன. தமிழ் கூடுதலாக உறுப்புகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் எளிமை நோக்குவதே பெரும்பான்மையாகும். யார் என்பதிலிருந்து வரும் யார்க்கும் என்பதை 'யாருக்கும்' என்று கூறுவதிலேதான் எளிமை தோன்றுகிறது. 'பார்' (பூமி) என்பதிலிருந்து, 'பார்க்குள்ளே' என்றால் போதாதா? 'பாருக்குள்ளே நல்ல நாடு' என்பதே நம் மரபாகும். 'புளியம் பழம்' எனக் கூடுதலாக ஓர் 'அம்' சாரியை சேர்ப்பதிலே ஒரு தனி இன்பம். தமிழ்ச் சாதியை 'விதியே விதியே தமிழச் சாதியை, என்செய நினைத்தனை?' என்று, பாரதியார் பாடுவதுபோல், ஓர் அகரம் இடையிலே சேர்த்துத் 'தமிழச்சாதி' என்றால்தான் நம் மனம் மகிழ்கிறது.

**கட்டிடக் கலையும் கட்டமைப்பு மொழியும்**

சிறு குழந்தைகளிடம் கட்டிடக் கலை விளையாட்டுக் கருவிப் பெட்டி ஒன்றைத் தந்து பாருங்கள். அதிலுள்ள பலவித அட்டைகளை வண்ணவண்ணமான சிறுசிறு கட்டைகளை, அவர்கள் அடுக்கி அடுக்கி, மாட மாளிகைபோல், கூட கோபுரம் போல் கட்டி அழித்து, மறுபடி வேறுவிதமாகக் கட்டி இவ்வாறு மகிழ்வர். இந்தக் கட்டிட விளையாட்டு அடுக்குகள்போல் தமிழில் சொற்களும் அதன் உறுப்புகளும் விளங்குகின்றன.

அறிஞன், கலைஞன், கொடைஞன், வறிஞன், பகைஞன் – இவ்வாறு 'ஞ்' என்ற பெயரிடைநிலையுள்ள சொற்கள் நூற்றுக்

கணக்காகும். பகுதி எனப்படும் முதனிலை மாற்றத்தால் மட்டும் இவை வெவ்வேறு சொற்களாக அமைகின்றன.

**தமிழ்ச் சொற்கள் உருவாகும் நெறிமுறைகள்**

'பார்க்கிறான் கேட்கிறான் போகிறான் படிக்கிறான் அழுகிறான் தொழுகிறான் எழுகிறான்' – இவற்றில் இடையில் வரும் ஒரே மாதிரியான 'கிறு' என்ற இடைநிலையால் இவை ஒரு தன்மைப்படுகின்றன. பார்க்கின்றான், கேட்கின்றான், போகின்றான் என இவை அனைத்தையும் மாற்றினால் 'கின்று' இடைநிலை எதிரொலிக்கும். பார்க்கின்றனன், கேட்கின்றனன், போகின்றனன் என இவற்றை மேலும் மாற்றினால் 'கின்று' இடைநிலையுடன் 'அன்' சாரியை ஒலியும் சேர்ந்திசைக்கும். பார்த்துக் கொண்டான், கேட்டுக்கொண்டான், எடுத்துக்கொண்டான், தெரிந்துகொண்டான், அறிந்து கொண்டான் போல்வனவற்றில் கொள் – கொண்டான் என்ற துணைவினைப் பயன்பாட்டால் அவை ஒரு தன்மைப்படுவதைச் சுட்டிக் காட்டலாம். பார்த்தேன். பார்க்கிறேன், பார்ப்பேன், பார்த்தல், பார்வை, பார், பார்த்து, பார்த்த, பார்த்தனை, பார்த்தனன், பார்த்திலன், பார்த்தவன் என இவ்வாறு பார் என்ற அடிச்சொல்லுடன் வெவ்வேறு உறுப்புகளைச் சொல் சிதைவு இல்லாமல் பிரித்து எடுக்கலாம். அவற்றின் பெயரையும் பயன்பாட்டையும் காரண காரியத்தோடு விளக்கலாம். நட – நடக்கல் – நடை – நடப்பு – நடத்தை – நடத்தல், நடத்துதல் – நடக்கை – நடம் – நடர் – நடமாடி – நடனம் – நடமாடுதல் – நடந்தேறல் – நடவடிக்கை – நடமாட்டம் – இவ்வாறும் இன்னும் கூடுதலாகவும் மிகப் பல சொற்களை உருவாக்குவர். ஒவ்வொன்றும் தனிப் பொருளுடையன.

நட, நடக்கல், நடை, நடையாளர் கழகம் – காலால் நடப்பன. நடத்தல், நடத்துதல் – ஒரு நிகழ்ச்சியை நடத்துதல்.

நடப்பு – நடப்புக் கணக்கு (Current Account). இக்கால நடப்பு ஒருவிதம். நடத்தை, நடக்கை – ஒழுக்கம், ஒருவரது இயல்பு, பண்பு.

நடம், நடன், நடர், நடமாடி, (சிவன்) நடனம் – இவை நடனமாடுதல் பற்றியன

நடமாடுதல் – உலாவுதல். நடமாட்டம் – ஆள் நடமாடுதல். மிகப்பல சொற்கள் உருவாவதை, இவ் அடிச்சொற்களைக் கொண்டு, இவற்றின்

பொருளும், இலக்கணமும் விளங்கும்படி சொன்னால் பிள்ளைகள் மனத்தில் படியும். (காண்க : தமிழ்ச்சொல்விளையாட்டு, இந்நூலாசான் எழுதியது) மகிழ்நன், பொருநன், பாடுநன், வாழ்நன், நடத்துநன், ஓட்டுநன், இயக்குநன் – என இவ்வாறு வருவன வினையாலணையும் பெயர்கள் அல்ல. இவை வினைவழிப் பெயர்களாகப் பயன்படுகின்றன. ஓட்டுநன் என்றால் 'ஓட்டுகிறவன்' எனச் சுட்டாமல், ஓட்டுபவன் பற்றிய பொதுப் பெயராகப் பயன்படுகிறது. தமிழில் இங்ஙனம் 'நகர இடைநிலை வருவது அரிதாகும்', 'இடையன், கடையன், உடையன், நடையன், விடையன், மடையன், கிடையன், குடையன்' எத்தனை சொற்களை இங்ஙனம் தலை எழுத்தை மாற்றியே உருவாக்கலாம் என எண்ணிப் பாருங்கள். கட்டிடக் கலைக் கட்டைகளை மாற்றி மாற்றி அடுக்கி, வெவ்வேறு வடிவங்களை உருவாக்கியது போலத் தமிழ்ச் சொற்கள், உறுப்புகளை, எழுத்தை மாற்றுவதன் மூலம் மாறி மாறி அமைகின்றன. அதனால்தான் பாரதியார் 'சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே, அதைத் தொழுது படித்திடடி பாப்பா' என்றார். அதாவது தொடக்கக் கல்வியிலேயே, இத்தகைய இலக்கணங்களை, இலக்கணம் என்று தோற்றாமலே, மாணவர்கள் மனத்தில் பதிவிக்க, நாம் நூற்றுக்கணக்கான பாடமுறைகளைக் கண்டுபிடித்துச் செயற்படுத்த வேண்டும். எங்கே? பள்ளிகளில் தமிழே இடம்பெறாத போது, இதைப்பற்றி எண்ணுவது 'அதிகப்பிரசங்கித்தனம்' அல்லவா?

*தினமணி சுடர் : 14.7.1990*

✧ ✧ ✧

# 3. சாரியைகளின் பயன்பாடு

தமிழ்சொற்கள் நான்கு வகைப்படும். பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்பன அவை. இவற்றுள் உரிச்சொற்கள் அரிய சொற்கள்; சால, உறு, தவ என்பன போல அடைமொழிகளாக வருவன; செய்யுளில் பெரிதும் இடம்பெறுவன; அடிச்சொற்களாக நின்று பல சொற்களை உருவாக்குவன.

பெயரும் வினையுமே முதன்மையானவை. ஆனால் அவை தனித்தனியே நின்று பயனில்லையே. அவற்றினிடையே வந்து அவற்றை இயக்குவன இடைச்சொற்களே.

முருகன், பார்த்தேன் – தனித்தனி நிற்பன. முருகனைப் பார்த்தேன்; முருகனால் பார்த்தேன்; முருகனுக்குப் பார்த்தேன்; முருகனிடமிருந்து பார்த்தேன்; முருகனிடம் பார்த்தேன் – இவ்வாறு வரும் ஐ, ஆல், கு, இருந்து, இடம் போலும் உருபுகள் இடைச்சொற்கள்.

இடைச்சொற்கள் வேற்றுமை உருபுகள், உவம உருபுகள், வினைச்சொல் உள்ளுறுப்புக்களாகிய விகுதி, இடைநிலை, சாரியை முதலியன, இசைநிறை, அசை நிலை என்பன என இவ்வாறு பலவகைப்படும். இடைச் சொற்கள் தனித்துநின்றால் பொருளில்லை. பெயர், வினைகளைச் சார்ந்து, அவற்றிடையே முன்னும் பின்னும் இடையிலும் வந்தால்தான் பொருள் வேறுபாட்டுக்கு உதவும்.

இங்கு சாரியை பற்றிச் சிந்திப்பது போதும். சார்ந்து வருவது சாரியை. இது எதற்கு வருகிறது? சொற்களை முழு வடிவாக்க வருகிறது. அதனுடன் பொருளுணர்ச்சிக்கும் சிறிதளவு துணை நிற்கிறது.

சாரியை பற்றிச் சுருக்கமாகச் சொன்னால், அவை 'ஒட்டுதற்குரிய வழக்கொடு சிவணி, சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது' – (தொல் 132) என்ற தொல்காப்பியப் பகுதிமட்டும் தெரிந்தால் போதும். பெயரும் வினையும் தனித்தனி நின்றும், இரண்டும் சேர்ந்து தொடராக நின்றும் நடக்குமிடத்து, அச்சொற்களை ஒட்டுதற்கு (இணைப்பதற்கு), உலக வழக்கில் ஓர் எழுத்தையோ, சாரியையோ இடையில் சேர்த்துக் கூறுவர். அவையே சாரியைகள் ஆகும். அச்சொற்களைப் பிரித்து, தனியே சொன்னால் சாரியைக்குப் பொருள் இல்லை. மரம் + ஐ = மரத்தை. இதில் மரம் + அத்து + ஐ = இடையே 'அத்து' வந்துளது. தனியே 'அத்து' என்பதற்குப் பொருளில்லை. மரமை – தமிழ்ச்சொல் வடிவாகாது. இவ்வாறு ஒட்டுதற்கு வருவன, வேற்றுமைத்தொடர், அல்வழித் தொடர்ப் புணர்ச்சிகளிலும், தனிச் சொற்களிலும் எழுத்து, சாரியை ஆகிய இரண்டில் ஒன்று வந்து சொல்லை அல்லது தொடரை நிரப்பும்.

பொதுவாக இவற்றை நாம் இக்காலத்திற்கு ஏற்ப விரிவு படுத்தலாம். இவை ஒலித்துணையாக வருவன. ஒலித்துணை உயிர்களாக அ, இ,உ மூன்றும் அடிக்கடி வரும்.

குற்றியலுகரமாயினும் முற்றியலுகரமாயினும் அவை சொற்களை எளிமைப்படுத்த வரும் 'ஒலித்துணை உயிர்களே'.

பாக் – பாக்கு, விளக் – விளக்கு – இவ்வாறே குற்றுகரம் வருகின்றது. முற்றியலுகரமெனக் கூறப்படும் களவு, பசு, நடு, பாவு – என்பனவற்றிலும் 'உகர' முடிவு எளிமையே தருகிறது. கல் – கல்லு, புல் – புல்லு, கண் – கண்ணு – இவ்வாறு உகரப்பேறு ஏன்? நடைமுறையில் என் கண்ணு, இது புல்லுக் கட்டு, கல்லுக்குள் ஈரம் என்பன ஏன்? என் கண், இது புல் கட்டு (புற்கட்டு), கற்குள் ஈரம் – எனல் போதாவா? இங்கெல்லாம் உகரப் பேறு ஏன்?

பாக்கெட் – பாக்கெட்டு, கரெக்ட் – கரெக்டு/ பேட் (Bat) – பேட்டு, வாட்ச் – வாட்ச்சு – இவ்வாறு வல்லொற்றாக முடியும், பிறமொழிச் சொற்களை, உகரம் சேர்த்தே இயல்பாக ஒலிப்பர். அர்த்தம் – அருத்தம் ஆனால், தமிழ்வடிவாதலுக்கும் இதுவே அடிப்படை.

பர்வ – எனும் கன்னடப் புதினம் பருவம் எனத் தமிழில் பெயரிடப் பெற்று, மொழியாக்கம் பெற்றுள்ளது. தமிழில் பருவம் என்பதே, அங்கு பர்வ ஆகிப்போய்த் திரும்பப் பருவம் ஆகித்தமிழில் வெளிவந்துள்ளது (பைரப்பா எழுதிய பர்வ – கன்னட நாவல், தமிழில் பாவண்ணனால் பருவம் என மொழியாக்கம் பெற்றுளது. சாகித்திய அக்காதெமி வெளியீடு 2002).

இடைச்சொல் ஆய்வு, தமிழ்ச்சொற்கட்டமைப்பு ஆய்வாக முடியும். அதில் எழுத்துப் பேறும் சாரியைகளும் 'ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கினவாய்', சொல் வடிவத்தை எளிமைப்படுத்தித் தரும். ஒலிப்பதற்கு எளிமையும் இனிமையும் கொடுக்கும். பிறமொழிச் சொற்களைத் தமிழ்வடிவப்படுத்த, இவையே பெரிதும் உதவும்.

✧ ✧ ✧

# 4.ஙப் போல் வளை

ஔவையார் சிறு குழந்தைகள் மனத்தில் பதியவேண்டும் என்றே ஆத்திசூடியைப் பாடியுள்ளார். உயர்ந்த கருத்துக்கள் உடனே முழுவதும் விளங்காவிட்டாலும் மனத்தில் கிடந்து ஊறினால், பிற்பாடு நன்மைகள் விளையும் என அவர் எண்ணியிருக்கிறார். எழுத்துப் பயிற்சியும் சொற்பயிற்சியும் பெறும் பள்ளிப் பிள்ளைகளிடம் அவர் தமிழ் எழுத்துவரிசையை வைத்து, நீதிபோதனை செய்ய முயன்றது, புதிய சீரிய முயற்சியாகும். அவற்றுள் ஙப் போல் வளை என்பது, இலக்கணத்தை அடிப்படையாக வைத்தும் ஒரு நீதிக் கருத்தை விளக்கமுடியும் என்ற அவரது சிறந்த சிந்தனையின் விளைவாகும்.

சிலர் இதற்கு ஙகரம் வளைத்து எழுதப்படுவதுபோல், பணிவுகாட்ட வேண்டும் என்று வேடிக்கையாகப் பொருள் கூறிச் சிரிக்கவைப்பதுண்டு. ஙகர வருக்கம் ங,ஙா என இவ்வாறு பன்னிரண்டு உயிர்மெய் வடிவங்களைக் கொண்டது. 'ங்' என்ற மெய்யொலி ஒன்றே பயன்படுகிறது. மங்கை, தங்கை, பழங்காலம் எனவரும். ங் தான்மட்டும் பயன்பட்டு, தன்னை ஒட்டிய பன்னிரண்டு உயிர்மெய்களையும் தமிழ் நெடுங்கணக்கில் வாழவைக்கிறது. 'அது போல் நீ உலகிற்குப் பயன்பட்டு, உன் வருக்கத்தை உலகம் போற்றுமாறு செய்'. 'வளை' என்றால் தன்னைச் சார்ந்துள்ள உயிர்மெய் வருக்கத்தை – அவை பயன்படாவிடிலும் காப்பாற்றுவதுபோல, நீயும் உன் சுற்றத்தைக் காப்பாற்று என்பதாம். திருவள்ளுவர் 'சுற்றந் தழால்' (53) என ஓரதிகாரத்தில் கூறியதையே, இவர் அரையடிக்குள் சுருக்கிக் கூறியுள்ளார். அவர் 'தழுவுக' என்றதை, இவர் 'வளை' என எளிமைப்படுத்தியுள்ளார். அருட்தந்தை வி.மி. ஞானப்பிரகாசம் வீரமா முனிவர் உரை ஒன்று கூறியதை, நினைவுபடுத்தினார். இதன் பின்னிணைப்பில் காண்க.

## மெய்யெழுத்து ஆத்திசூடி

முதல் பன்னிரண்டும் உயிர் எழுத்து வரிசையிலானவை. இவற்றை (அறம் செய விரும்பு. ஆறுவது சினம்) உயிரெழுத்து சூடி எனலாம். அடுத்து மெய்வரிசைக்கு முன்னதாக ஆய்த எழுத்தை வைத்துள்ளார். ஆய்த எழுத்து மொழிக்கு முதலில் வராது. என்ன செய்வது? 'அஃகம் சுருக்கேல்' என்று, ஆய்த முதல் எழுத்து சூடி அமைகிறது. இன்றும் தனித்து உச்சரிக்க முடியாத ஆய்தத்தைப் பிள்ளைகள் சொல்வதில்லையா? ஆய்தமும் 'மெய்' யெழுத்துப் போன்றதே. அதை உச்சரிக்க இயலாது. அ – என உயிர் சேர்த்து 'அஃகன்னா' என்பர். அந்நெறியைப் பின்பற்றுகிறார் ஔவையார். தானியத்தை விற்கும் பொழுது அதன் அளவைச் சுருக்காதே என்பது இதன்பொருள். அஃகம் என்பது தானியத்தையும், பொதுவாக விலைக்கு விற்கும் பொருளையும் குறிக்கும். இன்று விலைக்கு விற்கும் பொருள்களின் அளவையும் தரத்தையும் குறைப்பதே அன்றாட வாடிக்கையாக இருக்கிறது. இந் நிலையில் 'அஃகம் சுருக்கேல்' என்ற அறிவுரை இன்று எவ்வளவு இன்றியமையாததாகிவிட்டது என்பதை உணர்கிறோம். இனிமேல் நம் நியாயவிலைக் கடைகளில் கூட 'அஃகம் சுருக்கேல்' என்று பலகையில் எழுதிப்போட்டால் பயன்படுமல்லவா?

இனி மெய்யெழுத்து ஆத்திசூடிகளைப் பார்ப்போம். தமிழில் மெய்யெழுத்துக்கள் மொழிக்கு முதலில் தனித்து வருவதில்லை. உயிருடன் கூடியே வரும். கடவுள் என்பதில் 'க்' என்பதே மொழி முதலில் நிற்கிறது. (க் + அ = க) எனினும் அது உயிருடன் கூடியே முதலில் வரும். மெய்யெழுத்தைப் புள்ளியிட்ட க, ங, ச, ஞ எனலாம். அல்லது இக், இங், இச், இஞ் – என முதலில் உயிர் 'இ' சேர்த்தே சொல்ல முடியும். இதனால் பள்ளிப் பிள்ளைகள் எளிமைக்காக இக்கன்னா, இங்கன்னா, இச்சன்னா, இஞ்சன்னா – என்று முறைவைத்து, மணலில் எழுதி விளம்பிப் பழகும். பிள்ளைகளுக்கு அறநூல் பாடிய ஔவையார், அப் பிள்ளைகள் வழக்கையே, எள்ளாது இகழாது பின்பற்றுவது, அவரின் குழந்தை உள்ளத்தைக் காட்டுகிறது.

க் – கண்டொன்று சொல்லேல். (க் + அ) க் முதலில் உளது
ங் – நப்போல் வளை (ங் + அ) ங் முதலில் உளது
ச் – சனிநீராடு (ச் + அ) ச் முதலில் உளது.
ஞ் – ஞயம்பட வுரை (ஞ் + அ) ஞ் முதலில் உளது.

இப்போது ஒரு சிக்கல் வருகிறது. இதற்கு அடுத்த மெய்கள் ட், ண் – என்பன. இவை மொழிக்கு முதலில் வாரா. என்ன செய்யலாம். பிள்ளைகள் இட்டண்ணா, இண்ணன்னா – என உச்சரிப்பதை நினைக்கிறார்; வழிபிறக்கிறது.

இட் – இடம்பட வீடு எடேல். 'இட்' என – ட் மெய் முதலில் வரப் பாடிவிடுகிறார்.

இண் – இணக்கமறிந்து இணங்கு. முதலில் 'இண்' உளது – அதன்படி 'ண்' மெய் முதலில் வருகிறது.

இவ்வாறு மொழிக்கு முதலில் வரக்கூடியவற்றுக்கு, அந்தந்த உயிர்மெய்யை வைத்தும், முதலில் வாராதவற்றுக்கு இய், இர், இல், இழ், இள், இற், இன் – என இகரம் சேர்த்தும் முதலாக அமைத்துப் பாடிவிடுகிறார். இவற்றை (இ) ய், (இ) ர் – என இவ்வாறு அறிதல் வேண்டும்.

'மெய்' களை ஒலிப்பதற்கு, எவ்வாறேனும் 'உயிரின்'துணை வேண்டும். இத்தனை நெறிமுறைப்படி உயிர், மெய், உயிர்மெய் எனப் பெயரிட்டதையும், அவற்றைக் குறில், நெடில், மூவினம், உயிரும் மெய்யும் சேர்ந்த வடிவம் – என மிக்க அறிவியல் திறனுடன், காலத்தால் அழியாதபடி வரிசைப்படுத்தியதையும் எண்ணி வியக்க வேண்டும்.

இந்த அகர வரிசையைக் கற்காமல், கற்பிக்காமல் மூன்று அகவை முடிந்ததும் சேரும் பிள்ளைகளுக்கு, ஆங்கில எழுத்தையே கற்பித்து அழிவு தேடும் ஆணை பிறப்பித்த அரசுகளும் பள்ளி வணிகர்களும் தாமும் தம் குடியும் சுற்றமும் அழிந்து ஒழியவே வினை விதைக்கிறார்கள். 'கொதியழல்சீற்றம் கொங்கையின்' விளைத்து, மதுரையை எரித்தாள் கண்ணகி, தமிழன்னை 'கொதியழற் சீற்றத்தை' நெஞ்சினில் விளைத்து, இக் கொடுமையை அழித்து ஒழிப்பாள் என்பது உறுதி.

கண்டொன்று சொல்லேல் (க்). ஙப்போல் வளை (ங்). சனி நீராடு (ச்). இடம்பட வீடெடேல் – இதில் 'ட்' மொழி முதலாகாது என்பதால், 'இட்' என வருமாறு, 'இடம்பட' எனத் தொடங்கியுள்ளார். ண் என்ற மெய்க்கு இணக்கமறிந்திணங்கு என்றும், ல் என்ற மெய்க்கு இலவம் பஞ்சில் துயில் என்றும் 'ன்' என்பதற்கு அனந்தலாடேல் என்றும் பாடியுள்ள அழகு அனைத்தும் இலக்கண உணர்வோடு சிந்திக்க வேண்டியனவாகும். இக், இங், இச், இஞ், இட், இண், இய், இர், இல் என இவ்வாறு மெய்களை

உச்சரிக்கும் முறையை நினைவிற் கொண்டு, ஔவையார் மெய்சூடிகளைப் பாடியுள்ள திறம் குழந்தைகளுக்கு இவை போய்ச்சேர வேண்டும் என அவர்கருதியதை வெளிப்படுத்துகின்றன. சில எழுத்துக்கு அன், அழ் எனவும் உச்சரிக்கலாம் என்று அவர் கருதியுள்ளார்.

**'ங' வுக்குத் தனிச்சிறப்பு**

இவ்வாறு மெய்சூடிகளைப் பாடியவர், 'ங்' என்ற மெய்க்கு மட்டும் தனிச்சிறப்புத் தந்துள்ளார். மொழி முதலாகாத ட், ண் போன்றவற்றுக்கு இடம்பட, இணக்கமறிந்து எனப்பாடியதுபோல, 'இங்ஙனமென' ஏதேனும் ஒரு தொடர் கண்டிருக்க வேண்டும். ஆனால் ஙகர வருக்கத்தின் பயன்பாடின்மை, அவருக்கு மனத்தில் பட்டிருக்கிறது. மேலும் மொழி முதலாகா எனக் கூறப்பட்ட எழுத்துக்கள், தம் பெயர் கூறுமளவில் மொழி முதலாகும் என்ற விதியையும் சட்டென நினைத்துப்பார்த்திருக்கிறார். உடனே 'ஙப்போல்' என்றே பாடிவிட்டார். 'ஙகர எழுத்தைப்போல்' என, இச்சூடி மட்டும் தனித்து நிற்பதை எண்ணிப்பாருங்கள். மெய்களையும் நாம் சாதாரணமாகப் படிக்கும் பொழுது க,ங,ச,ஞ என்றே படிக்க வேண்டியுள்ளது. எனவே 'ஙப்போல்' என்றார். ஙகர – ங் – எழுத்தைப்போல் என்பதாம். இங்கே ஓர் உண்மை புலனாகிறது. ஙப்போல் – ங் + அ = ங – இதில் 'ங்' மெய்யே மொழி முதலாகிறது. 'ஙனம்' என்ற சொல்லை அவர் கருதவில்லை. 'ஙனம் மொழி முதலாம் என்ற நன்னூற் கொள்கை ஔவைக்கு இல்லை' என்பர் **வ.சுப. மாணிக்கம்.** மேலும் அவ்வாறு அறம் சொல்வதிலும், 'ஙப்போல் வளை' என்ற அறமே அவருக்குச் சிறப்பாகப் பட்டிருக்க வேண்டும்.

**ஙனம் தனிச்சொல்லாகுமா?**

ஙனம் என்ற சொல்லில் மட்டும் அகரத்துடன் 'ங்' மொழி முதலாக வரும் என நன்னூல் ஆசிரியர் கூறியுள்ளார். இக் கருத்தை அவருக்கு முன்னரும் யாரும் கூறவில்லை. அவருக்குப் பின்னரும் 'சாமிநாதம்' தவிர, வேறு எந்நூலிலும் இது ஏற்கப்பட வில்லை.

பவணந்தி முனிவர் 'சுட்டு, யா எகர வினாவழி அவ்வை, ஒட்டி ஙவ்வும் முதலாகும்மே' (106) என்று கூறுகிறார். அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், யாங்ஙனம், எங்ஙனம் என்று இவ்வாறு வரும் என்பது அவர்

கருத்து. ஆயினும் 'ஙனம்' என்று எங்கும் யாரும் தனித்து வழங்குவதில்லை. அங்ஙனம் என்றால் அவ்வாறு, அம்முறைப்படி என்று பொருள். சிலர் அங்கனம், இங்கனம், யாங்கனம் எனவும் எழுத, வழங்கக் காண்கிறோம். இன்று சில சமயம் யாங்கனம் என எழுதினால் அதை அடித்துவிட்டு, யாங்ஙனம் என மாற்றி எழுதவும் பார்க்கிறோம். யாங்கனமும் தவறன்று.

பெரும்பாலும் பட்டப்படிப்புக்கான வினாத்தாள்களில் இவை பயன்படுகின்றன. 'சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியமாவது யாங்கனம்?', 'ழகரம் தமிழின் சிறப்பெழுத்தாவது எங்ஙனம்? என இவ்வாறு இன்று வினாக்கள் கேட்கப் பெறுகின்றன.

ஙனம் தனித்துவராமல், அங்ஙனம், யாங்ஙனம் என இவ்வாறு இன்று வினாக்கள் கேட்கப் பெறுகின்றன.

ஙனம் தனித்துவராமல், அங்ஙனம், யாங்ஙனம் என இவ்வாறு சுட்டு, வினாக்களை அடுத்தே வருதலைக் கொண்டு, நன்னூல் உரையாசிரியர்கள் 'முடவன் கோலூன்றி வந்தாற்போல' இச் சொல் வருமென விளக்கியுள்ளார்கள்.

**சொல் வரலாறு**

மரபும் மாற்றமும் எவ்வாறு ஏறி அமைகின்றன என்பதை இச் சொல் வழி ஆராயலாம். ஒலி ஒப்புமை, சொல் ஒப்புமைகளால் நேரும் தவறுகள் களையப்படுகின்றன. எனினும் அவை பலரால் ஒப்புமை ஆக்கமாக ஆளப்படும்போது மாற்றங்கள் மொழியில் ஏறி அமர்கின்றன, தள்ளப்படுதலும் தவறாக ஏறி அமர்தலும் ஒருசேர நிகழவே, மரபும் மாற்றமும் உணரப்படும் இயைபோடு படிவதனால் மொழி வளர்ச்சி பெரும்பிழைக்கு உள்படாது காப்பாற்றப்படுகிறது.

**பழந்தமிழ்**

பழந்தமிழில் ஆங்கனம், ஈங்கனம், யாங்கனம் என்ற சொற்களே காணப்படுகின்றன. 'ஆங்கனம் தணிகுவ யாங்கும்' என்பது நற்றிணை (322). 'ஆங்கனம் பாடிய ஆயிழை' என்பது சிலம்பு (7-47-1). அவ்வாறு என்பது பொருள். ஆங்கு – ஆங்கனம் என வளர்ந்தது. அதுபோல ஈங்கு என்ற சுட்டும் ஈங்கனம் ஆனது. 'ஈங்கனம் செல்க' என்பது புறநானூறு (208). இதுபோல 'யாங்கு' என்ற வினாவும் யாங்கனம் என நீட்சி

பெற்றமைந்த ஆட்சியைக் காணலாம். 'யாங்கனம் ஒத்தியோ வீங்கு செலன் மண்டிலம்' என்பது புறநானூறு (8). 'நீங்குகென்றியான் யாங்ஙனம் மொழிகோ' என்று அகநானூற்றில் (90) காணப்படுகிறது. இது யாங்கனம் என்றுதான் இருந்திருக்க வேண்டும் என்பது எதுகை நடையமைப்பால் நன்கு புலனாகிறது. ஏடெழுதுவோரால் பிழைபட எழுதப்பட்டுள்ளது. **தெ. பொ.மீ.** இதை ஒப்புகின்றார். முத்து சண்முகம் உடனிலை மயக்கம் வாராத தமிழ்மொழி அமைப்பை விளக்கி, ஆங்கனம் என்பதே சரி என விவரித்துள்ளார்.

அங்கனம், இங்கனம், அங்ஙனம், இங்ஙனம் என்ற சொல்லாட்சிகள் பழந்தமிழில் காணப்படாதவை. ஆயினும் எங்ஙனம் மட்டும் காணப்படுவது எங்ஙனம் எனத் தெரியவில்லை. 'எங்ஙனம் ஆளும் அருள்' என்பது திருக்குறள் (251). 'எங்ஙனம் யாங்கறிகோ' என்பது சிலம்பு (7–29–2). ஆங்கனம் சரியென்றால் அங்கனமும் சரியே. ஆங்கு – ஆங்கனம் ஆகலாமெனில் அங்கு – அங்கனம் ஆகலாம்தானே? எடுத்தாளாததால், தவறாகிவிடாது.

**பேச்சு வழக்கு**

அங்ஙனே பார்த்தேன், இங்ஙனே நின்றான் என இன்றும் பேச்சு வழக்கில் அவ்விடமும் இவ்விடமும் சுட்டப்படுகின்றன. பிற திராவிட மொழிகளிலும் அங்ஙன், இங்ஙன் காணப்படுகின்றன. மலையாளத்தில் அங்ஙன், இங்ஙன் பெரு வழக்கின என்பர். இவை சுட்டு முதலாகிய தனிச்சொற்கள் என்பதில் ஐயமில்லை. காலப்போக்கில், பேச்சு நடையில் 'அம்' ஒட்டுப்பெற்று, இவை 'அங்ஙனம்' 'இங்ஙனம்' ஆயின. எனினும் முதலில் இடத்தையும் பிறகு முறையையும் சுட்டும்படியான தனிச்சொற்களாகவே இவை விளங்கின.

'அவனைப் பேர்த்து இங்ஙன் மீட்டுத்தருவாய்' என்பது சிலப்பதிகாரம் (9–38). 'அவனை மீளவும் இவ்விடத்தே கொண்டுவந்து தருக' என்பது பொருள். 'கடைகழிந்து இங்ஙனம் கருதியவாறு' (10–49) என இங்ஙனம் சிலம்பில் இடம்பெறுகிறது. இவ்விடத்தே வரக்கருதியது என்பதே பொருள். சிலம்பில் வட்டார வழக்குகள் இடம் பெற்றுள்ளன. எளிமை கருதிய திருக்குறளிலும் வட்டார வழக்குகளுக்கு இடம்தரும் நெகிழ்ச்சி பல இடத்தும் காணப்படுகிறது.

பவணந்தி முனிவர் காலத்தில் யாங்ஙனம் என்பதும் அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம் முதலியனவும் உலக வழக்கில் பெருகிக்

காணப்பட்டு, எழுத்திலும் ஏறத் தொடங்கியிருக்க வேண்டும். இதனால் அவர் கருத்தை விளக்கவந்த **சிவஞான முனிவர்,** ''தொல்காப்பியர் இதை ஏற்காததன் காரணம் இத் திசைச் சொற்கள் அக்காலத்து தமிழின்கண் இவ்வாறு பயின்று வாராமை பற்றி'' எனக் குறிப்பிடக் காண்கிறோம்.

'ஙனம்' தனிச்சொல்லாகும் தகுதியுடையதன்று. எனினும் நன்னூலார் இலக்கணம் வகுத்துவிட்டதால், பிற்காலத்தே அது ஏற்புடையதாக ஆனதுடன், பழஞ்சுவடிகளைத் திருத்துமளவு போய்விட்டது. ஔவையார் ஙனம் பற்றிக் கவலைப்படாமல் 'ஙப்போல்' என, அந்த எழுத்தையே முதலாக்கி, நீதி கூறிச் சென்றுள்ளார். இன்று நாம் யாங்கனம் என எழுதினாலும், யாங்ஙனம் என எழுதினாலும் ஒரே பொருளென உணரும் நிலையில் உள்ளோம். சிலர் நினைப்பார்கள் 'என்ன ஐயா? இத்தனை போராட்டம்?'' என்று. போராட்டம் என்பது வாழும் மொழிக்கு அடையாளம் என்பதை ஒருகணம் உணர்ந்தால் அவர்கள் மகிழ்ச்சியும் வியப்பும் அடைவார்கள்.

**இணைப்பு**

'ஙப்போல்வளை' என்ற தலைப்பில், முனைவர் தமிழண்ணல் அருமையான கட்டுரை எழுதியுள்ளார். (தமிழ்மணி, அக்டோபர் 12). இந்த ஆத்திசூடிக் கூற்றுக்கு அவர் தந்துள்ள இருபொருள்களோடு மூன்றாவது பொருளையும் சேர்த்துக் கொள்ளலாம். அது வீரமாமுனிவர், '8–ஆம் நூற்றாண்டில் தொகுத்த பொதுத்தமிழ் (தமிழ் – இலத்தீன்) அகராதியில் காணப்படுகிறது.

''இவ்வெழுத்தைப் பற்றி ஔவையார் கூறியுள்ளார் : 'ஙப்போல்வளை : வாயிலை (எ.கா – கோட்டையின், சுற்றுச்சுவரின் வாயிலை) சுற்றி வளைத்த முறைகளில் வளைத்தவை. ங என்ற எழுத்தைப் போல'' De Hac Littera Auveyar dixit : ஙப்போல்வளை : ingressum, v.g.arcis, valli etc. anfractis inflecte vils, ut est forma Littera ங)

*-அருட்தந்தை வி.மி. ஞானப்பிரகாசம், மதுரை -1*
*தமிழ்மணி 21.12.1991*

✧ ✧ ✧

# 5. 'கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி !'

இளங்கோவடிகள் காவிரி ஆற்றுக்குச் சொன்னது கன்னித் தமிழுக்கும் பொருந்தும்.

காவிரியாறு காட்டாறாக இருந்தபோது, கண்டபடி கரையை உடைத்துக்கொண்டோடி, நாட்டை அவ்வப்போது பாழ்படுத்தியது. கரிகால் பெருவளத்தான் காவிரிக்குக் கரையமைத்துக் கல்லணை கட்டிய பின், அது சோழ நாட்டில் கயல்மீன்கள் ஆகிய கண்களால் உணர்வை வெளிப்படுத்தி, ஒல்கி ஒசிந்து நடக்கத் தொடங்கியது. அதனால் நாட்டுவளம் பெருகியது. ஆற்றுக்குக் கரை போன்றதுதான் – இலக்கணம் எனக் **கவியரசு முடியரசன்** பாடினார். 'ஆற்றுக்குக் கரை ஏன் வேண்டும்? – என்பது அவர் வினா. காட்டாறு – பேச்சுமொழி. அது பயன்படாது போகலாம்.

நிலையின்றி ஓடிய காவிரியாறு ஆக்கத்திற்குப் பயன்பட்டது எவ்வாறு? பேச்சுமொழி காட்டாறு போன்றது; எழுத்து மொழி கரைகட்டப்பெற்ற ஆறு போன்றது. எப்படிப் பார்த்தாலும் ஓடிவரும் தண்ணீர்தான் அதன் உயிராகும்.

'பொள்ளாமணி' எது தெரியுமா? மண்ணோடு மண்ணாக வெட்டி எடுக்கப்பட்ட மாணிக்கம்தான் பொள்ளாதமணி. சங்க காலத்தில் 'பொளித்தல்' என்றால் 'யா மரத்தின் மேற்பட்டையை உரித்தெடுத்தல்' (அகம். 257). 'கல் பொளிந்தன்ன' (மது. 482) என்று கல்லை, மேற்பரப்பைத் தட்டித் தட்டிச் சொரசொரப்பாக்குவதும் குறிக்கப்படுகிறது. இன்றும் நம் வீடுகளில் அம்மியைப் பொளிவதுண்டு. இது தெரியவில்லையென்றால், தெரியாதவர் தலையில் பெண்கள் மிளகாய் அரைத்துவிடுவார்கள். மணிமேகலையில் 'பொளிந்த சாளரம்'

(துளையிட்ட சன்னல்) வருகிறது (4.53). பொளிதல் – உளியால் கொத்துதல். பொள்ளாமணி என்பது பட்டை தீட்டப்பெறாத மாணிக்கம். பொள்ளாமணி இல்லாமல், பட்டைதீட்டிய மாணிக்கம் என்பது ஒன்றில்லை. பேச்சுமொழி இல்லாமல் எழுத்து மொழி என்பது ஒன்றில்லை. பேச்சுமொழி தான் முற்பட்டது; நாள்தோறும் கோடிக்கணக்கானவர் பயன்படுத்துவதால் பெருவழக்குடையதும் அதுதான்! ஆயினும் ஆறுகரைபெற்றதால் அதிகப் பயன்பாடுடையதாவதுபோல், மாணிக்கம் போளப்பட்டுப் பட்டை தீட்டப் பெறுவதால் மிகுந்த பயன்பாட்டுக்கு வருவதுபோல் மொழியும் இலக்கணம் என்ற வரையறையால் மிகுந்த பயன்பாட்டுக்குரியதாகிறது.

இலக்கணத்தைச் சிலர் 'கர்ணகடூர' மாக்கிவிட்டனர். அது இலக்கணத்தின் குற்றமன்று. ஒரு வரையறை – ஒரு பண்பு விளக்கம் – ஒரு வளர்ச்சி வரலாறு – ஒரு நெறிமுறை வழிகாட்டுதல்: இவைதான் மொழிக்கு இலக்கணம்!

**எது புதுக்கவிதை?**

கவிக்கோ அப்துல் ரகுமான், 'புதுக்கவிதை' பற்றிப் பல்கலைக் கழகத்தில் உரையாற்றினார். 'இன்று புற்றீசல்போல், கண்டவர்களெல்லாம் கண்டபடி கிறுக்கி – 'புதுக்கவிதை' என்று வெளியிடுகிறார்களே, சரிதானா? என்று மாணவர்கள் வினா எழுப்பினர். மேலும் கீழும் இருபுறமும் அதிகமாக இடம்விட்டுப் பதிப்பித்தால் அது இன்று புதுக்கவிதையாகிவிடுகிறது. அன்று அப்துல் ரகுமான் கருத்து வடிவத்தையே தனக்குரிய கவிதை வடிவமாகக் கொண்டு அமையும் புதுக்கவிதைக்கு ஆறேழுவரன் முறைகள் கூறினார். அதாவது இப்படி இப்படி இருந்தால், அதைப் புதுக்கவிதை என்று இனங்கண்டு கொள்ள வேண்டும்; அல்லாத குப்பைகளைத் தள்ளிவிட வேண்டும் என்ற இடத்துக்குப் புதுக் கவிஞர்கள் வந்துள்ளனர்.

புதுக்கவிதையை வாயாரப் புகழ்ந்தவர்களும் இன்று அதன் தளர்ச்சி நிலைக்கான காரணங்களைத் தேடும் நிலை வந்து விட்டதால், 'புதுக்கவிதை'யை இனம் காண வேண்டியுள்ளது. இலக்கணத்தை உடைத்துக் கொண்டு வந்ததென்று கூறப்பட்ட புதுக்கவிதையும் இனம் காண, சில வரையறைகளைத் தேடுகிறதே அதை நீங்கள் 'இலக்கணம்' என்ற பெயரால் சொல்ல வேண்டாம். பழைய இலக்கணத்தை உடைத்துக்கொண்டு வந்ததே தவிர, அதுவும் இன்று புதிய

அமைப்புக்கேற்ற புதிய இலக்கணம் தேடுகிறது என்று நானும் கூறவில்லை. நாமிருவரும் சமாதானமாகப் போய்விடுவோம்!

**எதிர்காலம் என்ன சொல்லும்?**

இன்று எல்லோரும் 'புதுக்கவிதை' என்ற பெயரால் எழுதுகிறார்கள். பாரதியாரின் வசனகவிதைகள் புதுக்கவிதையா? சாலை இளந்திரையனின் உரைவீச்சு புதுக்கவிதையா? ந. பிச்சமூர்த்தி தொடங்கிய புதுக்கவிதைக்கும் இன்றைய புதுக்கவிதைக்கும் வேறுபாடு என்ன? சி. மணி, மு. மேத்தா, பாலா எனப் பலரும் புதுக்கவிதையை இனம்காட்ட முயல்கிறார்கள்.

ஒரு காலத்தில் இருவகை வழக்கிலும் இருந்ததை, வடிவப்படுத்தவும், வரன்முறைப் படுத்தவும் இனம் காட்டவும், வரலாறுணர்த்தவும், நெறிமுறை வழிகாட்டவும் முயன்ற முயற்சிகளின் தொகுப்பே காலப்போக்கில் கடினமான இலக்கணமாகிவிட்டது. இன்று புதுக்கவிதையை 'இனம்' காட்டும் பண்பு விளக்க முயற்சியும் நாளைக்கு 'விதிகளாகி' இலக்கணமாகிவிடலாம்தானே?

**பேச்சும் எழுத்தும்**

பேச்சுமொழியின் வார்ப்படம்தான் எழுத்துமொழி. ஆனாலும் பேச்சு மொழி, நடைமுறையிலிருப்பதால் மாறிக் கொண்டே இருக்கிறது. அதன் வார்ப்படத்தால் உருவான எழுத்து மொழியில், பழையதன் தொடர்ச்சியும் புதியதன் ஏற்பும் கலந்து காணப்படுகின்றன. தமிழில் இவ்விரண்டையும் தவிர்க்க முடியாது.

இலங்கை, பர்மா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, இந்தோசைனா, தென்னாப்பிரிக்கா, மொரிசியசு, ரியூனியன், குயானா, பிஜித்தீவுகள், மடகாசுகர், டிரினிடாட், மார்ட்டினிக் என இவ்வாறு 22 நாடுகளுக்குமேல் தமிழ் வழங்குவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. உலகில் பல நாடுகளில் பேசப்படுவது என்ற நிலையில், ஆங்கிலத்திற்கு அடுத்த இடம் தமிழுக்கு உள்ளது என்று வ.அய். சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார். இவ்வளவு பரந்துபட்ட வழக்காற்றைக் கொண்ட தமிழ்மொழி அனைவராலும் ஒரே மாதிரியாகவா பேசப்பட்டு வருகிறது? நாடு, இடம், சாதி, சமயம், தொழில், குடும்பப் பின்னணி, கல்வி நிலை, அண்டை மாநிலத்தாக்குரவு என இத்தகையவற்றால், நூற்றுக்கணக்கான வேறு பாடுகளுடன் தமிழ் உச்சரிக்கப்படுகிறது;

பேசப்படுகிறது. கிறித்தவ சமயப் பொழிவா, அது ஒரு வகையாக இருக்கிறது. மீனவர் வழக்குக்கும் படகர் வழக்குக்கும் பல வேறுபாடுகள் உள. காலந்தோறும் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்களும் கணக்கில. இவை அனைத்தையும் உள்ளடக்கியதுதான் 'தமிழ்'. அதாவது நாம் கூறும் 'தமிழ்' என்பது, நூற்றுக்கணக்கான தனித்தனித் தமிழ்களைத் தன்னுள் அடக்கியதேயாம்.

## தனித்தமிழ்

பிறமொழி கலவாத தமிழைத் 'தனித்தமிழ்' என்றனர். அதனைத் 'தமிழ்' என்றாலே போதுமானது, உண்மையில் தனித்தமிழ் என்று பேச்சுத் தமிழைத்தான் சொல்ல வேண்டும். பேச்சு காலத்துக்குக் காலம் வேறுபடுகிறது. ஒரே காலத்திலும் இடத்துக்கு இடம், சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகிறது.ஏன்? சாதிக்கு ஒரு தமிழாக இருக்கிறது. அதிலும் தனி ஆளுக்கு ஆள் வேறுபடு மிடங்களும் உண்டு. ஒரே மனிதரே வெவ்வேறு நேரத்தில், வெவ்வேறு விதமாக உச்சரிக்க, பேச வாய்ப்பிருக்கிறது. பேச்சு என்பது தனியொருவர் செயலாக அமையும்போது 'தனிப் பேச்சு நடை' ஆகவும் (Idiolect), தனிப்பட்ட சிலர் செயலாக அமையும் போது கிளை வழக்காகவும் (Dialect) ஆகிறது என்பர்.

இத் தனித்தனித் தமிழைத் தமிழ் அன்று என்று சொல்ல முடியாது; இதுதான் தமிழ் என்று, ஒன்றைமட்டும் சுட்டிக் காட்டிக் கூறவும் இயலாது.

அதனால் மொழியியலறிஞர் சிலர் பேச்சு (Speech) வேறு; மொழி (language) வேறு என்றனர். மொழி என்பது, ஒரு மக்கள் கூட்டத்தார் அனைவரும் தம்முள் கருத்துப் பரிமாற்றத்துக்கு என ஏற்படுத்திக் கொண்ட ஒரு கருவி அல்லது ஓர் அமைப்பாகும். அவர்தம் அறிவையும் உணர்வையும் வெளிப்படுத்திக்கொள்ள உதவும் சாதனமாதலால், இதனை வெறும் 'கருவி' என எண்ணுவதை விடுத்து, அம் மக்களின் உணர்வோடும் வாழ்வோடும் சம்பந்தப் பட்டது என விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

உயிருள்ள மனிதர்களால் உருவாகும் மொழியும் தன்னளவில் உணர்வும் உயிரும் உள்ளது போல் இயங்குகிறது. இந்த மொழி காலத்திற்கு ஏற்பத் தன்னைச் சரி செய்துகொள்கிறது. ஒவ்வொரு திருப்புமுனைக் காலகட்டம் வரும்போதும் மொழி தன்னைப் புதுப்பித்துக்

கொள்கிறது. ஆற்றுக்குக் கரையமைத்து, வாய்க்கால் வழி பாய்ச்சி, நாட்டை வளப்படுத்த வேண்டாமா? தரிசு நிலமாகிய அதற்கு நாம் செய்வதெல்லாம் தோட்டம் போடுவது, பயிர் செய்வது, பூங்கா அமைப்பது, அதை நமக்குப் பயன்படுத்திக் கொள்வது போன்ற செயல்கள்தான்! மற்றபடி அது தன்னைத்தானே கவனித்துக் கொள்கிறது. ஆனாலும் கவனித்துக் கொள்ளும் என்று வேலி கட்டாமல் விட்டு விடலாமா? பாத்தியமைக்காமல் போகலாமா? நீர் பாய்ச்சாமல் விடலாமா?

தனித்தனி வழக்காறுகளின் கூட்டுறவால், அதில் தலைமை வாய்ந்த ஒன்றால் ஒரு 'பொது மொழி' உருவாகிறது. அப்பொது மொழிக்கும் இத் தனித் தனி மொழிக்குமிடையே ஏற்படும் ஒட்டுறவையே நாம் அம்மொழியின் வாழ்க்கை என்று கூறிவிடலாம். தனிமொழி மிகத் தனிமைப்பட்டு, அப்பொது மொழியை விட்டு விலகிவிட வேண்டும் என்று இன்று சிலர் கருதுகிறார்கள். அது தவறு. அப்படிப் போனால் அத் தனிமொழி வேற்று மொழியாகிப் போய்விடும். அத் தனிக் கிளைமொழியையும் கொண்டு உருவான, பொதுமொழியைப் போற்றினால்தான், அத் திசை வழக்குக்கும் வாழ்வுண்டு.

இவை இரண்டும் இணைந்தும் பிணைந்தும் தாமே வளர்வதை – வாழ்வதை நமக்குக் காட்டி, நம்மை நெறிப்படுத்தி வைப்பதுதான் 'இலக்கணம்' என்ற பெயரால் கூறப்படுகிறது. ஆங்கில மொழியின் தொடக்க கால வளர்ச்சியை அறிவது, இதுகாறும் கூறியவற்றுக்கு அரணாக அமையும். ஆங்கிலத்தின்மீது அளவற்ற மோகம் கொண்டுள்ள நாம், அதன் வளர்ச்சி வரலாற்றை அறிந்து பின்பற்றலாம்தானே?

*தமிழ்மணி, 18.5.1991*

✧ ✧ ✧

# 6. தமிழைத் தளரவிடலாமா?

**குறள் கூறும் வாய்பாடு**

'அல்லவை தேய அறம் பெருகும், நல்லவை நாடி இனிய சொலின்' (கு.96) என்ற திருக்குறள், கணிதம் போன்ற ஒரு வாய் பாட்டை நம்முன் வைக்கிறது. அறமும் பாவமும் எதிர்விகிதத்தில் செயற்படக்கூடியவை. ஒன்று தேயுமிடத்தில் – இன்னொன்று வளரும்; ஒன்று வளருமிடத்தில் மற்றது தேய்ந்தொழியும். அதனால் 'நல்லவற்றை நாடி இனிய மொழிகளைப் பேசும் அறம் பெருகப் பெருக அல்லாதவையாகிய பாவம் தேயும்' என்பது திருவள்ளுவர் கருத்து. 'தேய' எனும் 'செய' எனும் வாய்பாட்டு வினையெச்சம், 'தேயுமாறு' எனப் பொருள்படும். தீயவை தேயுமாறு அறம் வளரும் – அதனையே மாற்றிச் சொன்னால் அறம் வளர தீமை தேயும். **பரிமேலழகர்** இதற்கு "தேய்தல் – தன் பகையாகிய அறம் வளர்தலின் தனக்கு நிலையின்றி மெலிதல்" என விளக்கம் எழுதினார். இந்த வாய்பாடு ஒரு வரையறையை (Formula) தருவதால் இது பலகாலத்தும் பொருத்திப் பார்க்கத் தக்கதாகிறது.

இந்தியை எதிர்ப்பதாலோ, ஆங்கிலத்தைத் தாக்குவதாலோ அவை ஒழிவதுமில்லை; அழிவதுமில்லை. மாறாக எச்சரிக்கைப் படுத்தப்பட்டு, எதிர்ப்புணர்ச்சியால் உந்தப்பட்டு அவை நன்கு அழுத்தமாக உட்காரவே நாம் வழிவகுக்கிறோம். தமிழை உரிய இடத்தில் வைப்பதால் மட்டுமே, இனித் தமிழைக் காப்பாற்றவோ, வளர்க்கவோ முடியும், தமிழின் ஆட்சியும் பயன்பாடும் கவுரவமும் வளரவளரவே ஏனையவற்றின் செல்வாக்குக் குறையத் தொடங்கும். இதற்குக் காலம் பிடிக்கும். இப்போதே படிப்படியான முயற்சி தேவை.

ஆங்கில வழி நர்சரிப் பள்ளிகளை முழுமூச்சாக எதிர்ப்பவர்கள், தமிழ்வழிக் கல்விப் பள்ளிகளை நாகரிகமும் கட்டுப்பாடும் தேர்ந்த கல்வியும் தோய்ந்த பயிற்சியும் உடையவை ஆக்காமல்

விட்டுவிடுகிறார்கள். அதனால் மேலும்மேலும் ஆங்கில நர்சரிப் பள்ளிகள்தான் பல்குகின்றன. வெறுமனே எதிர்ப்புக்காகவோ எதிர்ப்பு? தமிழ்வழிப் பள்ளிகளை உயர்தரமுடையவை ஆக்குவது ஆக்கபூர்வமான செயல்.

## தமிழ்த் தலையெழுத்தும், ஆங்கிலத் தலையெழுத்தும்

ஆங்கிலத்தை விலாச முன் எழுத்துக்களாகப் பயன்படுத்தும் பழக்கம் அடிப்பட்ட ஒன்றாகிவிட்டது. இதை மாற்றச் சிறிது சிறிதாகத் தமிழ்ப் பழக்கத்தை அதிகப்படுத்த வேண்டும். சத்துரு சங்காரக் கோட்டையை 'சானாக் கோட்டை' (ச.கோட்டை) என்றுதான், படிக்காத பாமரர்கள் சொல்கிறார்கள். படித்த மேதைகள் தான் எஸ். எஸ். கோட்டை என்று கூறித் தங்கள் 'மேதாவிலாசத்தைக்' காட்டுகிறார்கள்.

தே.கல்லுப்பட்டி, இ.தருமம், ந. கோயில்பட்டி என்று இவ்வாறு தமிழ் முன்னெழுத்துடன் எத்தனையோ ஊர்ப்பெயர்கள் இன்றும் உள்ளன. ஆத்திக்காடு தெக்கூர் –ஆ. தெக்கூர் என்றுதான் அழைக்கப்படும். அதனால் அங்குள்ள கலைத்தந்தை தியாகராசரின் விசாலாட்சி உயர்நிலைப்பள்ளியைப் பாராட்டி எழுதும் போது கல்கி "இது ஆ. தெக்கூர் மட்டுமன்று. ஆஆ! தெக்கூர்"!! என்று வியக்கத்தக்க ஊரென எழுதினார். இத்தகைய ஊர்ப் பெயர்களை எல்லாம் தேடிப்பிடித்துத் தமிழ் முதல் எழுத்துக்களையே பயன்படுத்த வழி காட்டலாம்.

## தமிழ் ஆசிரியர்கள், தமிழ்ப் படைப்பாளிகள்

தமிழாசிரியர்களுக்கும், தமிழ்ப் படைப்பாளிகளுக்கும் வேறு எதிலும் ஒற்றுமை இருக்கிறதோ இல்லையோ, இந்த முன்னெழுத்து முறையில் மிகுந்த ஒற்றுமை இருக்கிறது. உ.வே.சா., திரு. வி.க., ரா.பி.சே., மு.வ., கி.வா.ஜ. என்று தமிழறிஞர்களை அழைப்பது போலவே வ.ரா., தி.ஜ.ர., கு.ப.ரா., க.நா.சு., லா.ச.ரா. என இவ்வாறு இலக்கியப் படைப்பாளிகளின் பெயர்களும் வழங்குகின்றன. சிறுபான்மை சி.கே.எஸ். (சி.கே. சுப்பிரமணிய முதலியார்); ஏ.சி. செட்டியார், எஸ்.வி.வி. எனச் சில பெயர்கள் நிலைத்துவிட்டன. சி.என். அண்ணாதுரை எனும் பெயர் வழக்காற்றையோ, ஈ.வே.ரா. எனும் வழக்காற்றையோ மாற்றிடல் கடினமே. 'மோ.க.காந்தி' எனக் காந்தியடிகளே தமிழில் ஒருசமயம் கையொப்பம் இட்டிருப்பது நமக்குக் கண்கொள்ளாக் காட்சி; கருத்துக்கும் மாட்சி தருவதாகும்.

ஆனால் வி.பி.சிங்., என்.டி. ராமாராவ், எல்.கே. அத்வானி எனச் சில அனைத்திந்திய அளவில் வழங்கும் பெயர்களை என்ன செய்வது? கூடியவரை தமிழாக்கவே முயல்வோம்.

## தொலைக்காட்சி முதலிய மக்கள் தகவல் தொடர்புகள்

தொலைக்காட்சியையே டி.வி. என்றுதானே கூறுகின்றனர். அதை நாமே கண்டு பிடித்துத் தமிழ்ப் பெயரை இட்டிருந்தால், உலகமெல்லாம் தமிழ் ஒலிக்கும். நம் கடைப் பெயர்கள் முதலான பலவற்றுக்கும் பிற மொழிப் பெயர்களிடுவதையே பெருமையாகக் கருதுகிறார்களே. இப்போது என் செய்வது? தொலைக்காட்சி, வானொலி, நாளிதழ், பிற இதழ்கள், திரைப்படம், கடைப்பெயர்ப்பலகை, விளம்பரம் – இவை யாவற்றிலும் கூடுமானவரையும் தமிழையே பயன்படுத்த முயல வேண்டும். அவற்றைப் பார்க்கும், கேட்கும் மக்கள் தாமே தமிழ்ப் பழக்கத்திற்கு ஆட்படுவர்.

ஆங்கிலத்தில் நெடுநாளாக வழங்கி வருபவையும் உலகம் மற்றும் இந்திய அளவிலானவையும் குறியீடுகளாகிவிட்டன. தமிழில் வழங்கும் 'குறியீடுகள்' என அவற்றை வகைப்படுத்தலாம். அதற்காக அவையே நிலைபெற வேண்டுமென்பதில்லை. தமிழில் எவ்வளவு இயலுமோ அவ்வளவுக்கு முயலுதல் வேண்டும். 'ஒல்லும் வாய் எல்லாம் அறம் செய்க' என்ற குறள்வழியே நம் குறிக்கோள் வழியாதல் வேண்டும்.

### உதாரணங்கள்

இவ்வாறு முயலும்போது சில சிக்கல்கள் தோன்றும். பேருந்துக் கழகங்களில் சோழன் போக்குவரத்துக் கழகம் 'சோ.போ.கழகம்' கும்பகோணம் என்று பெயர் பொறித்துள்ளது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் பாண்டியன் பெயரால் அமைந்த போக்குவரத்துக் கழகம் பி.ஆர்.சி. என்று மட்டும் வழங்குவதால் என்ன பெருமையோ? பா.போ.கழகம் ஆனால், சில காலத்துக்குத்தான் புதுமையாக இருக்கும். பிறகு பழகிவிடும். பேருந்துத் தடங்களை இன்று 3A, 3B, என்று போடுகிறோம். தமிழில் 3அ, ஆ,இ என்று போடலாம். ஆனாலும் தமிழில் குறில் நெடில் உச்சரிப்பு பேறுபாடு எளிதில் புலப்படுவதில்லை. 3அ என்றால் 'ஆவா, அவா?', நெடிலா, குறிலா என்ற ஐயம் ஏற்படும். மூன்று அ, மூன்று இ, மூன்று உ என்று கூறலாம். மூன்று நீதிமன்றம் போவதேல், 3 நீ எனவும்; மூன்று அண்ணா நகர் போவதேல் 3 அ என்றும் மூன்று கருணாநிதி நகர் போவதேல் 3க என்றும் ஏன் கூறக்கூடாது என ஆராய வேண்டும். இவ்வாறே தமிழ் முன்னெழுத்துப் பழக்கத்தை ஏற்படுத்த ஏற்படுத்த ஆங்கிலப் பழக்கம் அகலும்.

தமிழில் தன் பெயரைக் கூறிக்கொள்ளுதல், தாய்மாழியில் கையெழுத்திடுதல் போன்ற பழக்கங்களும் இதனை ஒட்டியனவாகும். தமிழ்

முன்னெழுத்தைப் போடுமாறு கட்டாயப்படுத்த வேண்டும். ஒருவர் T. Kannappan என ஆங்கிலத்தில் எழுதி விட்டு, தமிழிலும் டி. கண்ணப்பன் எனப் போடுவாரேல் அதை எப்படி ஏற்க முடியும்? தமிழில் எழுதும்போது தமிழ் எழுத்தில் மட்டும் 'டி' என இருந்தால் போதாது. தமிழிலேயே 'தே' என இவ்வாறு எழுதுக எனப்பழக்க வேண்டும். பள்ளி முதல் இப்பழக்கம் தொடங்கித் தொடர வேண்டும்.

ஆமாம், தமிழ்த் தொண்டு என்பது ஓர் அனுபவம்; ஒரு மனப்பழக்கம்; மாற்றமறியாத பயிற்சி; தொடர்ந்து வரும் செயற்பாடு. அதை ஒரு 'மேடைச் சொற்பொழிவு' என்று மட்டும் கருதினால் போதாது.

✧ ✧ ✧

# 7. தமிழனின் 'தலையெழுத்து'ம் தமிழின் தலையெழுத்தும்!

ஒருவர் தம் மகன் சோலையப்பனைத் தொலைபேசியில் கூப்பிட்டுப் பேச விரும்புகிறார். அவன் வேலைபார்க்கும் அலுவலக நண்பர் பேசியை எடுக்கிறார். தந்தை விருப்பத்தைச் சொன்னதும் நண்பர் 'பி.ஆர்.எஸ் .', 'பி.ஆர்.எஸ்' என்று கூவுவது காதில் விழுகிறது. பெரி. சோலையப்பனின் அலுவலகச் சுருக்கப் பெயர் அதுதான். அங்கு மட்டு மென்ன? தமிழகம முழுவதுமே பள்ளிகள். அலுவலகங்கள், தொழிலகங்கள் எங்குமே தமிழனின் 'தலையெழுத்து' எல்லாமே ஆங்கிலம்தான்! சுருக்கப் பெயராக அமையும் முகவரிகளும் ஆங்கிலம்தான்!

எனக்கே 'ஆர்.எம்.பி' என்பதுதான், நான் வேலைபார்த்த பள்ளியில் பெயர். எங்கள் தலைமையாசிரியர் 'ஆர். எம்.பி.' என்றுதான் அன்பொழுகக் கூப்பிடுவார். அங்கே ஆர்.என். என்பவரும் கே.எஸ்.டி. என்பவரும் எனக்கு நெருங்கிய நண்பர்கள். **கவியரசு முடியரசன்** என்னுடன் பணியாற்றிய பாரதிதாசன் வழிவந்த புகழ் பெற்ற பெருங்கவிஞர். தமிழ் என் தாய், தமிழ் என் தந்தை எனப்பாடுபவர். ஆனால் அவர் பெயரும் பள்ளியில் கே.எஸ்.டி.தான்! நாம் ஆங்கிலச் செல்வாக்கிற்குப் பிறகு நம் தலையெழுத்துகளை அல்லது முன் எழுத்துகளை ஆங்கிலமாக எழுதும் பழக்கத்திற்கு ஆட்பட்டு விட்டோம். இதில் யாரையும் குறைசொல்வதற்கில்லை. ஒரு மனப்பழக்கம் ஏற்பட்டுவிட்டது. நன்கு சிந்தித்து, நாட்டுமருந்து தந்துதான், இந்தப் பழக்கவழி நோயை அகற்ற வேண்டும். காலப் போக்கில் சிறிதுசிறிதாகத்தான் இதை மாற்ற முடியும். அதற்கான ஆர்வமும் முயற்சியும் இருந்தால் காலம் வெல்லும்.

அனைத்திந்திய அளவிலும் உலகளாவிய நிலையிலும் தலைவர் பலர் பெயர் அன்றும் – இன்றும் ஆங்கில முன்னெழுத்துடன் அமைந்தன.

வி.பி.சிங் என்பது ஆங்கிலப்படியும் சரியே; தமிழிலும் விசுவநாத பிரதாப் சிங் வி.பி.சிங் தானே! சி.வி.ராமன், என்.டி. ராமராவ், என இவ்வாறு வருகை எண்ணிறந்தன. முன்பும் இது போன்ற பழக்கத்தால் தமிழர்களும் எஸ். நாகப்பன், எம். திருநீல கண்டன், எல்.சேகர் என இவ்வாறு தம் பெயரை எழுதுவதும் பிறரால் அழைக்கப்படுவதும் நாகரிகம் எனவும் கௌரவம் எனவும் கொண்டு விட்டனர். சு.குமரப்பனை 'என்ன குமரப்பா' என்று அழைத்தால் பட்டிக்காட்டுத்தனமாய், அவமரியாதையாய், தாழ்வாய்ப்படுகிறது. "என்ன! எஸ்.கே." என அவரையே விலாசமிட்டு அழைத்தால்தான் அவர் படித்தவர், நாகரிகமானவர் என அவருடைய மனமும் எண்ணுகிறது; நமக்கும் கௌரவமாய்ப்படுகிறது.

நிலைமை போகிற போக்கைப் பார்த்தால் தமிழனின் இந்தத் தலையெழுத்து மோகம், தமிழின் தலையெழுத்தையே மாற்றி விடுமோ. என்னுமளவு அச்சத்தை ஏற்படுத்துகிறது. சிறிதுநேரம் சிலவற்றையேனும் எண்ணிப் பார்ப்போமா?

(1) மனிதர்கள்தான் தங்கள் முன் எழுத்தை ஆங்கிலமாக்கிக் கொண்டனர் என்பதில்லை. நம் நாட்டில் ஊர்ப் பெயர்கள் பல வற்றுக்கும் ஆங்கிலத் தலையெழுத்தைச் சேர்த்துப் பயன்படுத்தப் பார்க்கலாம். P. புதுப்பட்டி வேறு; T. புதுப்பட்டி வேறு; முன்னது பொன்னமராவதி புதுப்பட்டி, பின்னது திருப்புத்தூர்ப் புதுப்பட்டி. அதாவது பக்கத்திலுள்ள ஊரை வைத்து வேறு பிரித்துக்காட்ட இவ்வாறு வழிகண்டனர். 'தேவன் குறிச்சி' மலைசார்ந்த கல்லுப்பட்டி T. கல்லுப்பட்டி ஆனது. ஊர்கூடத் தமிழில் தலையெழுத்தை வைத்துக் கொண்டால் அநாகரிகம் என்று கருதி, ஆங்கிலத்தையே பெரிதும் நாடும் நாடு இது.

(2) சில ஊர்ப்பெயர்கள் சுருக்கப்படும் பொழுது கூட ஆங்கில எழுத்துகளாகத்தான் அமைகின்றமையைப் பார்க்கிறோம். 'சதுர்வேதி மங்கலம்' என்பது 'S.V. மங்கலம்' ஆகிவிடுகிறது. 'ராஜசிங்கமங்கலம்' R.S.மங்கலமாகிறது. சத்துரு சங்காரக் கோட்டை நீளமான பெயராயிருந்ததால் தமிழன் அதை எஸ். எஸ். கோட்டை என்று அன்னைத் தமிழில் அழைக்கிறான். வரலாற்று வழிவந்த ஊர்ப்பெயரென்று முழுவதும் தமிழாக இருக்கும் போது தான் விளங்கும். தமிழனின் தலையெழுத்துப் பழக்கம் அதை விளங்காமல் ஆக்கி விடுகிறது. பெரியநாயக்கன்பாளையமெல்லாம் P.N. பாளைய. மாகிவிடும். R.S. புரம், K.K. நகர் என்றுதான் நகரின் புதிய விரிவாக்கங்கள்

அழைக்கப்படுகின்றன. C.I.T. காலனி, L.I.G. காலனி இப்படியும் எண்ணிறந்தன. ஏதோ நான் பார்த்த, கேட்ட சிலவற்றைச் சொன்னேன். உங்களுக்கு இதுபோல் நூற்றுக்கணக்கில் நினைவு வரும். நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்குப் பழக்கப் பட்டவற்றைச் சொல்லத் தொடங்கினால் பல்லாயிரம் குறியீடுகள் இவ்வாறு வழங்குவதை அறியலாம்.

(3) ஊர்கள் போகட்டும். நிறுவனங்கள், கடைகள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களுமல்லவா தலையெழுத்தை ஆள்வதில் 'கெட்டுப்' போய்விட்டன. எம். டி.சி.சி. பாங்க், ஐ.ஓ.பி. என்போம். எம்.எஸ். பல்கலைக்கழகம், ஏ ஆர்சி உயர்நிலைப்பள்ளி. இப்படி எண்ணினால் அது கணக்கிலடங்குமா? நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் இந்த அவலத்தை நெற்றியில் எழுதிவைத்து, உலகுக்குத் தமிழனின் தலையெழுத்துப் பழக்கத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

(4) நிறுவனங்களை விட்டு விடுவோம். பதவிகளின் பெயர்களில் வருகின்ற ஒவ்வொரு சொல்லின் தலையெழுத்தையும் எடுத்துக் கூட்டி அடுக்குவது நமக்குள் ஒரு நாகரிகம் முதிர்ந்த பழக்கமாகிவிட்டது. V.C. என்றும், H.M. என்றும், M.D..என்றும், A.R. என்றும் இப்படி எத்தனை பதவிக் குறியீடுகள்! 'தலைமையாசிரியர் எங்கே?' என்று கேட்பவர்கள் ஒருவர் இருவர்தான். 'எச்.எம். எங்கே?' என்று 'நாகரிகமாகக்' கேட்பவரே அதிகம். அப்போதுதான் ஏவலன் கூடப்பதில் சொல்கிறான்.

(5) நமது நாடு குடியாட்சி நாடு. இத்தகைய நாட்டில் அரசியல் கட்சிகளும் மக்களைப் பெற்று பிரிந்து பிரிந்து பல்குகின்றன. அதனால் முன்னெழுத்து வைத்துக்கொள்கின்றன. எஸ். காங்கிரஸ், எஸ். ஜனதாதளம் என்பதுடன் பி.ஜே.பி., ஈ.ஆர். எல்.எப். என்று இவ்வாறு அவை ஆங்கில எழுத்துகளால் அழைக்கப் படுகின்றன.

(6) நமது கல்வித் தகுதிப் பட்டங்கள் எல்லாம் ஆங்கில வார்த்தைச் சுருக்கங்களாக உள்ளன. பி.ஈ., எம்.பி.பி.எஸ்., எம்.ஏ., பி.எஸ்சி. என இவ்வாறு அவற்றின் தலையெழுத்து வரிசையை வைத்துச் சொல்லப்படுகின்றன. இவையெல்லாம் படித்தவர்ளை மட்டுமா சார்ந்துள்ளன? படிப்பைப் பற்றிச் சொல்ல நினைக்கும் பாமரனையும் தட்டுத்தடுமாற வைக்கின்றன.

(7) நமது பேருந்துத் தடங்கள் நிலையான ஒன்றிலிருந்து சிறிதுசிறிது மாற்றப்படும் போது 3A, 3B, 3C என்று அழைக்கப் படுகின்றன. அதில் பயணம் செய்பவரெல்லாம் இதைப் பயன் படுத்தியே ஆக வேண்டும்.

(8) குடியிருக்கும் வீட்டு எண்கள் கூட, சில சமயம் 94A, 36D, ஆகிவிடுகின்றன. இவ்வாறு ஆங்கிலம் நம் வீட்டு வாசல்களிலும் குடியேறுகிறது.

(9) 6–ஆம் வகுப்பு ஏ, பி.சி எனப் பள்ளியில் வகுப்பு வரிசைகள் உள்ளன. பிறவகைப்பாடுகள் எவையாயினும் நாம் அ,ஆ, என்றோ; க, கா என்றோ அழைப்பதில்லை. ஏ,பி,சி தான் சுருக்கமான, சொல்லக்கூடிய குறியீடுகளாகப் பயன்பட்டு வருகின்றன!

(10) உலகளாவிய அறிவியல், கணிதம் போன்றவற்றில் இவை சில சூத்திரங்களாக, வாய்பாடுகளாக நிலைபெற்றுள்ளன. இப்படியே எண்ணிக் கொண்டு போகலாம். இறுதியில் ஒரு முடிவுக்குத்தான் வரவேண்டும் போல் தோன்றும். ஆங்கில எழுத்துகளை இனி யாரும் எங்கும் தவிர்ப்பதே நலம் என இதற்கும் ஒர் இயக்கம் தொடங்க வேண்டும் போலும்! 'அ, ஆ' படிக்க ஓர் இயக்கம், ஒன்று இரண்டு என தமிழில் எண்ண ஓர் இயக்கம். இனித் தமிழில் மூச்சு விடவே ஓர் இயக்கம் வேண்டுமோ? "எங்கும் தமிழ், எதிலும் தமிழ்" என வாய் குளிரப் பேசி, மேடை ஏறி முழங்கி, வீட்டுக்கு விரைந்து போகிறவர்கள் இந்த நடைமுறையை அல்லவா எண்ணிப் பார்க்கவேண்டும்? ஐயோ பாவம்! அவர்களுக்கு எங்கே நேரமிருக்கிறது? அவர்கள் தமிழுக்காக உயிரைக் கொடுக்க அல்லவா போய்க் கொண்டிருக்கிறார்கள்!

*- தமிழ்மணி 15.2.1990*

✧ ✧ ✧

# 8. தலையெழுத்தாகித் தடுமாறவைக்கும் ஆங்கிலமே!

'இருக்க இடம் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கிய கதை போல' என்பது பழமொழி. ஒரு மடாதிபதி, புகலிடமின்றி வந்த பரதேசி ஒருவனுக்குத் தம் மடத்தில், புறந்திண்ணையில் தங்க இடம் கொடுத்தாராம். இரக்கப்பட்டு இடம் தந்த அவரையே, கொஞ்சம் கொஞ்சமாக மடத்தை விட்டு நகர்த்திவிட்டு, அந்த மடத்திற்கு ஒண்ட வந்தவன் மடாதிபதியாகி விட்டானம். எப்படி இருக்கிறது கதை!

ஆங்கிலமும் 'ஒண்ட வந்த பிடாரி' தான்! அது இப்பொழுது ஊர்த்தெய்வத்தை விரட்டிவிட்டது. ஆங்கிலம் வருவதற்கு முன்பு தமிழில் முகவரி குறிக்கும் மரபு எவ்வாறு இருந்தது? மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்ற முன்னைய பழக்கம் இன்றில்லை. இன்று ம.க. நக்கீரன் என்று சுருங்கிவிடும். மருதங்கிழார் மகனார் கண்ணனார் என்பதை ம. கண்ணன் என்றோ, மரு. கண்ணன் என்றோ சுருக்குவர். முன்பும் பூதன் மகன் தேவனை, பூதந்தேவன் என்றும், கண்ணன் மகன் கூத்தனை, கண்ணங்கூத்தன் என்றும், உருத்திரன் மகன் கண்ணனை உருத்திரங்கண்ணன் என்றும் சுருக்கினர். அதுபோலவே ஊர்ப்பெயரை மட்டுமே முன்பெயராக வைத்துக் கொண்டவர்களும் உண்டு. மாங்குடி மருதன், அரிசில்கிழார் என வழங்கின. கடியலூர் உருத்திரங் கண்ணனார் என ஊரும் தந்தை பேரும் சேர்த்து அமைவதுண்டு. கல்வெட்டுக்களிலும் இத்தகைய பெயர் வழக்காறுகளை நிரம்பக் காணலாம். கண்ணன் ஆரூரன், ஆதித்தன் சூரியன் என இவ்வாறுதான் வழங்கின. ஊர்ப்பெயர்கள் கூட இவ்வாறே முழுப் பெயர்களாக வழங்கிவந்தன. செம்பியன் மாதேவி தேவ மங்கலம், பல்லவன் மாதேவி சதுர்வேதி மங்கலம், அருமொழித் தேவ சதுர்வேதி மங்கலம் என இவ்வாறு அவை வேறுபடுத்தப்பட்டன. முன்னெழுத்தாகச் சுருக்கும் பழக்கம் இல்லாத காலம் அது.

இராமருக்கு முடி சூடும் நாள் குறித்து எங்கும் செய்தி அனுப்பப்படுகிறது. வசிட்ட முனிவரும் மந்திரிமாரும் கூடி நாளும் நாழிகையும் குறித்து அழைப்பு விடுகிறார்கள். எவ்வாறு? "கவிகை ஓங்கும் தயரதராமன் தாமச் சுந்தர மவுலி சூடும் ஓரையும் நாளும் தூக்கி" வரைந்து அனுப்பினர் என்று கம்பர் பாடுகிறார். அழைப்பிதழ் ஓலை அல்லவா? 'தயரதராமன்' என்று பெயர் பொறித்தனர். ஒரே பெயராக்கி விட்டதால் தமிழ்மரபு காக்கப்படும் என்பது கம்பருக்குத் தெரியும். இன்றைக்கு எனில் த. இராமன் ஆக்கியிருப்பர். பரசுராமனைப் ப. இராமன் ஆக்கியிருப்பர்!

**நகரத்தார் மொய்ப்பண ஏடு**

இன்றும் இந்த வழக்கத்தைக் காணவேண்டு மென்றால், நகரத்தார் திருமண வீட்டில் மொய்ப்பணம் எழுதும்போது பார்க்கவேண்டும். பங்காளிகள் 'பணம் எழுதுவது' என்பது ஒரு முக்கிய சடங்கு. அதில் 'கைப்பெட்டியை' முன் வைத்து, ஏடு எழுதுவர். முன்பு பனை ஓலையில் எழுதினர். இன்று 'மொய்ப்பண ஏடு' என அச்சிட்டு நோட்டுப் புத்தகத்தில் எழுதுகின்றனர். இராமசாமி செட்டி பெரிய கருப்பன் ரூ. கால், முத்துராமன் செட்டி சுப்பிரமணியன் ரூ.கால், முத்தையா செட்டி பழனியப்பன் ரூ. கால் என்று கரைப்பிரிவு வரிசைப்படி, குடும்ப வரிசைப்படி, வயது வரம்புப்படி மொய்ப்பணம் எழுதப்படும் திறம் மிகச் சிறப்பாக இருக்கும்.

ஒரு மொய்ப்பண ஏட்டையாவது பார்த்து, அதன் விளக்கத்தைக் கேட்டால்தான் இச்சிறப்புத் தெரியவரும். இதில் முன்னே இருப்பது தந்தை பெயர். ஒரு மொய்ப்பண ஏட்டை வைத்துக்கொண்டு, அந்தப் பங்காளிக் குடும்பங்களின் குடிவழி வமிசாவளி அத்தனை கிளைகளையும் வரிசை முறைப்படி ஒன்றுவிடாமல் கண்டுபிடித்து விடலாம்!

இந்தச் சமூகத்தவரும் இன்று மொய்ப்பண ஏடு தவிரப் பிற இடங்களில் எல்லாம் ஆங்கில முன்னெழுத்துக்களையே பயன் படுத்தித் தங்கள் 'கவுரவத்தை'க் காப்பாற்றிக் கொள்கின்றனர். இவர்கள் தங்கள் வீட்டுப் பொருள்கள் வெள்ளி, வெண்கலச் சாமான்யாதாயினும் அதில் தம் எழுத்து முகவரியை வெட்டி வைக்கும் பழக்கமுடையவர்கள். இப்பொழுது தமிழில் வெட்டினால் கூடுதல் கூலி கேட்பதால், ஆங்கிலத்திலேயே முன்னெழுத்துக்களை வெட்டிப் பணத்தை மிச்சப்படுத்துகிறார்கள்.

## தேவலோகத் திருமணத்தில் மொய்ப்பணம்

தேவ உலகத்தில் உமாதேவியார்க்கும் சிவபெருமானுக்கும் திருமணம் நடைபெறுகிறது. அதற்குத் தேவர்களும் முனிவர்களும் கடவுளர்களும் தங்கள் சுற்றமும் நட்பும் புடைசூழ வந்து சிறப்பிக்கிறார்கள். அங்கேயும் மொய்ப்பணம் எழுதுகிறார்கள். நகரத்தார் மரபிலே பிறந்த பட்டினத்து அடிகள் "நின் தமர் பெயர் எழுதிய வரிநெடும் பொத்தகத்து, என்னையும் எழுத வேண்டுவன்" (கோயில் நான்மணிமாலை 4 : 21 – 23) என்று இறைவனது உறவினர் பெயர் வரிசைப்படி எழுதப்படும் மொய்ப்பண ஏட்டில் – பொத்தகத்தில் – தம் பெயரையும் எழுத வேண்டுகிறார். தந்தை பெயரைச் சுருக்கி, முன்னரிடும் தலை எழுத்தாகப் போடுவதென்பது, ஆங்கில மரபைப்பார்த்தபிறகு நமக்கு வந்த புதுப் பழக்கமே தவிர வேறன்று. சொ. முருகன் – சொக்கலிங்கம் மகன் முருகன். வே. அண்ணாமலை – வேங்கடாசலம் மகன் அண்ணாமலை என இவ்வாறு தந்தையின் புகழை வரவரச் சுருக்கும் பரம்பரை போலவே, பெயரையும் சுருக்கிப் கெடுத்துவிடாதேடா தம்பி" என்று மக்களைக் கெஞ்சுவர். இப்படிச் சுருக்கிப் 'பேரைக்' கெடுப்பவர்களைப் பற்றியும்தான், அவ்வாறு வருந்தியிருக்க வேண்டும்.

## புதிய மரபுகள்

ஆங்கிலம் வந்த பிறகு தமிழில் புது விலாச மரபுகள் தோன்றின. விருதுநகர் வியாபாரிகள் சொ.உ.அ.கடை என்று இவ்வாறு தமிழில் விலாசமிட்டு வந்தனர். நகரத்தார்களும் இந்த முன் எழுத்துகளால் முகவரியிடும் விலாச மரபை, ஆங்கிலரிடமிருந்து ஏற்று, புதுப்புது வடிவங்களில் பயன்படுத்தினர். அரு.மு. ராம. என்பது ஒரு வீட்டு விலாசம். 'பள. பெரி. பெரி.' என்பது மற்றொரு முகவரி. 'பழ' என்றால் மங்கலமில்லை எனக் கருதிய காலத்தில், அதைப் 'பள' என ஆக்கிவிட்டனர். இந்த இரட்டை விலாச முறை மலேசியா, சிங்கப்பூரில் மற்றவர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கிறது என சோமலெ குறிப்பிடுகிறார். ஆனால் இப் பழக்கம் தந்தையர் பெயரை ஓரளவு நினைவூட்டுவதாக அமைகிறது. 'பழ' (பழனியப்பன்), 'சுப' (சுப்பிரமணியன்), 'அண' (அண்ணாமலை) என இவ்வாறு அமைத்துக் கொண்டனர். அண்ணாமலை, சுப்பையா என்றால் அண், சுப் என்றுதானே வரும். ஆனால் அண, சுப என அவற்றை 'உயிருடன்' சேர்த்து அழைப்பர். சில போது 'அரு.சோ', 'கமுசு' என்று முன்னெழுத்துகளைக் கூட்டி வழங்குவர். அரு. சோ., க.மு.சு என்பன இணைந்துவிடும். வேறு சில சமயங்களில் சொக்கு சுப்பிரமணியம்

(சொக்கலிங்கம் மகன்), சுப்பு ஆறுமுகம் (சுப்பிரமணியன் மகன்), அழகு பழனியப்பன் (அழகப்பன் மகன்), முத்து சண்முகன் (முத்துக்குமரன் மகன்) என இவ்வாறு ஒரு முழுவடிவ முன்னெழுத்துச் சுருக்கம் பயன்படுத்தப்படுவதைத் தமிழகம் எங்கும் காணலாம். நகரத்தார் மரபில் இவ்வாறு முன் எழுத்திடும் வழக்கத்தின் வழி, ஒரு குடும்பக் கால்வழி முறையைக் கண்டுபிடித்துவிடலாம். வ.பழ.சா., வ.பழ.சித., வ.பழ. அ. எனவும்; வ.சுப.தி., வ.சுப. மா., வ.சுப. சொ. எனவும் வருவன கொண்டு நாம் தெரிந்து கொள்வது; 'வ' வள்ளியப்பர் தொடக்கம்; 'பழ' என்பதும், 'சுப' என்பதும் முதல் கால்வழியினர்; பழ.சா., பழ. சித. முதலியன முன்னதின் அடுத்த வழி. சுப.தி., சுப. மா., சுப.சொ. மூன்றாவது கால்வழி. இவ்வாறே இவை குடும்ப வரலாற்றை – வரல் – ஆற்றை நமக்குச் சுருக்கமாக உணர்த்துகின்றன. உ.ராம, சுப. சேவு. மெ. சொ. என்றும் முகவரி உ.ராம.சுப. சேவு. அ. திரு. என்ற முகவரியுடன் வைத்து ஒப்பிட்டு எண்ணப்படும்பொழுது ஒரு நீண்ட குடிவழி புலனாவதுடன் அது எங்கே கால்வழி பிரிந்து செல்கிறது என்பதும் உணர்த்தப்படுகிறது அல்லவா?

### விளி வேற்றுமையும் முகவரியும்

எட்டாம் வேற்றுமையை 'விளி வேற்றுமை' என்போம். அது படர்க்கை யோரைத் தன் முகமாகத் தான் அழைப்பது. அங்கேயும் கூட 'சூனாப் பானா' (சுப) என்று சுப்பிரமணியத்தையும், 'லேனாவைக்கூப்பிடு' (லெ) என்று இலட்சுமணனையும், 'ஆண்ணானா எங்கே?' (அண), 'பானா ழானா வாங்க' (பழ) என்று அண்ணாமலை, பழனியப்பனையும் அழைப்பர்.

ஆனால் இன்றைய நிலை பெரிதும் மாறிவிட்டது. எல்லாச் சமூகத்திலும் ஆங்கிலமயமாகிவிட்டது. ஆங்கிலத்தில் சொல்வது எளிது என்றும், நாகரிகம் என்றும், படித்திருப்பதற்கு அடையாளம் என்றும், கவுரவம் என்றும் தமிழன் எண்ணுகிறான். தமிழில் தலையெழுத்துகளைப் பயன்படுத்தும் போது, 'பட்டிக்காட்டுத் தனமாக'ப் படுகிறது. அதனால் தமிழகத்தில் ஒரு சின்னஞ் சிறுவனைப் பார்த்து 'உன் பெயர் என்ன?' என்று கேட்டால், 'ஏ. ஆர். சீனிவாசன்' என்று அச்சிறுவன் கத்துகிறான். அப்பிள்ளை தமிழில் பெயர் சொல்லுமா என்பது ஐயத்திற்கிடமாகி விட்டது. அதனால் 'ஆங்கிலமே ஆங்கிலமே! எங்கள் ஆசையுள்ள ஆங்கிலமே!' என்று பாடலாம் போலத் தோன்றுகிறது. சொல்வதைச் செய்யாதவர்கள், செய்வதைச் சொல்வதற்கு வெட்கப்படலாமா? இன்று தொலைக்காட்சிப் பெட்டியில் ஒரு நாடகம் பாருங்கள். அதில் அதைத் தயாரித்த தமிழர் அனைவரது பெயர்களும் ஆங்கில முன்னெழுத்துடனேயே இருப்பதைக் கண்டுகளியுங்கள்!

*- தமிழ்மணி 29.12.1990*

## பெயர்களின் முதல் எழுத்துக்கள் : சில வினாக்கள்

10.11.90 'தமிழ்மணி' சங்கப் பலகை பகுதியில் செட்டி நாட்டு வட்டாரத்தில் தமிழ் வழக்கு பற்றிக் குறிப்பிடுகையில், அப்பா – அப்பச்சி; அம்மா – ஆச்சி; வந்தார்கள் – வந்தாக என்கிற சொற்களை எடுத்துக்காட்டியிருக்கிறார் திருச்சி ரெங்கராஜன்.

ஆச்சி என்கிற செட்டி நாட்டு வட்டார வழக்குச் சொல் பொதுவாக 'அக்கா' என்கிற பொருளை உணர்த்துவதாகும். அம்மாவுக்கு 'ஆத்தா' என்கிற வழக்குச் சொல்லே கையாளப்படுகிறது. ஆச்சி என்பது குடும்பத்தில் உள்ள மூத்த சகோதரியைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலும் அவர்களுக்குத் தங்கள் பெயர்களில் முதல் எழுத்துக்களில் (விலாசங்களில்) மிகுந்த அக்கறையும் தனித்துவமும் உண்டு என்று அதிலே குறிப்பிட்டு அதற்கு ஏதும் காரணமிருப்பின் தெரிந்தவர்கள் விளக்க வேண்டுகிறேன் என்றும் அவர் கேட்டிருக்கிறார். அவர் எடுத்துக் காட்டியிருக்கிற வீர. பெரி. அழ. முத்தையா என்பதற்கு முன் உள்ள விலாசங்கள் மூன்று தலை முறையைக் காட்டுவதாகும். முத்தையா நாலாவது தலைமுறையைச் சார்ந்தவராவார்.

"நாலு தலைமுறைக்கு வாழ்ந்தவர்களுமில்லை; நாலு தலைமுறைக்குத் தாழ்ந்தவர்களுமில்லை" என்பது பழமொழி. ஆகவே நாலு தலைமுறையை உணர்த்த வேண்டும் என்ற அடிப்படையில்தான் நகரத்தார் தமது விலாசங்களில் அக்கறை காட்டி வந்திருக்கின்றனர் என்பது இதனால் தெளிவாகும். ஆனால் எல்லோரும் நாலு தலைமுறையை உணர்த்த விலாசங்களைப் போட்டுக் கொள்ளுவதில்லை. சிலர் மூன்று, இரண்டு என்ற அளவிலும் போட்டுக் கொள்ளுவதுண்டு. ஆகவே விலாசங்களைக் கொண்டே நகரத்தாரை இனங்கண்டு கொள்ளலாம்.

மேலும் வந்தார்கள் என்பதை 'வந்தாக' எனவும் போனார்கள் என்பதைப் 'போனாக' எனவும் வழக்கில் பேசினாலும், நகரத்தார் எழுத்து நடையில் அப்படிக் கையாளமாட்டார்கள் என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*சுபகாரா.*
*சென்னை - 23.*

ஒரு விளக்கம் . . . .

'தமிழ்மணி' 10 – 11 – 90 இதழில் செட்டி நாட்டில் நகரத்தார் தங்களின் பெயர்களின் முதல் எழுத்துகளில் மிகுந்த அக்கறை காட்டுவதற்கான காரணத்தை ஒரு வாசகர் கேட்டிருந்தார்.

நகரத்தார்களிடையே வழக்கிலுள்ள பெயர்களின் எண்ணிக்கை குறைவு. எனவே ஒரு பெயரையே உடையவர் மிகப் பலர் இருப்பர். பள்ளத்தூரில் வீட்டுக்கு ஒரு சோலையப்பன் என்னும் பெயர் உடையோரும், நாட்டரசன் கோட்டையில் ஒவ்வொரு வீட்டிலும் கண்ணப்பன் என்னும் பெயருடையோரும் இருப்பர். நெற்குப்பையில் சிங்காரமும் அரிமழத்தில் செல்லப்பனும் மிகுதியும் வழங்கும் பெயர்கள். பலருக்கு ஒரே பெயர் இருப்பதாலும் அவர்களை ஒருவரினின்றும் மற்றொருவரை வேறுபடுத்திக் காட்டவும், பழைய நீண்ட விலாசங்களைத் தொடர்புபடுத்திக் கூறும் வழக்கம் உள்ளது. வீரப்பன் செட்டியார் மகன் பெரியண்ணன் செட்டியார்; பெரியண்ணன் செட்டியார் மகன் அழகப்ப செட்டியார்; அழகப்ப செட்டியார் மகன் முத்தையா என்பதன் சுருக்கமே வீர. பெரி. அழ. முத்தையா என்னும் பெயர்.

மேலும் பெயர்களின் முதல் எழுத்துக்களில் முதலிரு எழுத்துகளை வைத்துக் கொள்ளுவதற்கான காரணமும் உண்டு. கண்ணப்பன் மகன் பழனியப்பன் கண. பழநியப்பன் என்றும் கனகசபை மகன் பழனியப்பன் கன.பழனியப்பன் என்றும் கதிரேசன் மகன் பழனியப்பன் கதி. பழனியப்பன் என்றும் எழுத வேண்டும். க. பழனியப்பன் என்றால் 'க' எந்தப் பெயரைக் குறிப்பது என்ற குழப்பம் ஏற்பட வாய்ப்புண்டு. இக்குழப்பம் தோன்றாத வகையில் கண, கன, கதி, என்று முதலிரு எழுத்துகளைப் பெயர்களின் முதல் எழுத்துக்களாக வைத்துக் கொள்கிறார்கள்.

*பழ. அன்புமீனாள்,*
*தமிழ்த்துறை, மீனாட்சிக் கல்லூரி, மதுரை - 2*
*8-12-1990*

✧ ✧ ✧

# 9. தலையெழுத்தில் தடுமாற்றமும் தமிழ் ஊற்றமும்

தமிழனின் தலையெழுத்துப் பற்றிய, என் கட்டுரையைப் (தமிழ்மணி 15–12–1990) படித்த, மேலக் காலனி அரசுயர் பள்ளித் தலைமையாசிரியர் மு. பாலசுப்பிரமணியன் தமிழிலேயே, தலை எழுத்தைப் போட்டுப் பெயரெழுதுவதிலும் கூப்பிடுவதிலும் உள்ள இடர்ப்பாடுகளை மிக விரிவாக, ஆராய்ந்து எழுதியிருந்தார் (தமிழ்மணி : 19–1–1991). அவர் எழுதியிருந்தவற்றில் முக்கிய பகுதிகள் வருமாறு :

தமிழண்ணலின் நம் தலையெழுத்துகள் அல்லது முன்னெழுத்துகள் பற்றிய கருத்துகளைப் படித்தேன். மனப் பழக்கமும், சகவாசதோசமும், நாகரிகம் இது என்ற தவறான எண்ணமும்தான் தமிழனின் தலையெழுத்து, தமிழில் அமையாமல், ஆங்கிலத்தில் அமையக் காரணமாக உள்ளது என்று வருந்தி எழுதியுள்ளார்.

உண்மை.

ஆனால், மேலும் வலுவான காரணம் சில இதற்கு இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

முயற்சி எளிமையும், தெளிவும் விரைவும் கருதியே ஆங்கில முன்னெழுத்துகள் தமிழகத்தில் உயிர் வாழ்கின்றன என்று தோன்றுகிறது.

தமிழ் நெடுங்கணக்கின் குறில், நெடில் அடிப்படையும், உடம்படுமெய், சந்திப்புணர்ச்சியில் ஒற்றுமிகல் முதலான தமிழ் இலக்கண அமைதிகள் சிலவும் தலைப்பெழுத்துகளை, பேச்சு வழக்கில் – தமிழில் வழங்குதலைச் சிரமமுடையதாக்குவதாக எனக்குப் படுகிறது.

பெரி. சோலையப்பனை, 'பெரிசோ' என்று கூவியழைத்துப் பாருங்கள். 'ப்பீயாரெஸ்' என்று அழைப்பதைவிடச் சிரமமாகத்தான் தெரிகிறது.

இராம, பெரியகருப்பனை, 'இராமபெ' என்றோ, 'இராமப் பெரி' என்றோ அழைப்பதினும் 'ஆரெம்பி' எளிதாக உள்ளது.

நான் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியன், எங்கள் பள்ளிச் சுற்றறிக்கைகளில் பள்ளித் துணையாசிரியர்களின் பெயர்ச் சுருக்கங்களை வீ.இரா, சீ.சீ., இரா. இரா.,ச.ம., அ.சு., சீ.வீ.இரா., சு.இர. எனத் தமிழிலேயே எழுதுகிறோம். ஆனால் விளிக்கும்போது ஆங்கிலம்தான்.

ஏன்?

என் பெயர் மு.பா.வை 'மூப்பா' என அழைக்கும் போது, 'மூவன்னா பாவன்னாவா', 'மூனா பானாவா', 'மூவன்னாப் பானாவா', மூனாப் பாவன்னவா' எனக் குறில், நெடில் அறிய அழைப்பதில் நேரமும் முயற்சியும் அதிகம் தேவை. தெளிவும், திட்பமும் ஒரே முறை உச்சரிப்பதில் கொணர்வது கடினம்.

டாக்டர் மு.வ., டாக்டர் வ.சுப. பெயர்களை உச்சரிக்கும் பொழுது அனைத்து எழுத்துகளையும் (அனைத்தும் குறிலே) நெடில்களாகவே உச்சரிக்கிறோம் என்பதைக் கவனியுங்கள். 'மூவா' என்றும், 'வாசூப்பா' என்றும் நெடில் (ஒலி) வடிவம்தான் அவை பெறுகின்றனவே தவிர, குறில் ஒலி கொடுத்து உச்சரிக்கப் படுவதில்லையே! குறிலாக உச்சரிப்பது சிரமமாக இருக்கிறதே! எனவே, பலருள் ஒருவர் கவனத்தை உடனே கவர, தெளிவும், விரைவும் தேவையாயிற்றே! குறில் நெடில் தெளிவுதரப் பெரு முயற்சியும், அதைச் செவிமடுத்து உணரப் பெருங்கவனமும் வேண்டுமே!

தேவன்குறிச்சிக் கல்லுப்பட்டியைத் 'தேக்கல்லுப்பட்டி' என்றும், மல்லப்புரம் கல்லுப்பட்டியை 'மாக்கல்லுப்பட்டி என்றும் குறிப்பிடும்பொழுது, தேவும் மாவும் முன்னெழுத்தாகத் தோற்ற மளிக்காது. அடைமொழியாகவன்றோ அவை பொருள் மயக்கம் தருகின்றன. எம்.கே. பல்கலையை 'மாக்காப் பல்கலை' என்றால் மயக்கம் வரவில்லையா?

எனவே, தலைப்பெழுத்தைத் தமிழில் தருவதில் 'ஒற்று மிகல்' தெளிவு பெறலுக்குத் தடையாக உள்ளதாகத் தோன்றுகிறது.

தா. இன்பராசுவைத் தா.இ. என அழைக்க முடியாது. 'தாயீ' என்போம். பேருந்து எண்களையோ வகுப்புப் பிரிவுகளையோ 6அ, 8ஆ

எனக் குறிப்பிட்டுச் சொல்லலில் வேறுபாடு தெளிவாகக் காட்ட முடியவில்லை. உடம்படுமெய்யால், உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடல், உடம்போடு உயிர் வந்து ஒன்றுதல்களால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாக வேண்டியுள்ளது.

மேலும் மொழிமுதல் எழுத்துகள் இவை என்னும் வரையறையும் இதற்கு இடைஞ்சல்.

'ரா' மொழி முதல் வராது. ரா. பழனிவேலை, 'இ.ரா.ப' என எழுதுகிறோம். R.P (ஆர்ப்பீ) என அழைக்கிறோம். 'இராப்பா' என மொழி முதலில் வாராத 'ரா' வுக்கு இகரம் கொடுத்து, தமிழில் அழைக்க, தலைப்பெழுத்து ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் போலத் தொனிக்கிறதே!

சு. இரவீந்திரனை 'சு.இர'. என்று எழுதி 'எஸ்ஸார்' என எளிதாக அழைக்கின்றோம்.

இரா. இராசரெத்தினத்தை 'ஆரார்' என்றும், சி.வி. இராசேந் திரனை, 'சீவியபார்' என்றும் அழைக்கிறோம். R.R. என்பது 'ஆரார்' என உடம்பொடு உயிர்வந்து ஒன்றியும், C.V.R. என்பது சீவியார்' என்று இஈஐ வழியவ்வும் என உடம்படுமெய் பெற்றும் வழங்குகின்றன. தமிழ் ஒலித்துப் பழகிய தமிழ் நாவுக்கரசுகள், நம்மை அடிமைப் படுத்தி ஆண்ட ஆங்கிலேயரின் மொழி எழுத்துகளையும் தமிழ்வயப் படுத்தி, தமிழ் இலக்கண அமைதிகளால் அடிமைகொள்கிறார்களோ!

ஆங்கிலத்தில் எழுத்துகள் தனியாய் நின்று ஒலிக்கப்படும் பொழுது பெறும் ஒலி வடிவு வேறு. சொல்லினுள் வரும்பொழுது அதுபெறும் ஒலி வடிவு வேறு. இது ஒரு சிறப்புக் குறைபாடான அம்சமே. ஆனால், இந்தச் சிறப்பின்மையே, 'பெரிசோ' வை, 'ப்பீயாரெஸ்' எனக் கூவும் பொழுது தெளிவும், திட்பமும் தருகிறது. எழுத்து இது – தொடர் அன்று என, காதில் பட்டமாத்திரத்தில் புரிந்து போகிறது. இவ்வாறு ஆங்கிலக் கூவல் தனித்தனி எழுத்துகளாய் உணரப்பட்டு, தேவை நிறைவேறுகிறது. தமிழில் அழைத்தால் தனித்தனி எழுத்தா, தொடரா என மயங்க வைக்கிறது. எனவே தான் தமிழனின் தலையெழுத்து ஆங்கிலத்தில் அமைகின்றது என எண்ண வேண்டியுள்ளது.

செட்டி நாட்டு வட்டார வழக்கும் இங்கு நோக்கத்தக்கது. இராமநாதனை 'இராவன்னாமானா' என்பார்கள். சுப்பிரமணியத்தைச்

'சூனாபானா' என்றும், பழனியப்பனைப் பானாழானா' என்றும் அண்ணாமலையை 'ஆனா' என்றும், ஆராவமுதனை 'ஆவன்னா' என்றும் கூவுவார்கள். நமது தாய்த்தமிழின் தூயமணம்கமழும் கூவல் இது. ஆனால் இதிலும் ஓர் உண்மை பொதிந்துள்ளது. இவ்வழக்கில் தந்தையார் பெயரின் முன்னெழுத்தைச் சேர்த்து அழைப்பதில்லை. அழைக்க அரிய முயற்சி வேண்டும். இராம. பெரி. அவர்களை 'பேனாரீனா' என்றழைப்பதிலும், 'இராவன்னாமானா பேனாரீனா' என்றழைக்க முயற்சி அதிகம் தேவை.

முயற்சிச்சுருக்கம் அனைத்துலக மக்களும் வேண்டுவதொன்று. சுருக்கமும் வேண்டும்; தெளிவும் வேண்டும்.

ராக்கெட் யுகம் இது. வேகம் வேண்டும். அதற்கு நாம் அயலார் போக்குவரத்துக் கருவிகளைப் பயன்படுத்திக் கொள்ளுவதைப் போல பேச்சிலும் விரைவு வேண்டி அயலார் எழுத்தைப் பயன்படுத்துகிறோம்.

✧ ✧ ✧

மு. பாலசுப்பிரமணியன் இன்று நாம் பழகிப்போன தடத்தைவிட்டு, வெளியேற முடியாமல் எழுதியவை இவை. ஆங்கிலேயர் வருமுன்பும் நம் பெயர்களும் முன்னெழுத்தும் கூப்பிடுதலும் வெவ்வேறு விதமாக இருந்தன என்பதை மறக்கக் கூடாது. சோலையப்பனைச் சோலை என்றும் பெரியகருப்பனைப் பெரி என்றும் அழைக்கலாம். மு.பா. எனும் போது, நீட்சி ஒலி, பேச்சில் வரவே செய்யும். ஆனாலும் சூழலறிவார், இவர் தான் 'பா' என உணர்வார். Know – வை, No என்றே ஒலிக்கின்றோம். இடம் நோக்கி வேறுபாடறியவில்லையா? U – என்றால், அது `You' – என்பதா அல்லது எழுத்தையா? அங்கு மட்டும் ஆயிரம் சொற்களில் இடம் நோக்கி உணர வேண்டியிருப்பதில், எந்த ஆங்கிலேயனும் சிரமப்படுவதாக, அழவில்லையே.

ப்பீயாரெஸ் – எளிதாம்; பெரிசோ கடினமாம். ஒரு காசிஸ்ரீ எனப் புகழப்படும் கவிஞர் ஒருவர் 'அருசோ' (அரு. சோமசுந்தரம்) என அன்பாக அழைக்கப்படுகிறாரே?

மு.வ., வ.சுப.மா. – எல்லாம் பேச்சில் சற்று நீண்டு ஒலிப்பதால், எழுத்தில் மாறிவிடா, தமிழுணர்வோடு, தமிழறிவும் உள்ளவனுக்கு! But அ ஒலி; put – உ ஒலி; Duty – அதே U – வுக்கு ஊஒலி; Doubt – அதே ரு – ஔ ஒலிக்கும் பயன்படுகிறதே. ஒலிப்பது வேறு – எழுதுவது வேறு – இனமும் இடமும் தெரிகிறதே, ஆங்கிலேயனுக்கு மட்டுமன்றி, அதைப் படிக்கும் மற்றவனுக்கும்!

தமிழை ஒலிக்க ஏதோ முயற்சி கூடுதல் தேவைப்படுகிறதாம்.

ஆங்கிலேயனுக்கு முன்பும், ஆண்டு ஈராயிரத்துக்கு மேற்பட, மனிதர்கள் இருந்தார்கள் – பெயர்கள் இருந்தன – முன்னெழுத்தோ அல்லது தந்தையின் முழுப்பெயரோ முழுவதுமிருந்தது. அம் மரபையும் கற்று, முடிந்தவரை முழுவதும் தமிழாக ஒலிக்க முடியா விடின் தமிழனாகப் பிறந்து என்ன பயன்.

திரு.வி.க., கி.ஆ.பெ., ம.பொ.சி., ஈ.வே.ரா., தா. ஏ.ஞா., அ.ச.ஞா., நா.பா., வி.கோ.சூ., தா.வே.வீ., கு.ப.ரா., தி.ஜ.ரா.வ.ரா – இவ்வாறு முன்பே நூற்றுக்கணக்கில் இருந்தவர்கள், ஆங்கில முன்னெழுத்துக்களில் மூழ்கி அடிமை மனத்தில் பழகி, தாழ்வுமனம் கொள்ளாமுன் தமிழில் அழைத்துக் கொண்டவர்கள் தானே?

✧ ✧ ✧

# 10. தமிழின் எதிர்காலம் ஒரு தொலைநோக்குப் பார்வை

நாடும் மொழியும் தன்னல விரும்பிகளால் ஆளப்படின், அந்நாடும் மொழியும் என்ன ஆகும்?

அவன் நாட்டையும் மொழியையும் இழப்பான்; அவனால் அந் நாடும் மொழியும் அழியும்.

"நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்'' (குறள். 553)

நாள்தோறும் – கணந்தோறும் ஏற்படும் இழிவு நிலைகளை குற்றங் குறைகளை – தீமைகளைத் தேடி ஆராய்ந்து நீக்கி, நன்மைகளைக் கண்டறிந்து ஆக்கமும் ஊக்கமும் தந்து வளர்க்கும் மனமும் திறமும் உடையவனே ஆளும் தகுதியுடையவன். இன்றேல் அவன் அழிவதோடு, அவன் ஆளும் நாடும் மொழியும் அழியும். வள்ளுவர் வாக்கு இது.

இவை பழைய விளக்கவுரைகள். நாட்டிற்குச் சொன்னவை, மொழிக்கும் பொருந்தும்.

இங்கு கடந்த முப்பத்தாறு ஆண்டுகளாக 'நாள்தோறும் நாடித்' தமிழை வாழ்த்திக் கொண்டே வீழ்த்தி வருகிறார்கள்!

இவை களப்பிரர் காலத்தைவிடக் கொடுமையான 'இருண்ட காலம்' என வரலாறு எழுதப்படுகிறது.

இங்கு தரப்படும் 'பட்டியல்' – நடுவுநிலைச் சிந்தனை யாளர்களைக் கட்டாயம் சிந்திக்க வைக்கும்; 'செவிகைப்பச் சொற் பொறுக்கும்' – செங்கோல் ஆட்சியாளர்களைத் திருத்தும், தமிழ் வாழ்வு பெறும்.

பாரதியார், பாரதிதாசன், முத்தமிழ்க்காவலர், மறை மலையடிகள், பாவாணர், பெருஞ்சித்திரனார் போல்வார் எவரும் இன்று இலர்;

ஆனாலும் இஃது அவர்களின் குரல் என்பதை மறவாதீர்! தொலைநோக்குடன் சொல்லப்படுபவை இவை. எனவே கசப்பாகத்தான் இருக்கும்.

சீர்கேடுகளைக் களையாமல்
'செவ்வியல் மொழி' எனக் கொண்டாடலாமா?
வேலி அமைக்காமல், களை எடுக்காமல், நச்சுப் பூச்சிகளை
அழிக்காமல் 'வேளாண்மை' செய்வதா?

விதை பாவியதற்கே விழாவென்றால்
விளைவிப்பது எப்போது?
அதற்கான திட்டம், முயற்சி, உழைப்பு எல்லாம்
கைவிடப்பட்டு, விழாக் கொண்டாடியவர்கள்
வீட்டுக்குப் போய்விடுகிறார்களே!
அறிவிப்போடு மனநிறைவடைவது -
இது தானே நாம் இதுவரை செய்தது - இதனால்
சிலருக்குப் 'பங்கு' உண்டு;
பலருக்கு எதிர்காலப் பரிசு, பணம், பதக்கம், பட்டம் உண்டு.

**தமிழுக்கு என்ன உண்டு?**

'சிங்கப்பூர் இலக்கியப் பரிசு – 2004' விழாவில், ஆங்கிலம் சீனம் மலாய் தமிழ் எனும் நான்கு தேசிய மொழிப் படைப்புகளுக்கும் சமமான முறையில், முதற்பரிசு பத்தாயிரம் வெள்ளி (ஏறத்தாழ மூன்று இலக்க உருபா) என அறிவிக்கப்பட்டபடி 25.11.2004 அன்று, பரிசு தரப்பட்டது. வெளிநாட்டு நடுவர் என்ற முறையில், முதற்பரிசு பெறும் தமிழ்நூலைத் தேர்ந்தெடுத்த என்னையும் அழைத்திருந்தனர். விழாவிற்கு படைப்பாளர், பதிப்பாளர் எனத் தொடர்புடைய நூறுபேர் மட்டுமே அழைக்கப் பெற்றிருந்தனர். இங்கிலாந்து, இந்தோசீனா, மலேசியா, தமிழ்நாடு என நான்கு நடுவர்கள் அழைக்கப் பெற்றிருந்தனர். அமைச்சர் ஒருவர் தன்னந்தனியே வந்து எங்களில் ஒருவராக அமர்ந்தார். மாலை 7 மணி முதல் 8 மணி வரை கலந்துரையாடிக் கொண்டே விருந்துண்டல் – 8.15க்கு விழா தொடக்கம்; 9 மணிக்கு முடிந்தது. அரசுக்குப் பாராட்டு, நன்றிகள், புகழுரைகள், பொன்னாடைகள் எதுவுமே இல்லை!

ஆமாம். தாய்க்கு உதவியதற்காக பெற்ற மகன் எவனுக்காவது விழா எடுக்கலாமா? மனைவிக்குத் தன் கடமையாற்றியவனுக்கு, ஒரு

மாநாடு நடத்துவார்களா? நாம் செய்ய வேண்டிய கடமைகள் ஆயிரம் உள.

அதற்குள், 'நான்தான் முதன்முதலாக எழுதினேன்; நான் தான் செவ்வியல் மொழி என ஆக்க முதன்முதல் முயன்றேன்', 'இல்லை நான் தான் முதலில் தூண்டினேன்.' இப்படி ஒரு போட்டி! இவற்றில் ஒரு காலக் கழிவு.

கடமை செய்யாமலே கதைப்பதில் நாம் வல்லவர்கள்.

செவ்வியல்மொழி ஆனதால், தமிழுக்கு உலக அரங்கில் உரிய இடம் கிடைக்கப் போகிறதாம்.

இங்கு நம் தமிழகத்திற்குள் உரிய இடம் தராமல்,
இந்தப் 'பேத்தல்' எதற்கு?

இந்திய, உலகப் பல்கலைக் கழகங்களில் தமிழுக்கு இருக்கைகள் அமையப் போகின்றனவாம்; ஆய்வுகள் தொடரப் போகின்றனவாம்; இங்கேயே எதுவும் முழுமைபெற நடக்க வில்லையே! எல்லோரும் எப்போது அறிவிப்பார்கள் என்றா காத்துக் கொண்டிருக்கிறார்கள்? என்ன பகற்கனவு இது? நம் முயற்சியின்றி, இம்மியளவும் எதுவும் நடைபெறாது.

தமிழுக்கு பொருளுதவிகள் கிடைக்குமாம். இதுவும் நம் முயற்சிகளைப் பொறுத்தேயுளது. நடுவண் அரசு நமக்குச் செய்தால், மற்ற மாநிலங்கள் எல்லாம் துள்ளி எழும். எனவே நாம் திட்டமிட்டுக் கேட்டுப் பெற்று, பிற மாநிலத்தவரும் நம் மொழி, இலக்கியப் பெருமையை உணரவைப்பதில்தான் இதன் வெற்றியுளது.

நடுவண் அரசின் அறிவிப்பே முறையாக வராததற்கு என்ன காரணம்?

நடுவண் அரசு எல்லா மாநிலங்களிலும் வெற்றி பெற்றாக வேண்டுமே?

நம் தமிழின் தொன்மையை, சிறப்பை, வளத்தை நாம் பிற மாநில மக்களுக்கு, அங்குள்ள கல்வியாளர்க்கு, பல்கலைக் கழகங்களுக்கு முழுமையாக அறிவித்திருந்தால் – இனியேனும் அறிவித்தால், ஒரு வேளை போட்டி குறையலாம்.

இந்திய மாநிலங்கள் எல்லாம், இந்தியை ஒப்புக் கொண்டது தொடர்புக்கு மட்டுமே; அங்கெல்லாம் அவர்கள் நம்மைவிடத் தம்மொழியைச் செம்மொழியாக வளர்த்து வருகிறார்கள்!

தமிழகத்தைவிடத் தாய்மொழியை இழிவுபடுத்தும் நாடு, உலகில் ஒரு நாடுகூட இல்லை. இதை நிறுவ முடியும்; எதிர்ப்பவர்களுடன் தருக்கமிட முடியும்; இதைப் படித்து, மானமுள்ள எவரேனும் வழக்காட முன்வருக என அறைகூவி அழைக்கின்றோம்.

**கல்வித்துறையில் இழிவு : எண் –1**

தமிழகத்தில் ஒப்பிசைவு பெறாத, ஒரு நூறாயிரம் பள்ளிகளுக்கு மேல் உள. ஒப்பிசைவு, கட்டுப்படுத்தப்படாததால் கணக்கிட முடியவில்லை. மாட்டுத் தொழுவம், கூரை வேய்ந்த குடிசை, சிறிய வீட்டு மேல்தளம், வெட்டவெளி மரத்தடி எல்லாம் மழலையர் பள்ளிகள்; பிறகு ஐயாயிரத்திற்கு மேற்பட்ட பதின்மப் பள்ளிகள்; இவற்றில் அரசு இசைவின்றி நடப்பனவுமுண்டு.

இந்த ஆண்டுப் பாடத்திட்டப்படி, மூன்று அகவை முடிந்து பள்ளியில் சேர்க்கும் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பாடமே இல்லை. இதுபற்றி

கல்வியாளர் இராசகோபாலன், எழுதிய கடிதம் இது:

### தமிழ்ப்படிப்பு எங்கே?

செம்மொழியாகத் தமிழ் அறிவிக்கப்படவுள்ளது. கண்டங்கள் தோறும் பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் படிப்பிற்கு வழிகோலவும், பிறமொழிகள் பலவற்றிலும் நமது பண்டைய இலக்கியங்கள் மொழிபெயர்க்கப் படவும் இவ்வறிவிப்பு வகை செய்யும் எனக் கருதப்படுகின்றது. விரைவில் இந்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாகத் தமிழை ஆக்குவோம் என்றும் அரசியல் கட்சிகள் குளுரைத்துள்ளன.

இந்நிலையில், தமிழ்நாட்டில் தமிழ்ப்படிப்பு செல்லும் திசை ஒவ்வொரு தமிழனையும் வெட்கித் தலைகுனியச் செய்யும். அண்மையில் வெளியிடப்பட்டுள்ள பதின்மப் பள்ளிகள் பாடத் திட்டத்தில், நாற்றங்கால் (கிண்டர் கார்டன்) முதல் ஆண்டில் ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்படுகின்ற வேளையில், தமிழ் இடம்பெறாதது அதிர்ச்சியைத் தருகின்றது. தாய்மொழி முதன்மொழியாகக் கற்பிக்கப்படாதது வேடிக்கை. இரண்டாம் ஆண்டில், முதன்மொழியாக ஆங்கிலமும் பதினோராவது பாடமாகத் தமிழும் சேர்க்கப்பட்டுள்ளது உலகமகா அதிசயங்களில் ஒன்றாகும்.

> நாற்றங்கால் பாடத்திட்டம் உலகந்தழுவிய கல்விக் கொள்கைகளுக்கு முற்றிலும் முரண்பட்டுள்ளது. முன்பள்ளிக் கல்வி பற்றிய உளவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் மாற்றி அமைத்து, செயல்திட்டத்தை வகுக்க வேண்டும். மூன்று நான்கு அகவைக் குழந்தைகளின் மீது சுமத்தப்பட்டுள்ள கடுஞ்சுமை ஒரு சித்திரவதையே!
>
> *(தினமணி 30.09.2004)*

பிஞ்சு நெஞ்சங்களில் இந் நஞ்சு விதைக்கப் படலாமா? தமிழ் எழுத்தும் எண்ணும் பெயரும் பிறவும் தெரியாமல் வளரும் குழந்தை, பிற்பாடு தாய்மொழியை அறவே இழந்துவிடாதா?

ஆங்கிலம் நமக்குக் கட்டாயத் தேவை என்றாலும் இவ்வாறு, தாய் வயிற்றிலிருக்கும் போதே, கருவில் உருவாகும் குழந்தைக்கு, ஆங்கிலப்பால் ஊட்டும் அரசு, உலகில் எங்கேனும் உண்டா? இதைக் கேள்விப் பட்டால் ஆங்கிலேயனே காறி உமிழ்வானே? தன்னலப் பதவிப்படுகுழியில் சிக்கித்தவிக்கும்வரை, தமிழைக் காப்பாற்றுவது அரிதே!

**தமிழை - அரசு இழிவுபடுத்திய நிலை -2**

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக மூன்றாம் வகுப்பிலேயே ஆங்கிலப் பாடம் தொடங்கியது.

ஆங்கிலேயர் காலத்தில்கூட ஆறாம் வகுப்பிலிருந்துதான் ஆங்கிலப் பாடம் தொடங்கியுள்ளது. கருநாடகத்தில் பேராசிரியர் சந்திரசேகர் பட்டீல் தலைமையில் அமர்த்தப்பட்ட ஒரு வல்லுநர் குழு, மழலையர் முதல் ஏழாம் வகுப்பு முடியத் தாய்மொழியே பாடமொழியாகவும் பயிற்று மொழியாகவும் அமைய வேண்டுமென வற்புறுத்திப் பரிந்துரைத்தது. அது பன்னிரண்டு பேர் கொண்ட வல்லுநர் குழு. மேலும் மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் ஒருமொழிப் பாடமாகக் கற்பிக்கப்படலாம் என்றும் கூறியது (Decan Herald 6-5-99) அப்போது நான்காம் வகுப்புவரைதான் அங்கு தாய்மொழிவழிக் கல்வி மட்டுமே என இருந்தது. அரசாணையில், 'கருநாடகத்திற்குள் எந்தப் பள்ளியிலும், நான்காம் வகுப்பு வரை, எந்த நிலையிலும் ஆங்கிலம் நுழைக்கப்படக் கூடாது' என்ற வரி இருந்தது.

ஏழாம் வகுப்பு வரை தாய்மொழியே பயிற்றுமொழி என்பது பற்றிக் கேட்டபோது, ஆங்கிலப் பேராசிரியர் 'ஞானபீட'ப் பரிசு பெற்றவர், யு.ஆர். அனந்தமூர்த்தி, அதுதான் முறையான முடிபு, பிறமொழி அதற்குமுன் ஏன்? என விடை கூறினார். அங்கு ஆங்கிலம் கற்ற, அறிவுள்ள கல்வியாளர்கள் இருக்கிறார்கள். இங்கு 'பாதந்தாங்கிகளுக்கே' பதவி. அதனால் நிலைமை வேறு.

இன்று கருநாடகத்தில் பட்டீலின் பரிந்துரை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. சான்றுக்காக ஒரே ஒரு செய்தி; அது 'தினமலரில்' வெளிவந்தது (17.6.2002) :

> தலைப்பு – 'ஐந்தாம் வகுப்பு வரை கன்னட மொழியில் பாட போதனை' – 'கருநாடக அரசு கிடுக்கிப்பிடி'. நான்காம் வகுப்புவரை என இருந்த, கன்னடப் பயிற்று மொழி ஆணையை விலக்கல் செய்துவிட்டு, இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. இது நடுவண் அரசுப் பள்ளிகளையும் கட்டுப்படுத்தியது. ஐந்தாம் வகுப்பில் ஆங்கிலவழி பயிற்றத் தொடங்கிவிட்ட சூன் மாதச் சூழலிலும் இது பிறப்பிக்கப்பட்டதால், அனைத்து ஆங்கில வணிகப்பள்ளிகளும் திணறிப் போயின. எனினும் அங்கு வாலாட்ட முடியவில்லை.

அங்கு தொடக்கக் கல்வி, தாய்மொழி வழியில் ஏறுமுகத்திலிருக்கவும், இங்கு இறங்கு முகமாவதேன்?

அரசுக்குத் தமிழ்க் கல்வியை அறவே ஒழிப்பதே 'உள்நோக்கம்' என்பது புலனாகவில்லையா?

## இழிவுபடுத்தும் நிலை - 3

ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு முடிய மாநிலத் தாய்மொழியாம் தமிழே கட்டாய பாடமாதல் வேண்டும். அனைத்துப் பள்ளிகளும் இதைப் பின்பற்ற வேண்டும். தமிழே பாடமொழியும் பயிற்று மொழியுமாக ஒருவரையறுக்கப்பட்ட சட்டமியற்ற வேண்டும் என உயர்நடுவர் மோகன் குழு 1999 – சூன் மாதம் பரிந்துரை அளித்தது.

ஆனால் அன்றையத் தமிழக அரசு 'தெளிவான மொழிக்கொள்கை இன்றித்' தவித்தது. இன்றைய அரசுக்கும் அதே நிலைதான். அதனால் இவ்விரு திராவிட அரசுகளும் ஒன்றையொன்று நாள்தோறும் மறுத்துத் தாக்கிப் பேசிக் கொண்டாலும், மொழிக் கொள்கையில் எதிர்த்துப் பேசவோ, அறிக்கைவிடவோ, ஆர்ப்பாட்டம் நடத்தவோ முயல்வது இல்லை.

13–1–1999 இல் பிறப்பிக்கப்பட்ட அரசாணை இது :

"நர்சரி மற்றும் ஆரம்பப் பள்ளிகளில் கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களில், **ஏதாவது** இரண்டைத் தமிழில் சொல்லித்தர வேண்டும்" என்பது அது. மொழிக்கொள்கையின் அழகு (!) ஏதாவது என்பதில் தொக்கி நிற்கிறது.

பிறகும் மோகன் குழு அறிக்கைப்படி, சட்டமாக்காமல் தொடக்கக் கல்வி தமிழில் இருக்க வேண்டுமென ஓர் ஆணை மட்டுமே பிறப்பிக்கப்பட்டது. இதைப் பகடி செய்து, உயர் அறமன்றம், ஆங்கில வழிக்கு வெற்றிவாகை சூடியது. பிறகு உச்ச அறமன்றம் போனதும் தமிழக அரசுகள் இன்றுவரை காரண காரியத்துடன் வழக்காடவில்லை. தனிமனிதருக்கு எனில், காலை, மாலை, இரவு – வழக்குமன்றத்திலும் பிறகு நடுவர் வீட்டிலும் கூட வழக்குகள் தொடரப்பட்டு, வாய்ப்பான தீர்ப்பைப்பெற வழக்காடும் இவர்கள், நமக்குப் பேச வாய் தந்த தமிழுக்கு, தம் வாய்திறந்து வழக்காடாமல் உடைப்பில் போட்டுவிட்டனர். இதில் மட்டும் திராவிட அரசுகளிடையே வேற்றுமை இல்லை. தமக்கு என்றால் வழக்கிற்குமேல் வழக்கு. காலத் தாழ்வு செய்ய வழக்கு; வெற்றி பெறும் வரை வழக்கு. தாய் மொழிக்கு ஒரு வழக்கு வந்தது, கிடப்பில் கிடப்பதேன்? எவருமே இதைத் தட்டிக் கேட்காதது ஏன்? தன்னலம் தொலையாமல், தமிழ் நலம் காக்க முடியாது.

தமது தன் வரலாற்றை, குசராத்தியில் முதலில் எழுதிய, காந்தியடிகளின் கருத்து யாது? தமது பாக்களை வங்காளத்திலேயே முதலில் எழுதி, பிறகு ஆங்கிலத்தில் ஆக்கிய தாகூரின் கருத்து யாது? 'வங்கம் போல வளர்ப்பீர் தாய்மொழி' என **கா. அப்பாத்துரையார்** முன்பு ஒரு முழக்கவாசகம் தந்தது ஏன்?

அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்து
ஆங்கிலம்பயில் பள்ளியுட் போகுநர்;
முன்னம் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்கும் இந் நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியும் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்
என்ன கூறிமற்று எங்கனு ணர்த்துவேன்!
இங்கிவர்க் கெனதுள்ளம் எரிவதே (தன்வரலாறு)

'பெரும்பாவலர் பாரதி' எனப் பலரும் போற்றும், தமிழ்த்தாய் தந்த தவப்புதல்வன் 'ஆங்கிலப் பயிற்சி' பற்றிப் பாடியுள்ள ஒன்பது விருத்தங்களில் இதுவும் ஒன்று. 'ஊணர், புல், ஊன், நரி, நாய், பேடியர், அற்பர், பேடிக் கல்வி, விலங்கினம் வாழும் குகை, ஆங்கிலக் கலை என்று ஒன்றுணர்த்திய பொய்யர், பேரிருள்' – இவ்வாறு அப்பாடல்களில் வரும் ஒவ்வொரு சொல்லும் இன்றைய நம் தலைவர்களுக்குப் பொருந்தும்; ஆங்கில வணிகர்கட்கு மிகவும் சிறந்த பட்டப் பெயர்களாகும். உள்ளம் எரிகிறது – என்றார் அவர்; அத் தழல் இன்றளவும் தணியவில்லை.

வங்காளத் துணைவேந்தர் பவித்திர சர்க்கார், அம் மாநில அரசுக்குத் தந்த அறிக்கையில் (1998) B.G. Kher Commission (1995). Prof. G.C. Banerjee U.G.O. Review Committee for English in indian Universities, Kothari Commission (1964-66) NCERT (1985), நடுவணரசின் அரசியலமைப்புச் சட்டப்படியான குறிப்பு என மிகப் பலவற்றை மேற்கோள் காட்டி, தொடக்கக்கல்வி முழுவதும் அவரவர் தாய்மொழியாகவே இருக்க வேண்டுமென அவர்கள் கூறியவற்றைக் கொண்டு வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவிலும் சிங்கப்பூரிலும் ஆங்கிலம் கற்பித்தலில் பயிற்சி கொடுத்துவரும் ஆங்கில வல்லுநர் எனப் பன்னாட்டு அளவில் புகழ்பெற்றவருமான பேரா. பிரபு, இந்திய ஆங்கில ஆசிரியர் மாநாட்டில் தாமரைத்திரு. எசு. நடராசன் நினைவுச் சொற்பொழி வாற்றுகையில், "ஆங்கிலத்திற்கு முதலிடம் கொடுப்பது, மொழி மற்றும் பண்பாட்டுச் சிதைவை உருவாக்கும். ஒரு மொழிக்கேயுரிய நாட்டுக் கலைகள் அழியும். தாய்மொழியே முதன்மொழி. அதில் நல்ல பயிற்சி பெறும் வரையில் பிற மொழியினை, குறிப்பாக ஆங்கிலத்தை அறிமுகப்படுத்தக் கூடாது. உலகளவில் 218 மொழிகள் மறைந்தற்கு ஆங்கிலப் பற்றே கரணியம். மேலும் பல மொழிகள் அழியும் நிலையிலுள்ளன" என்று பேசியதை, எசு.எசு. இராசகோபாலன் எடுத்துக்காட்டியுள்ளார். *(தினமணி 16.06.2003)*

இவற்றுடன் தாய்மொழிக்கு ஆதரவான உச்ச அறமன்றத் தீர்ப்புகள் பலவுள. கருநாடக அரசு, தொடர்ந்து வழக்காடி, நல்ல தீர்ப்பை உச்சசீதி மன்றத்தில் பெற்று, இன்று ஆங்கிலவழிப் பள்ளி முதல் நடுவணரசுப் பள்ளி வரை, அனைத்துப் பள்ளிகளையும் ஆட்டிப் படைக்கிறது.

"Constitution of india - Arts 29+30 and 32, 136, 226, - Language policy in education - G.O. bringing about academic discipline as a regulatory measure - it is a policy matter not open to court interference" என்பது அதன் பிழிவு. இத்தீர்ப்பு முழுவதுமே, நம் தமிழுக்கும் உச்சநயமன்றத்தில் வழக்காடி வெற்றிபெற உதவும்.

அண்மையில் மராட்டியத்திலுள்ள குசாராத்திப் பள்ளியினராம் சிறுபான்மையினர், தம் பள்ளிகளில் மராத்தியைக் கட்டாயமாக்கக் கூடாது என வழக்குத் தொடுத்தனர். அவ்வழக்கு உச்சநயமன்றம் வரை சென்றது. அங்கு, 'சிறுபான்மையினர் தம் மொழியைப் படிக்க ஏந்து செய்து தரவேண்டும். ஆனால் அதே சமயம் தாம் இருக்கும் மாநில மொழியான மராத்தியையும் படித்தேயாக வேண்டும் என நல்ல தீர்ப்பு வழங்கியுள்ளது. கேரளத்திலிருந்து ஒரு வழக்கு உச்ச நயமன்றம் வரை சென்றது. அது பூசனை (அருச்சனை) வழிபாடு பற்றியது. "தகுதியுடைய எவரும் பூசகராகி, எம்மொழியிலும் வழி படலாம்" என்பது தீர்ப்பு. இவற்றை எல்லாம் பயன்படுத்திக்கொண்டு, வழக்காடி வென்று, ஐந்தாம் வகுப்புவரை தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தமிழைக் கட்டாயப் பாடமாக்க எவ்வளவு நேரமாகும்? தமிழை வழிபாட்டு மொழியாக்க எவ்வளவு காலமாகும்? சட்டப்படி வங்காளத்திலுள்ள உயர்நயமன்றத்தில், வங்காளத்திலேயே வழக்காடலாம் என்றிருக்கும் போது, தமிழகத்தில் அதைக்காட்டி நடைமுறைப்படுத்தத் தடை யார்? ம.கோ.இரா. (M.G.R.) ஆட்சிக் காலத்தில் தமிழ்வழி – பொறியியல், மருத்துவப் பட்டவகுப்புகளைத் தொடங்க, 400 பக்க அளவில் பேரா.வ.அய். சுப்பிரமணியம் தந்த அறிக்கையைக் கிடப்பில் போட்டது ஏன்? 1997இல் தமிழ்வழி பொறியியல் கற்பிக்க அறிவித்ததும், 630 விண்ணப்பம் வந்தனவே; 16 பேராசிரியர் முன்வந்தனரே; இந்தியா முழுவதும் தேசிய மொழிகள் பெற்றதை, முறைப்படி அணுகாமல் தவறவிட்டதேன்? நடுவணரசின் தேர்வாணையம் (U.P.S.C) எந்த ஒரு தேர்வையும் (ஆங்கிலம் தவிர) அவரவர் தாய்மொழியிலும் எழுதலாம் என நடைமுறைப்படுத்தியதைக் கூட நாம் பின்பற்ற முடியவில்லையே?

இதைச் செய்ய முடியாத அரசுகள் கையாலாகாதவை எனலாமா? வேண்டுமென்றே தமிழை இழிவுபடுத்துகின்றன எனலாமா? திராவிட இயக்கத்தின் நோக்கம் தமிழால் வாழ்ந்து தமிழை அழிப்பது; தமிழை விற்றுப் பணம் குவித்து வாழ்வது; தமிழை அடைமானம் வைத்துப் பிழைக்கத் தயங்காதது; தமிழை வாழ்த்திக்கொண்டே படுகுழியில் வீழ்த்துவது – என இவ்வாறு உலகம் கணிப்பதை எவ்வாறு மறுப்பது?

அனைத்துத் தரப்பினரையும் நோக்கித் தமிழன்னை, "உனக்கு ஒரு குறையென்றால் நூறுமுறை நயமன்றை நாடி அலைகிறாயே?' எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' எனக் கொணர்வேன் என்று பறைசாற்றினாயே? எனக்காக ஒரு வழக்காடாமல் போனாயே? நீயும் ஒரு தமிழனா – தமிழச்சியா?" என வயிறெரிந்து குமுறிக் கேட்பது எவர் செவிகளிலும் ஏறாதது ஏன்?

பாரதியார் 'உள்ளம் எரிகிறது' என்றார். இன்று தமிழுக்கு எதிராகத் தமிழர்களே நெருப்பைப் பற்ற வைத்து, எரிதழலில் தாமே வீழ்ந்து மடிய வழிகாட்டியது ஏன்? யார்? எப்படி?

**இழிவுநிலை - 4**

1968 சனவரி 24 இல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் அதிகாரிகளின் தந்திரத்தால், தமிழ் என்று போட வேண்டிய இடத்தில் 'வட்டார மொழி' Regional Language எனப் போடப்பட்டுவிட்டது. அடுத்த பிரிவில் 'English' எனத் தெளிவாகப் போடப்பட்டுள்ளது.

ஆங்கிலேயன் பயன்படுத்திய இழிவான சொற்களில் ஒன்று தாய்மொழியை "வட்டார மொழி' என்றது. விடுதலை பெற்ற பிறகும், இந்தி வல்லாண்மையைப் புகுத்த எண்ணி, மற்ற மொழிகளை அடிமையுணர்வுடையனவாக்க முயன்ற பேராயக்கட்சியும் அதே சொல்லைத் திரும்பக் கையாண்டது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் எட்டாம் பட்டியலில், 14 தேசிய மொழிகள் எனக் குறிப்பிட்டிருக்கவும், நடைமுறையில் 'வட்டார மொழிகள்' என வழங்கி இழிவு படுத்தினர். அவ் வகையில் பிரெஞ்சு, சமற்கிருதம், இந்தி, உருது என அனைத்துமே அப்பெயரில் அடங்கிப் போனதால், மேற்கூறிய அரசாணை தவறாகப் பயன்படுத்தப்பட்டு, முதன்மொழிப் பிரிவில் தமிழ் அறவே விடப்பட்டு, இன்று தமிழகப் பள்ளிகளில் தன்மொழியாகத் தமிழ் தவிர்த்தவை கற்பிக்கப்படுகின்றன.

இந்தியாவிலேயே தாய்மொழி – தமிழ் கட்டாயமில்லாத ஒரே மாநிலம் தமிழ்நாடு ஒன்றே. இங்கே மழலையர் முதல் பட்டப்படிப்பு முடியத் தமிழை விட்டுவிட்டுப் பிற மொழிகளை மட்டுமே படித்து வெளியேற வாய்ப்புளது. இது கடந்த 36 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தும், இதை நீக்கம் செய்யாதது ஏன்?

மாற்றாகத் தமிழைக் கட்டாயப்படுத்தாமல், அது செம்மொழியாகிவிட்டது எனக் கூத்தடிப்பது ஏன்? புகழ், பாராட்டில்,

மூழ்கித் திளைக்கும் ஒருவனுக்காவது சூடு சுரணை இல்லாது போனது ஏன்? இதைச் சொன்னால், இக் கேள்வியை எழுப்பினால் உனக்குப் பட்டம் வராது; பதவி பறிபோகும்; பணம் கிடைக்காது; பதக்கம் பெற முடியாது; பகட்டு வாழ்க்கை அமையாது; நீ பிணப்பெட்டிக்குள் போகும் வரை பணப் பெட்டியைக் கட்டி அழ முடியாது என்று தானே கைவிடுகிறாய்? இடுப்பு வேட்டியைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு, தன்மானம் பேசும் தமிழனே, நீ தமிழை வாழ்த்தி, பாராட்டி, 'தாயே உயிரே' என நடிக்கலாமா? – அன்னைத் தமிழ் எழுப்பும் வினா இது.

தமிழே தெரியாத பலநூறாயிரம் பேரை, இங்கே உருவாக்கிவிட்டு, தமிழைச் செம்மொழியாக்கிவிட்டோம்; இனி நடுவணரசில் ஆட்சிமொழியாக்குவோம் எனப் பேசினால், யாரை வைத்து இவை நடக்கும்? வெற்றிபெறும்? தமிழ் எண்ணும் எழுத்தும் சொல்லும் தெரியாத பிள்ளைகள், உங்கள் வீட்டிலும் அடுத்த வீடுகளிலும் இருப்பதையாவது ஒவ்வொரு தமிழனும் பேசிப் பார்க்க வேண்டாமா?

தன்னை ஏமாற்றிக் கொண்டால் மன்னிக்கலாம்; தாயை, தமிழை ஏமாற்றலாமா?

கல்வியாளர், அறிஞர், அரசியலார், சான்றோர், தமிழ் அமைப்புகளென நடத்துபவர்கள் – இவ்வாறுள்ளவர்களில், சிலராவது கொதித்து எழாதது ஏன்? தமிழ் எண், எழுத்து, தொடர் தெரியாத, பல நூறாயிரம் பச்சிளங் குழந்தைகள், வளர்கின்றனரே? இன்றிருப்பவர்கள் மண்ணுள் புதைந்து மறைந்தொழிவோம். அன்று தமிழ் நாட்டில் கூட, யாரை வைத்துத் தமிழ் ஆட்சிமொழியாகும்? இதை விட்டுவிட்டு நடுவணரசில் தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டி முழங்குவதைக் கேட்டால், உலகம் சிரிக்காதா?

### இழிவுபடுத்தும் நிலை - 5

இவ்வாறு தமிழே படிக்காமல் வெளியேறுவதைத் தடுக்கப் போவதாக, முதலைக் கண்ணீர் வடித்த இன்றைய திராவிட அரசு, 'அறிவியல் தமிழ்' என ஒன்றைக் கொண்டு வருவதாகக் கூறியது. ஆனால் அதற்கான பாடவேளை இல்லை; அது கட்டாயப் பாடம்; ஆனால் அதில் தேர்வு கிடையாது; மேல் வகுப்புக்குப் போக, அதைப் படித்துத் தேர்ச்சி பெற வேண்டியதில்லை.

(It is a compulsary subject... But there will not be examination in it and also it will not be considered for any promotion)

இந்த அறிவிப்பு, தமிழை இழிவுபடுத்த வில்லையா? மானக்குறைவு இல்லையா? அட, அடிமைத் தமிழ்மகனே! நீ அதிகாரியாய், கல்வியாளனாய், அமைச்சனாய் எப்படி வேண்டு மானாலும் இருந்துபோ! ஆனால் இது தமிழை இழிவுபடுத்துவது என்பது உன் மனத்தில் படாதது ஏன்? எதிர்த்துக் குரல் கொடுக்காதது ஏன்?

பல பள்ளிகளில் இவ் 'அறிவியல் பாட நூல்கள்' கிடங்கில் போடப்பட்டுள்ளன. பலருக்கு ஆசிரியர்களுக்கே, இவ்வாறு ஒரு பாடம் வந்திருப்பது தெரியவில்லை.

தமிழை இழிவுபடுத்தி, அழிப்பதையே உள்நோக்கமாகக் கொண்ட இன்றைய திராவிட அரசு, ஆங்கில அறிவை மேம்படுத்த, 300 அரசுப் பள்ளிகளில் ரூ.3 கோடியில், ஆங்கிலப் பயிலகங்களை ஏற்படுத்தப் போகிறது. (தினமணி 22–6–04)

தமிழே தெரியாத ஆசிரியர்கள் நூறாயிரம் பள்ளிகளில் தமிழ்ப்பாடம் நடத்துவதை அறியாததா இந்த அரசு? அவர்களுக்குப் பயிற்சிதர வேண்டாமா? தமிழ் அழியட்டும் என்பது தானே உள்நோக்கம்?

ஆங்கிலேயரின் பிறங்கடைகள் கூட நினைக்க மறுப்பதை, இவர்கள் செய்வன ஆங்கில மொழி அறிவை வளர்க்க அல்ல; தமிழை அழிக்கவேயாம்.

தமிழைச் செவ்வியல்மொழி ஆக்கி, அறிவித்த பிறகும், இச்சீர்கேடுகள் தமிழகத்தில் ஏன்?

## இழிவுநிலை - 6

கணக்கின்றி பதின்மப் பள்ளிகளைத் தொடங்கித் தொடர்ந்து வளரவிடுவது ஏன்? தாய்த்தமிழ்ப் பள்ளிகளை அரவணைக்காத, இப் 'போலிகள்', பதின்மப் பள்ளிகளுடன் உறவாடி, வணிகத்தில் பங்கு பெற்று, அமைச்சர்களே கரவுப் பெயர்களை (பினாமிகளை) வைத்து, இப் பள்ளிகளை நடத்தி தமிழை நாளும் கொன்று வருவது கண்கூடு.

பிள்ளைகள் தமிழில் பேசினால் தண்டனை; பெற்றோர்களும் ஆசிரியர்களும் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும்.

எத்தனை இழிவுகள்? என்ன என்ன இழிவுகள்? ஆங்கிலம் நமக்கு வேண்டும். ஆனால் அதற்கு இவ்வாறா?

ஆங்கிலத்தை ஒரு மொழிப்பாடமாக மட்டும் படித்தவர்கள், இன்று உலகை வலம் வர முடிகிறதே?

கொலை செய்வதும் குற்றம்; கொலைக்குத் துணை போவதும் குற்றம்தானே?

'தனிப்படிப்பு' முறையை வைத்துக்கொண்டு, நூறாயிரம் பள்ளிகள், ஏற்பாணையின்றியே, ஆட்டம் போடுகின்றன. இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் கர்நாடக அரசின் ஆணை உள்ளதே.

'இருமொழிக் கொள்கை'யுடையவர்கள், பதின்மப் பள்ளிகளையும் இருமொழியிலும் நடத்தக் கட்டுப்படுத்தியிருக்க வேண்டும்? Medium of instruction should be only in English. என இருக்கவிடலாமா? Either in Tamil or English என்றல்லவா இருக்க வேண்டும். அது தமிழ்வழி பதின்மப் பள்ளிகள் தோன்ற வாய்ப்பளித்திருக்குமே? அனைத்து நூல்களும் தமிழிலும் தோன்றியிருக்குமே? வினாத் தாள்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் என இருந்திருக்குமே? ஒரு சிலர் – ஆர்வமுள்ளவர்கள் தமிழில் நடத்த முன்வந்தும் 'விதி' இடம் தரவில்லையே!

நடுவணரசின் தேர்வாணையம் தாய்மொழியிலும் ஆங்கிலத்திலும் என இருமொழிக் கொள்கையைப் பின்பற்ற, பிற மாநிலங்கள் எல்லாம் அதன்வழி நடக்கின்றனவே.

உண்மையில் இருமொழிக் கொள்கை என்பது என்ன?

## இழிவுநிலை –7

அரசுப் பள்ளிகளிலும் அரசுசார் பள்ளிகளிலும் முழுவதும் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக மட்டுமே நீண்ட காலம் இருந்தது. அதில் முதல் பிரிவு (A Section) ஆங்கிலவழி என மாற்றி சுமார் நாற்பதாயிரம் பள்ளிகளில் ஆங்கில வழியைப் புகுத்தினர். இதனால் அந்த முதற்பிரிவில், நூறு இருநூறு மாணவர்கள் அதாவது ஒரே பிரிவில் நூற்றுக்கு மேற்பட்டோரைச் சேர்த்து, வகுப்புகள் நடைபெறுகின்றன. அங்கே உயர்குடி, தாழ்ந்தகுடி என இரண்டு வகுப்பு வேறுபாடு புகுந்து, தமிழ்வழி படிப்பவர்கள் இழிவாக மதிக்கப் படுகின்றனர். சிறந்த ஆசிரியர்களை ஆங்கில வழிக்கு அனுப்புவதாக, இந்தத் தமிழ்வழி மாணவர்கள் குறைகூறுகின்றனர். தமிழை இழிவுபடுத்துவதாகாதா இது?

பள்ளியிறுதி வகுப்பு வரை ஆங்கிலத்தை ஒரு மொழிப்பாடமாக மட்டும் கற்றவர்கள், சிறந்த ஆங்கிலப் புலமை பெறவில்லையா?

இன்று ஆங்கிலம் நன்கு தெரிந்தவர்களா ஆங்கிலப் பாடம் நடத்துகின்றனர்? ஆங்கிலத்தை முறைப்படி, நன்றாக, அழுத்தமாக – ஒரு பயன்பாட்டு மொழியாக, நடைமுறை உரையாடல் மொழியாக, கூச்சமின்றிப் பேச, எழுத வல்ல மொழியாக – அதாவது ஒரு மொழிப்பாடமாக மட்டுமே. அனைத்து வகுப்புக்களிலும் ஒரே மாதிரி நடத்தலாமே? அனைவருக்கும் சமமான உரிமை கிடைக்குமே?

ஒன்று மட்டும் உறுதி; ஆங்கிலவழி எல்லாப்பாடமும் படிப்பதால் ஆங்கில வல்லுநராவதைவிட, எல்லாப் பாடத்தையும் தாய்மொழியில் படித்து, ஆங்கிலத்தை ஒரு 'தொடர்பு மொழியாகப்' படித்தாலே, அம் மொழியில் வல்லுநராக முடியும்.

## இழிவுநிலை -8

தமிழ்நாட்டு ஊடகங்கள் தமிழைக் கலப்படமாக்கிச் சிதைத்து வருவது கண்டு, உலகத் தமிழர்கள் வருந்துகிறார்கள். நாளிதழ், தொலைக்காட்சி, திரைப்படம் இவை தமிழைச் சிதைப்பதையறிந்து தடுக்க வேண்டும். அரசு நினைத்தால் சட்ட மின்றியேகூடத் தடுக்க முடியும். சட்டம் வகுத்தும் நிறைவேற்றி, நடைமுறைப் படுத்தாத – படுத்த முடியாத அரசுகள் இவை. முதலில் விளம்பரம் தருவதை நிறுத்துவதாக அச்சுறுத்தலாம். வேறுபல இடுக்கண்களை உண்டாக்கி, அவை தமிழை முறைப்படி பயன் படுத்தச் செய்யலாம். வல்லுநர் குழு அமைத்து வழிகாட்டிக் கையேடுகள் வெளியிட்டு, அவற்றைப் பின்பற்ற வற்புறுத்தலாம்.

இவை பற்றிய எண்ணமேயின்றி, இழிவுபடுத்துபவர்களை ஊக்கப்படுத்துவது தவறாகவே முடியும்.

## இழிவுநிலை – 9

தமிழில் வழிபாடு, பூசனை நடைபெற, அறநிலையத்துறை ஆணையராக நியமிக்கப்பட்ட மெய்கண்டதேவன், முயன்று வெற்றி பெற்றார்.அந் நிலையில் சங்கரமடமும் பிராமணியமும் தலையிடவே, மாண்புமிகு தமிழக அரசு, அவரை உடனே மாற்றிவிட்டு, சுகவனேசுவரர் என்பவரை அமர்த்தி, தமிழ்வழிபாடு தடைப்படுத்தப்பட்டுப் போனது. தமிழ் எங்கள் உயிர் என்று, இன்று கூறும் தமிழினத் தலைவர்களைத்

தமிழ்த்தாய் எங்ஙனம் பொறுத்துக்கொள்வாள்? தமிழுக்காகவே வாழ்வதாகச் சொல்வதும் ஒரு நடிப்புக்கலை போலும்!

மழலையர் முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் ஒன்றே பாடமொழி பயிற்றுமொழி,

சிறுபான்மையோர்க்கு மட்டும் தமிழுடன் அவர்கள் தாய்மொழி.

ஆறாம் வகுப்பு முதல் தமிழில் விரும்புவோர் தமிழில் – ஆங்கிலம் விரும்புவோர் ஆங்கிலத்தில்.

எந்த ஒரு தேர்வும் மாநிலத் தாய்மொழியாம் தமிழிலும் ஆங்கிலத்திலும்.

தொழிற்படிப்பு எனப்படும் மருத்துவம், பொறியியல் உட்பட, பல்கலைக்கழக ஆய்வுப் பட்டம் வரை இருமொழிக் கொள்கை – விரும்புவோர் இவ்விரண்டில் ஒன்றில் படிக்க, தேர்வெழுத வாய்ப்பு.

இதுவன்றோ முறை.

அனைத்திந்தியத் தொழிற்கல்வி ஆணையங்கள், மொழி பற்றிய விதிகளில் தலையிடா; அவை இவற்றை மறுக்க இயலாது.

முறைப்படி அணுகினால் போதும். எம் மொழியிலும் படிக்கலாம். இந் நடைமுறை இந்தியா முழுவதும் உளது.

ஆங்கிலத்தை மறுக்கவில்லை; தடுக்கவில்லை. தமிழில் விரும்புவோர்க்குத் தமிழில் உயர் கல்வி படிக்க வாய்ப்புத் தர வேண்டும். இதற்குச் சட்டமே துணையுளது. தமிழை உயர்கல்வி மொழியாக்க இந்தியநாடு முழுவதும் முன்மாதிரிகள் உள. தமிழ் ஓர் செவ்வியல் மொழி என்பதை, நாம் இந்தியப் பெருமொழிகள் அனைத்திலும், மொழி பெயர்ப்பு மூலம் தெரிவிக்க வேண்டும். உலகெலாம் நாம்தான் நம்மொழி, இலக்கியப் பெருமையைக் கொண்டு சென்று, அவர்களும் ஏற்குமாறு செய்யவேண்டும்.

அதற்கு முன்பாகத் தமிழகத்திலேயே, தமிழுக்கு இன்றுள்ள இழிவுகள் அனைத்தும் துடைக்கப்பட வேண்டும்; அறவே களையப்பட வேண்டும். இன்றேல், இவற்றுக்கு எதிரானவர்களை ஆட்சிக்களத்தைவிட்டு அகற்ற வேண்டும். அதற்கு நாம் முதலில் தமிழ் மக்களை ஆயத்தப்படுத்த வேண்டும்.

*தென்மொழி :*
*கும்பம் - பிப் 2005*

✧ ✧ ✧

## பகுதி - 2

## உள்ளுறை

பக்கம்

1. உலகப்பேச்சு வழக்கும் இலக்கிய எழுத்து வழக்கும் 70
2. பேச்சுவழக்கு வட்டார வழக்கு இலக்கிய வழக்கு என்பன யாவை? 73
3. தமிழாக்கச் சொற்கள் 80
4. தமிழ்ப் புலவர்களும் இருவகை வழக்கும் 93
5. தமிழர்களின் பெயர்கள் படும்பாடு 99
6. தமிழ்மொழிக் காவலர்கள் 104
7. செந்தமிழும் திசைவழக்குகளும் 108
8. செப்பு மொழி பதினெட்டுடையாள் சிந்தனை ஒன்றுடையாள் 113
9. தாழையாம் பூ முடித்து தடம் பார்த்து நடைநடந்து 119
10. செல்வம் குவிந்து கிடக்கிறது இங்கே! சேமித்துக் காப்பவர் எங்கே! 124
11. பேசுவது போலவே எழுதலாமா? 129
12. இன்னொரு 'கிரியோல்' மொழி அல்லவா இங்கே உருவாகிக் கொண்டிருக்கிறது! 134
13. வட்டார வழக்கு 139
14. தமிழா தமிழா ஒன்றுபடு! தமிழால் தமிழால் ஒன்றுபடு 141

# 1.உலகப் பேச்சு வழக்கும் இலக்கிய எழுத்து வழக்கும்

தமிழ்மொழி தோன்றிய காலந்தொட்டு 'இருவழக்' மொழியாகவே இருந்து வந்துள்ளது. அதாவது பேசுவதுபோல் எழுதுவதில்லை. எழுதுவதுபோல் பேசுவதில்லை.

தமிழ்மொழி இளமை மாறாமல் 'என்றுமுள்ள தென்தமிழாய்' இருப்பதற்கு இவ்வியல்பே அடிப்படையாகும்.

இதனை விளங்கிக் கொள்ளாதவர்கள், விளங்காமலே தம் படைப்புகளை எழுதி, தம் படைப்புகளும் யாருக்கும் விளங்காமல், தாமும் விளங்காமலே போனார்கள்.

இவ் இருவகை வழக்குகளையும் இடமறிந்து, காலமறிந்து, தாமெழுதும் இலக்கிய வகையறிந்து, துறையறிந்து எந்த அளவு, எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதே, இலக்கணத்தின் பாலபாடமாகும். இதனை நாம் தொடக்கக் கல்விமுதலே, கற்பிக்க வேண்டும். ஏனெனில் இது கழைக் கூத்தாடிகள் கயிறு மேல் நடப்பது போன்றது. நம் முன்னோர் இதைவரன்முறையாகக் கடைப்பிடித்து வந்ததனாலேதான், தமிழ் இன்றளவும் இளமை மாறாது கன்னித் தமிழாக இருக்கிறது.

கட்டளை மொழி (standard language) என ஒன்று இருக்கிறது. அது பொதுத் தமிழ், செந்தமிழ், எல்லோர்க்கும் விளங்கும் தமிழ், சிதைவில்லாத தமிழ் – அதனை நோக்கியே மொழி இயங்கவேண்டும். இக்கட்டளை மொழிக்கயிற்றில் இயங்குபவர்கள், பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு, இரண்டின் பக்கமும் ஒரேயடியாகச் சாய்ந்து விடாமல், சமனிலை பேணும் வரை காப்பாற்றப்படுவர் . அல்லாது ஒரு பக்கமே சாயும் பொழுது வீழ்ச்சிக்கு ஆளாக நேரும். அவர்கள் தான் வீழ்ச்சியுறுவார்களே தவிர, தமிழ் வீழ்ச்சியுறாது என்று ஒரளவு ஆறுதலடைவோம்.

நூற்றுக்குத் தொண்ணூறு தமிழர்களை நாம் இருளில் வைத்துள்ளளோம். அவர்கள் மகளிர், உழவர்கள், வண்டி இழுப்பவர்கள், சுமை தூக்குபவர்கள், தொழிலாளர்கள, ஏழை எளியவர்கள், அவர்களுக்குத் தமிழைப் பற்றியோ தமிழிலக்கியம் பற்றியோ தெரியாது. எனவே, இவர்கள், அறிவும் திறமையும் சூழ்ச்சியும் மந்திர தந்திரமும் செய்து, தம்மை ஆட்டுவிப்பவர்களுக்கு ஏற்ப ஆடுகின்றனர். இவர்களுக்கு என்று 'சுய அறிவை' சுயசிந்தனையை என்று கற்பிக்கிறோமோ அன்றுதான் தமிழுக்கு விடிவுகாலமாகும்.

✧ ✧ ✧

தமிழில் எழுதும் பொழுது – அது கடிதமேயாயினும், பொதுத்தமிழாம் கட்டளைத் தமிழிலேதான் எழுதவேண்டும்.

பேச்சு நடைபோல, கட்டளை மொழியை எழுத வேண்டுமென அறிஞர் சிலர் கூறுவது, அதன் மொழி நடை (Language) பற்றியது. கொச்சையாக, ஒலித்திரிபோடு விரைவாகப் பேசிவிடுகிறோமே, அதையே எழுத்திலும் எழுதவேண்டுமென்பதன்று அது.

கட்டுரை, கதை, கவிதை, நாடகம் – யாதாயினும், கட்டளை மொழியே படைப்பாளியினால் எழுதப்பட வேண்டும். கதை, நாடக மாந்தர்கள் பேசுவதாக வருமிடங்களில், அவரவர் நிலை, வட்டாரம், குலம் பிற சூழலுக்கேற்ப, அது பேச்சு நடையிலிடம்பெறும். இதற்காகக் கதை சொல்கிற படைப்பாளி, தான் எழுதுவதையும் 'பேச்சுக் கொச்சை' நடையில் எழுதுவதென்பது அடிப்படைத் தவறு.

தமிழில் இதழ் நடத்திப் பிழைக்கும் சிலர், இப்படித் தமிழைக் கொச்சைப் படுத்துபவர்களுக்கு நல்ல விளம்பரம் கொடுத்து, பரிசு தந்து ஊக்குவித்துப் பார்க்கின்றனர். இவர்களுக்குத் தமிழ் எவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒரே தமிழாக வழங்கிவரலாம் என்ற பொறாமை – அழுக்காறு.

எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (110)

இக்குறளைத் தவிர, இவர்களுக்கு வேறு என்ன சொல்வது ?

ஆங்கிலத்தில் குழந்தைக் கல்வி முதலே அகராதி வைத்துப் படிக்கும் பழக்கத்தை வளர்க்கிறார்கள். சேக்சிபியரையும் மில்டனையும் அகராதியின் துணைகொண்டே, ஆங்கிலேய மாணவனும் விளங்கிக் கொள்கிறான். தமிழில் தொல்காப்பியமும் சங்க இலக்கியமும்

திருக்குறளும் இரட்டைக் காப்பியங்களும் போல்வன அனைத்திலும் செம்பாதி விளங்கிவிடும். பிற சில சொற்களுக்கு மட்டும் அகராதி தேவைப்படும்.

உரையாசிரியர்களை விட, சிலபோது மூல நூல்கள் நன்கு விளங்கிவிடும் என்பது ஒரு சிறப்பு.

கிரேக்க மொழி புதிதாக உயிர்ப்பிக்கப்பட்டது. பழங்கிரேக்கத்தினின்றும் வேறுபடுகிறது என்பர்.

சீனமொழி ஐயாயிரத்திற்கு மேற்பட்ட எழுத்து வடிவங்களையுடையது. அதன் வட்டார வழக்குகள் ஒருவர் பேசுவது மற்ற வட்டாரத்திற்கு விளங்காது என்றும் ஒரே சொற்றொடர் ஒரு வட்டாரத்தினர்க்கு ஒரு பொருளையும் பிறிதொரு வட்டாரத்தினர்க்குப் பிறிதொரு நேர் மாறான பொருளையும் தரும் என்றும் கூறுகின்றனர். சாசர் ஆங்கிலம் வேறு. பதினேழாம் நூற்றாண்டு தொடங்கிப் பேசப்படுவது வேறு. தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளிலும் அச்ச தெலுங்கு, பழங்கன்னடம், எழுத்தச்சன் மலையாளம் என இவை இருவகைப்படுவன.

தமிழ் பழைமை புதுமை என அத்துணை வேறுபடவில்லை. வட்டார வழக்குகளாலும் அத்துணை வேறுபாடுகளை அடைந்து பிரிந்துவிடவில்லை. சிலருக்கு இது மண்டையிடியாக இருக்கிறது.

தமிழை இன்றும் இனியும் வரலாறு தெரிந்த மூவாயிரம் ஆண்டுத்தமிழாக – ஒரே தமிழாகக் கட்டிக் காக்க, இவ் இரு வழக்குப் பற்றிய நல்லறிவு வளர்க்கப்பட வேண்டும். இவை தனித்தனியே போற்றப்படவேண்டும். எதனை, எவ்விடத்தில், எந்த அளவு பேணுவது – பயன்படுத்துவது என்ற அறிவே கற்பிக்கப் பட வேண்டும்.

இதனைப் பாலபாடம், அடிப்படைப் பாடம் என்றே கருதவேண்டும். இவ் இரு வழக்குகளையும் நம் முன்னோர் எவ்வாறு வேறு பிரித்து அறிந்திருந்தனர், வேறு பிரித்துப் பயன்படுத்தினர். இரண்டும் ஒன்றை விட்டு ஒன்று அதிகம் விலகிப் போய்விடாதபடி, சிறு சிறு ஊடல் கொண்ட காதலரை, ஊடல் உணர்த்தி ஒருங்கிணைப்பதுபோல் எந்த அளவு ஒற்றுமைப் படுத்திக் கட்டிக் காத்தனர் என்பன கற்பிக்கப்பட வேண்டும்.

✧ ✧ ✧

# 2. பேச்சு வழக்கு
# வட்டார வழக்கு
# இலக்கிய வழக்கு என்பன யாவை?

### பேச்சு வழக்கு

பேச்சு வழக்கில் அறியாமை, சோம்பேறித் தனம், விரைவு, இகழ்ச்சி (அலட்சியம்) எல்லாம் உண்டு. 'நா' என்பதே நான்–ஆகலாம். ஆனை – ஆனெ என நின்று விடலாம். வந்திருச்சு, போச்சு, ஆயிட்டுது, கெட்டிடுச்சு – என இவ்வாறு ஆயிரம் ஒலித்திரிபுகள் வரும். பிழைகள் மிகும். இசித்துக்குனு, பேசாறாப் போச்சு, எலே மூதி, மருவாதி போயிடும் – இவை குறுமொழிகள் (slangs) எனப்படும்.

வாளைப்பளம், வாயப் பயம் – என வெவ்வேறு பகுதியில் வாழைப் பழம் படாதபாடுபடும். பேரறிஞர் மு. வ. தமது தமிழ் இலக்கிய வரலாற்றில் எடுத்துக் காட்டுவது வருமாறு. "இருக்கிறது என்ற சொல் சில வகுப்பினரால் இருக்கு என்றும், வேறு சில வகுப்பினரால் இருக்குது என்றும் படிப்பு வாசனை இல்லாத சிலரால் கீது என்றும் ஒலிக்கப்படுகிறது. செய்துவிட்டார் என்பதன் பேச்சு வடிவங்கள் செய்துட்டார், செய்ஞ்சிட்டார், சேஞ்சிட்டார், சேஞ்சிபுட்டார் முதலியனவாக உள்ளன. எடுத்துக்கொண்டான் என்பது எடுத்துக்கினான், எடுத்துக்னான், எடுத்துக் கிட்டான் முதலியனவாக ஒலிக்கப் படுகிறது" (பக்.15).

இவையெல்லாம் ஒலித்திரிபுகள், இவை நாடக மாந்தர்கள் பேசுவதாக வரலாம். படைப்பாளியே இந்த நடையில் தன் கூற்றை எழுதலாகாது.

விளையாடுரானுங்க விளையாட்றானுங்க, விளையாடுறானுக, வெள்ளாடுறானுங்க, வெளையாடறாங்க இவ்வாறு வருவனவற்றுக்கெல்லாம், மூலக் கட்டளைச்சொல் விளையாடுகிறார்கள் என்பது. அம் மூலச்சொல்லே எழுத்தில் வரவேண்டும். இலக்கியப் படைப்பில் இடம் பெறவேண்டும். அம் மூலச் சொல்லை நாம் இழக்காத வரையில், முன் காட்டிய திரிபுகள் ஆயிரம் வழங்கினும் தமிழ் வேறுபடாது. அதன் என்றும் மாறாத இளமையும் குன்றாது.

சிலர் ஆங்கிலம் கலந்து பேசுகிறார்கள். சமஸ்கிருதத்தைத் தமிழில் எழுதிப் படிப்பதுடன், தமிழையே சமஸ்கிருதமாக்கி ஒலித்தும் அச் சொற்களை அளவின்றிக் கலந்தும் தமிழைப் பாழ்படுத்தி விடலாம் என ஆற்றாமையுடன் முயன்றபடி இருக்கிறார்கள்.

ஒரு கத்தூரியைச் சாப்பிட்டு, 'ப்ரீத் ஈஸிலி' என ஒரு விளம்பரம். உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் 'தமிழனா' தமிங்கிலனா ?' – நூலை ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்க வேண்டும். அதை வைத்து, பிற சில சேர்த்து அங்கதச் சுவைபட ஒரு நாடகமே எழுதலாம்.

" டிசைன்களில் ஒரு மிடுக்கு. பிரிண்ஸில் ஆண்மையின் உத்வேகம். அமைப்பில் தன்னிகரற்றது ஃப்ரெஞ்சி. இப்போது ப்ரிமியத்தில் நேர்த்தியான ப்ளெயின் மற்றும் ட்ரெண்ட்ஸில் மனங்கவரும் பிரிண்ஸ் ஸ்ட்ரைப்ஸில் எவ்வளவோ வகைகள். (பக்.66)

"இன்றைய தமிழ் வசனநடை" என்னும் நூலை அறிவுடைச் சான்றோர் மு. அருணாசலம் 1945 இல் எழுதினார். அந்நூல் இவ்வகை ஆய்வுக்கு மிகவும் பயன்படும். தமிழறிஞர்கள் கட்டளைத் தமிழ் கெட்டுவிடாதவாறு காப்பாற்ற, இவ்வகை ஆய்வுகளில் ஈடுபட்டு நிரம்ப எழுதவேண்டும் என்பது என் பேரவா. மொழியியல் அறிஞர் சிலர், ' தற்காலத் தமிழ்' (Modern Tamil) என்று சில நூல்களை எழுதியுள்ளனர். அவையும் அறியப்படவேண்டும்.

அறிஞர் மு. அருணாசலம் காட்டும் மிகப்பல சான்றுகளில் 'அம்மாமித் தமிழ் பற்றிய ஒரு சிறு பத்தியை மட்டும் காண்போம். "பாட்டி வாய் உடனே கிளம்பிவிட்டது. 'உங்களை யெல்லாம் பார்த்துண்டுதான் இந்தப் பிள்ளையும் பேசறது. பெரியவாளைப் பரியாசம் பண்றதுன்னா, இன்னிக்குப் பொறந்ததுக்கெல்லாம் லகுவாயிருக்கு. நேக்கு அப்படி வராதும்மா. என்ன வந்துவிட்டது அப்படி புதுசாய் ? புடவையோ, முனிசிபாலிடியானுக்குப் பதிலாத் தெருப் பெருக்குகிறது. பிறந்தது முதல்

இங்கிலீஷ்ஷிலே தான் பேசிண்டிருக்காப் போல் ஷ் ஷ்ன்னு ரெண்டு இங்கிலீஷ் வார்த்தை சிவசிவா! காதிலே ஈயத்தைத்தான் காய்ச்சிவிட்டுக் கொள்ளணும்" ( பக்.79 )

தமிழ் இதழ்களில் க்ரைம் ரிபோர்ட், சிட்டி பீட். தொலைக்காட்சிகளில் காமெடி டைம், காமெடி கிளப், மாட்டினி ஸ்பெஷல் இவ்வாறு பல.

ஒரு எப். எம் (F.M. ) வனொலி. அவர்கள் தமிழில் எப் எம் என்பது ஏய்ப்பம் என்றே ஒலிக்கிறது. ஒரு குடிசைவாழ் பெண், தான் வீட்டு வேலை செய்வதாகக் கூற, உடனே இந்த ஏய்ப்பம் – காரன், 'ஓ நீங்கள் ஹவுஸ் ஒய்பா ?' என்று நாய் குரைப்பது போல் கத்திப் பேசுகிறான். இந்தக் குச்சு நாய்க்கு ஆங்கிலம் தெரியுமாம். இப்போது ஹவுஸ் ஒய்பு, ஆபிஸ் ஒய்பு, மிடில் ஒய்பு என அலையும் இதுகள் தமிழைப் படுத்தும் பாடு சொல்லித் தொலையாது. இதுகளுக்கு ஆங்கிலமும் முழுமையாய் வராது. தமிழும் வராது. ஆங்கிலேயன் வளர்க்கும் 'குச்சு நாய்கள் போல', இவை அனைத்துப் பண்பலைகளிலும் பேச்சுத்தமிழ் எனும் பெயரால், குரைத்த வண்ணம் உள்ளன. 'Fantastic' என்கிறது மற்றொரு கழுதை. இவை போல ஆயிரம்.

ஒரு கதை – பார்ப்பனக்குலக் கதையானால் – அம்மாமித் தமிழ், உரையாடலில் மட்டும் வரும். வரலாம். அதுவே நாகர்கோயில் கதையானால், அக் கதையில் பேசும் மனிதர் நாவில் உலையாடலில் மட்டும் அங்குள்ள ஒலிப்பு முறை, ஒலித்திரிபு, குரல் ஏற்ற இறக்கம் அமையும். அமையலாம். படைப்பாளி எழுதும் பகுதிகள் கட்டளை மொழியை விட்டகலக் கூடாது.

எனவே பேச்சுத் தமிழை – திரிபுடன் கூடியதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் ? எங்கு பயன்படுத்த வேண்டும் என்பதை தமிழர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும் . இந்த இரண்டுக்குமிடையே கயிறு இழுப்புப் போட்டி நடந்த வண்ணம் இருக்கும். யான் – நான் ஆனதும் யானை – ஆனை ஆனதும் யாண்டு – ஆண்டு ஆனதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு, அதனால் தமிழுக்குச் சிதைவில்லை என்பதாலேயாம்.

வாழ்நான் – வாணன், வாழ்நாள் – வாணாள், குருவி – குரீஇ – இவ்வாறு பல பேச்சு வடிவங்கள், புணர்ச்சிவயப்பட்டு ஏட்டிலும் ஏறின. எனினும் இவை தமிழ் சிதையாவண்ணம் இருக்குமளவு மட்டுமே

ஏற்கப்பட்டன.

ஆயினும் பதறுதலில் இருந்துவந்த பதற்றம், மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளில் பதஷ்டம் ஆனது. இவ்வாறு ஆயிரக்கணக்கில் தமிழ்ச்சொல் திரிபுகள், அம் மொழிகளில் காணப்படும். அதனைப் பார்த்து, நாமும் பேச்சில் பதட்டம் என்று கூறலாமா ? பதற்றம் என்பதில் பொருளுள்ளது. மற்றது அர்த்தமற்ற சொல்.

**வட்டார வழக்கு**

வட்டார வழக்கு என்பது வேறு. பேச்சுத் தமிழ் வேறு. இவற்றிடையே வேறுபாடு மட்டுமன்று, முரண்பாடும் உண்டு. பேச்சுத்தமிழ் மொழிபற்றிய ஒரு வழக்காகாது. பேசும் போது ஏற்படும் குளறுபடிகள் ஏராளம். ஒலித்திரிபுகள் கணக்கிலடங்கா.

நீ என்ன செஞ்சிண்டிருக்கே?
அவ கோவமா பேசறா.
பொம்மனாட்டிங்க ஆத்திலே
இருக்கிறாங்க. வீட்டுக் காரரு
ஆபீசிலே இருக்காரு
அவன் வருதான்
அதுக் கோசரம்
தம்பிவண்டியைக் காணோம்

இது குலவாரியாக வேறுபடும். பிராமணர் பேச்சுத்தமிழ். ஆத்துக்காரர் (அகத்துக்காரர்), ஆம்படையான் (அகமுடையான்), ஆம்படையாள் ( அகமுடையாள்), அத்திம்பேர் ( அத்தையன்பர்), அவாள் (அவர்கள்), மாட்டுப் பெண் (மணாட்டுப் பெண்), அம்மாஞ்சி (அம்மான் சேய் ). நகரத்தார் பேச்சுத் தமிழ் அயித்தான் (அத்தான்), அம்மா முண்டி (அம்மான் பெண்டிர்), தம்பி வண்டி (தம்பி பெண்டிர்), வீயஞ் சமயம் (வீயும் சமயம்).

இது இடத்துக்கு ஏற்பவும் ஒலித்திரிபுகளை ஏற்கும். திருநெல்வேலி இங்கிட்டு, அவுக, சொல்லுதான், வருதான், சென்னை வாயப் பயம், இசுத்துக்கிட்டு, பேசாறாப் போச்சு.

பொதுப் பேச்சுத் தமிழ் என்றும் ஒன்றைக் குறிப்பிடுகிறார்கள். அது பலருக்கும் விளங்கக்கூடியது.

'ஊர்கோலம் போற அளகைப் பாரு, இது எங்க வீட்டுக் கல்யாணமாக்கும். சிம்மாசனத்துல உக்காந்து ராசாங்கம் பண்ணுற எங்க நாட்டு ராசாவும் அந்தப் புரத்திலே சேடிமார்களோடே வர்ற எங்க ராணியும், அரமணை சொகுசுகளும் பவுசுகளும் வர்ணிக்க முடியாது.'

இது கொச்சைப் பேச்சு வழக்கு.

'வட்டார வழக்கு' என்பது இதுவன்று. அவை முழுச் சொற்களாக இருக்கும். ஒரு பகுதியில் வழங்கும் சொல், வேறு பகுதியில் எளிதில் விளங்காது. ஒரே சொல் ஓரிடத்தில் ஒரு பொருளும் பிறிதோரிடத்தில் பிறிதொரு பொருளும் தரும்.

கேணி – கிணற்றைக் குறிக்கும். அதுவே குளத்தைக் குறிப்பது பிறிதொரு வட்டார வழக்கு. திருவல்லிக்கேணி – யில் கேணி குளத்தையே குறிக்கிறது. காரைக்குடியினர் சளிப்பிடித்திருப்பதைத் 'தடுமன்' என்பர். தஞ்சையில் வீட்டுக்கு வந்தவரை 'குந்துங்க' என்பதுண்டு. 'இருங்க' என்பர் நகரத்தார். 'உட்காருங்க' என்பர் திருநெல்வேலியார். யாழ்ப்பாணத்தில் ஆறுதலாக என்றால் அமைதியாக, தாமதமாக என்று பொருள். 'பேசலாமா' என்பதைக் 'கதைக்கலாமா' எனக் கேட்பர். அங்கு 'கனக்க' என்றால், நிறைய என்பது பொருள்.

வட்டார வழக்குப் புதினங்கள், சிறுகதைகள், புதுக்கவிதைகள் பல வெளிவந்துள்ளன. இவற்றிலுள்ள முழுமையான சொற்களைத் தொகுக்கும் முயற்சியிலும் சிலர் ஈடுபட்டுச் சிறிய சில அகரமுதலிகள் வந்துள்ளன. தொல்காப்பியரே இதனைத் 'திசைச் சொற்கள்' என ஏற்றதால், வழிவழியாக இது பின்பற்றப்பட்டுச் சிற்றிலக்கண நூல்களிலும் குறிக்கப்பெற்றுள்ளது.

'இன்றைய தமிழ் வசனநடை' என்னும் தமது நூலில், அறிஞர் மு. அருணாசலம் பல்வேறு, வட்டார வழக்குகளையும் இலக்கிய வழக்குகளையும் தந்துள்ளார். 'தமிழனா தமிங்கிலனா' என்னும் நூலில், காசி ஆனந்தன் தந்திருக்கும் ஆங்கிலக் கலப்படத்தமிழ் பற்றிய காட்டுக்கள் நெஞ்சை நிலைகுலைய வைப்பன.

பேச்சுத் தமிழில் இலை – எலையாகும். உலகம் – ஒலகம் ஆகும். உரல் – ஒரலாகும். ஆனால் வட்டாரத் தமிழில் செருப்பு என்பதை நடையான் என்றும், நிலக் கடலையை வேர்க் கடலை என்றும் இவ்வாறு வேறு சொற்களில் குறிப்பர்.

எனவே பேச்சுவழக்கு, பேச்சிற்கு மட்டுமே உரியது. பேச்சாக, உரையாடலாக எழுதும் பொழுதே பயன்படுவது என்பது விளங்கவேண்டும். வட்டார வழக்கு ஏற்புடையது. இலக்கியத்தில் ஏறும் தகுதியுடையது எனவும் அறிதல் வேண்டும்.

**இலக்கிய வழக்கு**

இதனை படைப்பிலக்கியம், கட்டுரை, ஆய்வுரை, ஆசிரியவுரைகளின் வழி அறியலாம். இதுவே எழுத்துத் தமிழுடனும் கட்டளை மொழியுடனும் நெருங்கிய தொடர்புடையது. இதற்கு இலக்கண அறிவு, மிக எளிய அளவிலாவது தெரிந்திருக்கவேண்டும்.

செஞ்சிட்டான், சேஞ்சிட்டான், செஞ்சுப்பிட்டான் என எத்தனை அவதாரம் எடுத்தாலும், ‘செய்துவிட்டான்’ என்ற மூலச்சொல், எழுத்துத் தமிழாக இலக்கிய வழக்காக, பொது மொழியாக, கட்டளை மொழியாக (Standard language) இருந்தால்தான் தமிழ் சிதையாது காக்கப்படும். திரிபுகள் விளங்க மூலச்சொல் எழுத்தில் இருக்கவேண்டும்.

மொழியை மூன்று நிலைகளாகப் பிரிப்பர். தனிநிலை, ஒட்டுநிலை, உட்பிணைப்பு நிலை என்பன அவை. தமிழ் இன்று ஒட்டுநிலையில் உள்ளது. ஓடு + இன் + ஆன் = ஓடினான் என நிற்பதால், இதனை ஒட்டுநிலை எனலாம். ஓட்றான், ஓடறான் எனத் திரிவது உட்பிணைப்பாகி, சொல்வடிவம் கெட்டுவிடும்.

நாம் பொது வழக்கொன்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதே, இவ் ‘ஒட்டுநிலையை’ விட்டுத் தமிழை, உட்பிணைப்பு நிலைக்குக் கொண்டுபோய் விடக் கூடாது என்பதற்காகவேயாம்.

சங்க காலத்திலேயே ஆதன் + தந்தையாரை ஆந்தையார் என்றும் பூதன் + தந்தையாரை பூந்தையார் என்றும் வழங்கினர் என அறிகிறோம். சிலபோது இவ்வாறு புகுந்தவற்றை, ‘மருவின் பாத்திய’ – அல்லது மரூஉ மொழிகள் எனத் தனி வகைப்படுத்தினார், தொல்காப்பியர். காலந்தோறும் இப்போராட்டம் நடந்தாலும், இயன்ற வரை, மொழிக் கட்டமைப்பைக் கட்டிக் காத்து வந்துள்ளனர். மொழி என்பது கருத்துப் பரிமாற்றக் கருவி, அதனைச் சிதைப்பது, அறிவைச் சிதைப்பதற்கு ஒப்பாகும்.

எதனையும் மேன்மையை நோக்கி, உயர்வை நோக்கி, செம்மையை நோக்கி என ஆராய்ந்து பேசி எழுதி முழங்குபவர்கள், தமிழை மட்டும்

அவ்வாறு செம்மை நோக்கி வளரவிடாது, என்னென்னமோ செய்து பார்க்கின்றனர்.

தமிழில் நாளிதழ், தாளிகை, தொலைக்காட்சி, திரைப்படம் என மக்கள் ஊடகங்களாகவுள்ளன யாவும், தமிழைச் சிதைத்தும் கலப்படமாக்கியும் அந்த மொழியையே அழித்தும் வருகின்றனர்.

‘ குலஞ் சுடும் கொள்கை பிழைப்பின் ( 1019 )

என்ற குறளை நினைவு படுத்துவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் ?

✧ ✧ ✧

# 3. தமிழாக்கச் சொற்கள்

தமிழ்மொழி தனி இயல்புடையது. தமிழ்ச் சொற்கள் கட்டமைப்புடையன. ஒருவருடன் அவரது இயல்பறிந்து பழகுவதுபோல, தமிழின் இயல்பறிந்தும் பயன்படுத்த வேண்டும்.

நாத் காசிநாத் – என்றால் அவன் தமிழனாக இருக்கமுடியாது. நாதன், காசிநாதன் – தமிழனாவான்.

ஷாஸ்வத் – முன்பே சாசுவதம் ஆனதுதான். ஆசிர்வாத் – முன்பே ஆசிர்வாதம் ஆனதுதான். விஸ்வாஸ் – விசுவாசமாகி வெகுநாளாகியும் அவ் விசுவாசம் ( நன்றியறிதல் ) போய்விட்டது. ஆனந்தம் தமிழாகிக் காலமாகி விட்டதால், ஆனந்த் என்கின்றனர்.

ப்ரீதி ஈஸிலி – என விளம்பரம் செய்கின்றனர். எளிதாய் மூச்சுவிடு – தமிழ். எளிதாய்ச் சுவாசி – தமிழாக்கம். இரண்டையும் விட்டு, படிப்பவரை மூச்சுத் திணரவைத்தால், பிறகு எப்படி ' ஈஸியாக பிரீத்துச் ' செய்யலாம் ?

இன்று ஆயுள் காப்பீட்டுத் துறையில் 'இந்த வெறி ' தலைவிரித் தாடுகிறது. இதனை யாரும் கண்டு கொள்ளாதிருப்பது விந்தையே.

ஜீவன் பாரதி, ஜனரக்ஷா, ஜீவன் சாதி, ஜீவன் ஆனந்த், ஜீவன்கிஷோர், கோமல் ஜீவன், ஜீவன் ஶ்ரீ, ஜீவன் சரள், பீமா பிளஸ், ஜீவன் சுரக்ஷா, ஜீவன் ரேஹா, ஜீவன் சுரபி, யோகக் க்ஷேமா ( இதழின் பெயர்).

ஜீவன் பீமா சகாயோக் அஸ்ஸெட் கம்பெனி.

இவைபோல் நூறு பெயர்கள். ஏன் ? எல்லாம் இந்திப் பெயர்கள் – சமஸ்கிருத மூலங்கள். வடநாட்டவர் எவ்வகையிலும் இந்தியை நுழைத்தே தீருவோம் என முயல்வதை இது உணர்த்தவில்லையா ?

சர்வ சிக்ஷா அபியான் – எல்லோருக்கும் கல்வி படும் பாடு இது. எதையெடுத்தாலும் அபியான், யோஜனாதான் !

இந்தியத் தேசியமொழிகள் என்ன ஆயின ? ஆங்கிலம் இப்பொதுத் துறையில் பின்பற்றப்படவேண்டாமா ? நாம் இந்தி பேசும் இந்திய நாட்டில் மட்டுமே வாழ்கிறோம், என்ற எண்ணத்தைத் திணிப்பதல்லவா இது ? இந்தியா பல தேசிய இனங்கள் கொண்ட நாடல்லவா ? உருசிய நாட்டினர், மெல்ல மெல்ல உருசிய மொழியைத் திணிக்க முயன்றதால் அல்லவா, இலெனின் கண்ட கனவு சிதறிப்போனது. இன்று யு. எஸ். எஸ். ஆர். எங்கே ?

இந்திய நாட்டின் பெருமொழிகள் சிலவே. முதலில் இவை அனைத்தும் சமமாக மதிக்கப்பட்டு, சமவாய்ப்பளிக்கப்பட்டு, சமநீதி வழங்கப்படவேண்டும். பொதுத் துறைகளில் ஆங்கிலப் பெயர்களே இடப்பட வேண்டும். ஒவ்வொரு ஆங்கிலப் பெயருக்கும் மேலே, அவ்வம் மொழிப் பெயரும் வேண்டும்.

தமிழின் தொன்மை கருதி நம் தமிழுக்கு எல்லா வகையாலும் தலைமை இடம் தரவேண்டும். வடமொழிக்கு இணையாகத் தமிழ் போற்றப்படவேண்டும். Education for all சர்வ சிக்ஷா அபியான் என இந்திக்காரர் போட்டுக் கொள்ளட்டும்.

Education for all எல்லோருக்கும் கல்வி என்று நம் மாநிலத்தில் போட்டால்தான், இது எங்கள் நாடு எனும் எண்ணம் வளரும். இன்றேல் நாம் முன்பு ஆங்கிலேயனுக்கு அடிமை. இப்போது இந்திக்காரனுக்கு அடிமை என உணரப்பட்டு, விடுதலை வேட்கை பெருகும்.

உலகிலுள்ள இந்தியத் தூதரகங்கள் அனைத்திலும், இந்தியே அதிகார மொழியாக உளது. இந்தி தெரிந்தவர்களே – இந்திக்காரர்களே அங்கு அமர்த்தப்படுகின்றனர். இந்தியிலேயே பெயர்ப் பலகை, படிவம் எல்லாம் உள்ளன. ஐ. நா. சபையில், இந்தி தெரிந்த 'வழிகாட்டி ' மட்டுமே உள்ளார். அங்கு நம் ' பிரதமர்கள் ' இந்தியிலேயே உரையாற்றுகின்றனர். இதனால் இந்தியா 'இந்திமொழிக்கே ' உரிய நாடு என்ற மாயத் தோற்றம், உலக மக்கள் அனைவரிடமும் உண்டாக்கப்படுகிறது. இந்தியாவில் பிறமொழிகளும் உள்ளன என்பது அங்கு யாருக்கும் தெரியாது. இவ்வுணர்வை வளர்ப்பது ஆபத்தானது. பாரத நாடு, பல நாடாக நேரும். சமநிலை பேணாத வரை சரிப்பட்டு வராது.

முதலில் இந்தியைப் புகுத்திய **இராசகோபாலாச்சாரியார்**, விறகு வடநாட்டவரால் புறக்கணிக்கப்பட்ட பின், சுதந்திராக் கட்சி தொடங்கியதுடன், இந்தியையும் அவரே எதிர்த்தார்.

இன்று பிராமணியமும் வகுப்புவாத வெறியினரும் வடநாட்டு மேலாண்மையரும் இந்தியையும் அதன் வழி சமஸ்கிருதத்தையுமே திணிக்க – புகுத்த – நுழைக்க முயன்ற வண்ணமுள்ளனர். இது இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டிற்கு நல்லதன்று.

வடமொழிபோல் தொன்மைமிக்கதும், வடமொழி திருத்தம் பெறவும் வாக்கிய அமைப்புப் போன்றவற்றை ஏற்கவும் அடிப்படையாக இருந்த தமிழை, ' செவ்வியல் மொழி ' என அறிவித்ததும் ஒரு கேலிக் கூத்தாகி வருகிறது. இந்நிலையில், இன்று மூளைச் சலவை செய்யப் பட்ட தமிழர்கள் அனைவரும் சமஸ்கிருதப் பெயர்களையே சூட்டிக் கொள்கின்றனர். வைத்தியநாதன் என முன்பு சொல்லப்பட்டவன், இன்று வைத்யநாத் ஆகின்றான். கணேசன் – கணேஷ் ஆகின்றனன். அருச்சுனன் பழம்பெயராம். அர்ஜூன் புதுமையாம்.

தமிழர்கள் தங்கள் அடையாளத்தைப் பலவகையிலும் இழந்து வருகிறார்கள். அரசுகள் எவ்வழி. குடிகள் அவ்வழி.

**இராசகோபாலச்சாரியாரும் சத்திய மூர்த்தியும் முதலில் திட்டமிட்டவை இன்று புகுவதேன் ?**

இந்தியை எதிர்த்தால் '' மூன்று மாதம் முதல் ஆறு வருஷம் வரை தண்டனை கிடைக்கும் என இராஜாஜியும்

இந்தியை எதிர்ப்பவர்களை ஆயுள் பரியந்தம் தண்டிக்க வேண்டும். அல்லது தலையை வெட்ட வேண்டும். (தூக்கில் போட வேண்டும்) என சத்திய மூர்த்தியும் (கு அ. 3–7–38 ) பகிரங்கமாக பொது மேடையிலிருந்து மிரட்டல் விடுத்தனர்.''

''ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்புவரை இந்தியைக் கட்டாயப் பாடமாக வைக்கவேண்டும் என்றும் அப்படிக் கற்றுக் கொடுப்பதால் இன்னும் 15 ஆண்டுகளில் இந்தியா இந்தி நாடாக மாறும் (Madras mail : 12.7.34) என்றும் போட்டுடைத்தார் இராஜாஜி. ' இந்தியைக் கொண்டு வந்ததன் உள்நோக்கமே சமஸ்கிருதத்துக்குச் செல்வாக்கு கொஞ்சம் கொஞ்சமாக சரிந்து வருவதைத் தடுத்து அதை உயர்த்தவும், அந்த சமஸ்கிருத எதிர்ப்பு உணர்ச்சியை

அழிக்கவுமேயாகும்' (விடுதலை . 15.2.60) என்று இராஜாஜியின் நோக்கத்தைக் கண்டுணர்ந்த பெரியார், கட்டாய இந்தித் திணிப்புக்கு எதிராகத் தீவிர வினையாற்றக் களத்திலே இறங்கினார்''. (சு. வேங்கடேசன், ஆட்சித்தமிழ், 2004. பக் 19,23 )

**37 ஆண்டு திராவிட இயக்க ஆட்சி இராஜாஜியின் கனவை நனவாக்கிய விந்தை**

தந்தை பெரியாரின் புரட்சிச் சிந்தனைகள் உடைப்பில் போடப்பட்டன. அவர் வகுத்த வழிகளே தமிழைக் காப்பாற்றி இருக்கும். தமிழில் புராணப் பிரசங்கங்களும் மூட நம்பிக்கைகளுமே பரப்பப்பட்ட காலச் சூழலில், ஆத்திரமடைந்த பெரியார், 'தமிழ் ஒரு காட்டுமிராண்டி' மொழி என்றார். அவர் உள்ளுணர்வு அதுவே. ஆனால் 1968 சனவரி 24 அன்று போட்ட ஆணை, முறைப்படி நல்ல நோக்குடன் போடப்பட்டிருந்தாலும், அதே நோக்கில் அடுத்த ஆண்டு முதலே அது செயற்படுத்தப்படவில்லை. **பேரறிஞர் அண்ணா** இருந்திருந்தால், உடனே தவறு கண்டுபிடிக்கப்பட்டுத் திருத்தப்பட்டிருக்கும்.

இன்று ஒரு நூறாயிரம் நர்சரி நச்சுப் பள்ளிகளிலும் பல ஆயிரம் 'மெட்ரிக்குப்' பள்ளிகளிலும், தமிழ் அறவே கற்பிக்கப்படாமல், முதன்மொழியாக இந்தி, சமஸ்கிருதம், பிரெஞ்சு கற்பிக்கப்படுகின்றன. இராஜாஜி கனவு நிறைவேறி வருகிறது. இதனால் மக்களிடையே தமிழுணர்வும் தமிழறிவும் மங்கி, இந்தி, சமஸ்கிருதப் பெயர்களும், சொற்களும் மேலோங்கி வருகின்றன. அவற்றைத் தமிழாக்கச் சொற்களாக மாற்றிய முன்னைய மரபும் தொலைந்து போனது.

**இன்று தமிழுக்கு இருண்டகாலம் ஆனதேன் ? திராவிட இயக்க ஆட்சியில் தமிழுக்கு மரண அடி விழுவதேன் ?**

தமிழ் ஒரு பாட மொழியாகக் கூட படிக்காமல் வெளியேற வழி வகுக்கும் ஆணை 37 ஆண்டுகளாக நடைமுறையிலிருப்பது, தமிழ்த் தாயை அவமதிப்பதாகாதா ?

'அறிவியல் தமிழை' இலவசமாகக் கொடுக்கிறோம்' என்று தம்பட்டம் அடிக்கப்படுகிறது.

இதற்குப் பாட வேளை ஒதுக்கப்பட்டுள்ளதா? இது கட்டாய பாடமென்றால், இதில் தேர்வு உண்டா ? மேல் வகுப்புக்குப் போக, இதில் தேர்ச்சிபெறவேண்டும் என்ற கட்டாயமில்லை என அறிவிக்கலாமா ?

தேர்வும் இல்லாத, பாடவேளையும் ஒதுக்காத ஒன்றை எந்தப் பள்ளியாவது பாடம் நடத்துமா ? இந்த ஏமாற்றுவித்தை, தமிழ்த்தாயின் முகத்தில் காறி உமிழ்வதாகாதா?

தமிழ்மொழி பற்றிய உச்சநீதிமன்ற வழக்கு என்ன ஆனது?

கருநாடகம், கேரளம், மகாராட்டிரம் – மற்றும் பல அரசுகள், உச்சநீதி மன்றத்தில், தாய்மொழிவழிக் கல்வி, வழிபாடுகளுக்கு எதிரான வழக்குகளைத் தோற்கடித்து வென்றுள்ளனவே? தமிழக அரசுகள் ஏன் உடைப்பிலே போட்டுவிட்டுப் பணப்பெட்டிகளுக்குள் முடங்குகின்றன ? இதுவா தமிழைக் காப்பது ? முன்பு, மூன்றாம் வகுப்பிலிருந்து தொடங்கிய ஆங்கிலம், முதல் வகுப்பு முதலென மாற்றப்பட்டு, உடனே பாடநூல்கள், பாடவேளை, கட்டாயத் தேர்வு என ஆங்கிலத்திற்குப் பரிவு மிகுவதேன்?

பள்ளியிறுதி வகுப்புவரை, தமிழ் வழியிலேயே படித்து, ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாக மட்டும் கற்றவர்கள், இன்று உலகில் ஆங்கிலப் பேச்சாற்றல், எழுத்தாற்றல் வல்லுநராக விளங்கித் தோன்றுதின்றனரே ? நமது முதற்குடிமகன், குடியரசுத் தலைவர் அ. ப. ஜெ. அப்துல்கலாம் அவர்கள், இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறாரே ?

ஆங்கிலத்தின் மூலம் இயற்பியல், வேதியியல், பொருளியல் எனப் படிப்பதால், ஆங்கில மொழியறிவு வராது. வளராதே ? ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாக உரையாடல் மொழியாக, பேச எழுத ஆற்றல் தரும் மொழியாகத் தனியே பாடத்திட்டம் வகுத்து, வலுவாகச் சிறப்பாக, ஆங்கிலமொழி வல்லுநர்களே கற்பித்தாலல்லவா ஆங்கில மொழி அறிவு சிறக்கும் ?

இன்றைய கல்விமுறை தமிழைக் கலப்பட மொழியாக்க மட்டும் தானே பயன்படும் ?

திரைப்படப் பெயர்களிலும் அறிஞர் அண்ணாவின் ' இருமொழிக் கொள்கையைப் ' பின்பற்றுவதாகக் கூறுவது, கேலிக்கூத்து என்பது ஒரு புறமிருக்கட்டும். ' மெட்ரிக் ' மற்றும் நர்சரிப் பள்ளிகளில் அந்த ' இருமொழிக் கொள்கையைப்' பின்பற்றலாகாதா ? ஆயிரக்கணக்கான பள்ளிகளில் தமிழிலும் மெட்ரிக் பாடநூல்களை உருவாக்கி, அதன்படி தமிழ்வழியிலும் விரும்புவோர் படிக்க வழிவகுக்கலாமே ? கட்டாயப்படுத்த

வேண்டாம். 'ஆங்கில வழி மூலமே'– என இதன் விதி இருப்பது, இருமொழிக் கொள்கைக்கு முரணல்லவா ? தமிழ் அல்லது ஆங்கிலவழி என இருந்து, நடைமுறையில் நடத்துவதல்லவா இருமொழிக் கொள்கையாகும் ? கன்னட மொழிக்காரர்கள், பள்ளி இறுதித் தேர்வுகள் அனைத்தும், எல்லாப் பள்ளிகளிலும் கன்னடம் அல்லது ஆங்கிலம் என இரண்டு மொழிகளிலும் வினாத்தாள் தந்து, தேர்வு நடத்தவில்லையா ? அவரவர் விருப்பப்படி எழுதட்டுமே ?

ஆறு மாதத்திற்குள் கன்னடம் கற்காவிடில் வேலை காலி – முன்னாள் தலைமை நீதிபதி கடும் எச்சரிக்கை.

வெளி மாநிலத்தவர் ஆறு மாதத்திற்குள் கன்னட மொழியைக் கற்க வேண்டும். இல்லையேல் கர்நாடகத்தில் வேலை பார்க்க அனுமதி கிடையாது !

என கர்நாடக மாநில முன்னாள் தலைமை நீதிபதியான வி. எஸ். மாலிமார் எச்சரித்துள்ளார்....

'கர்நாடகத்தில் வேலை பார்க்கும் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் உடனடியாகக் கன்னடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் அல்லது இங்கிருந்து வெளியேறிவிடவேண்டும்'...

'பட்ட மேற்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கான மேற்பார்வை நூல்கள் ஆங்கிலத்தில் உள்ளன. அவற்றைக் கன்னடத்தில் மொழி பெயர்க்க வேண்டும். இதைச் செய்ய முன்வரும் ஆசிரியர்களுக்கு ஓராண்டு ஊதியத்துடன் கூடிய விடுமுறை மற்ற வசதிகளும் அளிக்கப்படும்.

*( தென்செய்தி. மார்ச்சு 1, 2005 )*

பொதுமக்கள் தமிழைப் படிக்க விரும்பவில்லை என்று கையை விரிக்கும், திராவிட இயக்க ஆட்சியாளர்கள், பாரத நாடு முழுவதுமுள்ள, தாய்மொழிகளின் நிலையை ஆராயவேண்டும். அவற்றின்படி இங்கு அனைத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும். பிறகு, பொதுமக்கள் தாய்த்தமிழை விரும்புகிறார்களா, இல்லையா என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கலாம்.

1. மழலையர் முதல் பள்ளி இறுதி வகுப்புவரை தமிழே பாடமொழி, பயிற்றுமொழி, ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாக, சிறப்பாகக் கற்பித்தல்.

2. பிற மாநிலத்தவர்க்கும், எல்லோர்க்கும், அனைத்துப் பள்ளியிலும் தமிழ் – ஒரு கட்டாயப் பாடம்.

3. மெட்ரிக் – பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல், தமிழிலும் பாடம் – பள்ளி இறுதி வினாத்தாள் இருமொழியிலும்

4. தமிழ் நீதிமன்ற மொழி.

5. தமிழகத்தில் தமிழே முழுமையான ஆட்சிமொழி

6. தமிழ்வழி பயின்றோர்க்கே – தமிழே மாநில ஆட்சி மொழியாதலால் – வேலைவாய்ப்பு, தமிழ் ஒரு வருமானம் தரவல்ல மொழி.

7. எந்த உயர் கல்வியையும் தமிழிலும் பயிலலாம். தமிழிலும் தேர்வெழுதலாம். தமிழில் பயில்வதுடன் வேலைபார்க்க எண்ணுவதற்கேற்ப, எந்த மொழியையும் விருப்பப் பாடமாகக் கற்கலாம்.

இன்று தமிழ் பயன்படாத மொழி. வேலை வாய்ப்பில் 'உத்தரவாதமே' இல்லை. தமிழ் படிப்பதால் ஒரு பயனுமில்லை. மேடை அலங்காரப் பேச்சிற்குத் தவிர, பிறகு யார் தமிழை விரும்பிப் படிக்க வைப்பார்கள் ?

**முன்னைய மரபும் பின்னைய இழிபும்**

தமிழ்மொழி இளஞ்சிறார்கள் உள்ளத்தில் பதிவது, பள்ளிகளிலேயாம். பள்ளியிறுதி வகுப்புவரை தாய்மொழி எனும் அரண், பிஞ்சுகள் நெஞ்சில் கட்டப்படவேண்டும். ஆனால் இன்று நச்சுவிதைகளே ஊன்றப்படுகின்றன. மூன்று அகவை முடிந்ததும், பள்ளிவாயிலில் நுழையும் குழந்தைக்கு ABCD மட்டுமே கற்பிக்கும் பாடத்திட்டத்தில் உலகில் எங்கேனும் உண்டா ? பிள்ளைகள் தமிழ்மொழியே அறியாத போது தமிழ் மரபை எங்ஙனம் காக்கும் ?

தொல்காப்பியர் 'இருவகை வழக்கு' உண்டு என்றார். உலக வழக்கிற்கு முதன்மையும் சிறப்பும் தந்தார். அம் மாபெரும் முதல் நூலுக்குப் பாயிரம் தந்த பனம் பாரனார், தமிழ் கூறும் நல்லுலகத்தில் வழக்கும் செய்யுளும் (இலக்கிய வழக்கும்) ஆகிய இரண்டின் அடிப்படையில், அந்நூல் யாக்கப்பட்டதை அறிவித்தார். அவ் உலக வழக்கு என்பது உயர்ந்தோர் வழங்கிய வழக்கு, உயர்ந்த வழக்கு என்பது முன்பே கூறப்பட்டது.

தொல்காப்பியர் ' திசைச்சொல் ' என்பதையும் அன்றே ஏற்றார். அதுவே இன்று வட்டார வழக்கு எனப்படுகிறது. இன்று இத்திசை வழக்குகள் சில மலையாளம், கன்னடம், துளு, குடகு, கொங்கணம், தெலுங்கு எனப் பலவகை மொழிகளாகிவிட்டன. இத்திசை வழக்குகளாம் இன்றைய வட்டார வழக்குகளை, பொதுப்பேச்சுத் தமிழாலும் கட்டளை மொழி நூல்களாலும் ஒன்றையொன்று பிரிந்துவிடாமல் கட்டிக்காக்க வேண்டும்.

இன்று கரிசல் தமிழ் என்றும் தலித்துத் தமிழ் என்றும் பேசி, எழுத முற்படுபவர்கள், பொதுப் பேச்சுத் தமிழை விட்டுவிடாமலும் கட்டளை மொழியைக் கைவிடாமலும் இருக்க வேண்டும். இது அவர்கள் தாம் பிறந்த தமிழ்த்தாய்க்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

தொல்காப்பியர், ' வடசொல் ' என்று அவர் கால நிலையில் கூறியது, இன்று பிறமொழிச்சொல் அனைத்துக்கும் பொருந்தும், அன்று தமிழில் கலக்கக் கூடிய நிலையில் இருந்தது வடசொல் ஒன்றே. இப்பிறமொழிச் சொற்களைத் தமிழ் ஒலிக்கு ஏற்பத் தமிழாக்கம் செய்தே பயன்படுத்த வேண்டுமென்றார் அவர். சமஸ்கிருதச் சொல், தமிழாக்கம் பெற்று, தமிழில் வழங்குவதை அவர் ஏற்றார். வாழும் மொழிக்கு இது இயல்பே என்றும் இதனால் தமிழ் கெடாது என்றும் நம்பினார்.

'வடசொற் கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே'
'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' (884,885)

என்றார் அவர். சமஸ்கிருத ஒலியை அறவே நீக்கி என்பார் ' ஒரீஇ ' என நீட்டிச் சொன்னார். தமிழ் எழுத்தொலியொடு சேர்க்க எனவும் கூறி, சிதைத்தேனும் தமிழாக்குக என்றார். பூஷணம் – பூடணம், கமல்ஹாசன் – கமலகாசன். புண்டரியாக்ஷன்–புண்டரீகாச்சன். தனுஷ் – தனுசு. புஷ்பம் – புட்பம். ரிஷபம் – இடபம். சமஸ்கிருதச் சொல்வேறு. வட சொல்வேறு என்பதை நினைவு கொள்க. சமஸ்கிருத ஒலியில் – எழுத்தில் வருவன ஏற்கப்படவில்லை. தமிழ் மொழிக்கேற்ப மாற்றப்பட்டனவே வடசொல். இதனைத் தமிழ்ச் சொல்வகையிலும் அடக்கினர்.

தாமரைக் கண்ணனையே அவர்கள் புண்டரீகாட்சன் என்றனர். நம் காளையே அவர்களுக்கு இடபம் ஆகும். நம்மிடம் சொல் இருக்கும் போது, பிற மொழிச் சொல்லை ஆளுதல் வேண்டாம். அது நம்மிடம் செல்வம் இருந்தும் கடன் வாங்குவதற்கு ஒப்பாகும்.

தமிழில் வழங்குவோம். தேவை வரின் பிறமொழியைத் தமிழாக்கித் தமிழ்ச் சொல்லில் ஒன்றாக்கி, தமிழ் ஒலிக்கு உட்படுத்தி வழங்குவோம். இதுவே மரபு.

தமிழ் ஒலிக்கு உட்படுத்தப்பட்ட சமஸ்கிருதமும் ஆங்கிலமும் பிறமொழிகளும், தமிழ்ச்சொல் வடிவம் பெற்றுவிட்டால் தமிழ்ச்சொல் வகையில் ஏற்கலாம் என்றது, வாழும் மொழியைக் காப்பாற்றவேயாம்.

நன்னூலார் ' வட மொழியாக்கம் ' என்றே, இதற்குச் சில விதிமுறைகளை வகுத்தார். வடமொழிக்கேயுரிய சிறப்பெழுத்துக்களைச் சுட்டி, அவற்றைத் தமிழாக்கும் முறைகளுக்குச் சில விதிகள் வகுத்தார்.

ஸ்ருதி – சுருதி, அர்த்தம் – அருத்தம் , தர்மம் – தருமம், பாக்ய – பாக்கியம்

இயேசு, விவிலியம், யோவான், யாக்கோபு, சன்னல், சலாம் எனப் பலவுள. தக்ஷிணம் – தக்கணம், தெக்கணம்.

ஜோசப் – வளன். வில் (Will)– உயில். பாட்டில் – போத்தல். பட்டன் – பொத்தான். ஆயிரம் காட்டுகளுக்கு மேல் தமிழாக்கப்பட்ட சொற்கள் உள. மணிமேகலைச் சாத்தனாரும் இராமாயணக் கம்பரும் பாரதவில்லிப்புத்தூராரும் இவற்றுக்குக் காட்டிய வழிகளே, காலந்தோறும் பின்பற்றப்பட்டு வந்தன.

மிளகு தெரிந்த நாம் புதிதாக வந்ததை மிளகாய் ஆக்கவில்லையா? வள்ளிக் கிழங்கு தெரிந்த நாம், புதிதாக வந்ததை 'உருளைக் கிழங்கு ' ஆக்கவில்லையா ? தக்காளி தமிழாகிவிட்டதே. (இப்போது இவை பொட்டாட்டோ, டொமாட்டோ எனப்படுவது கொடுமையல்லவா ?) முட்டைக் கோசு, பூக்கோசு – தமிழாகவில்லையா? எளிதாக இல்லையா ? இனிதாக இல்லையா ?

கம்பர் வடமொழிக் காப்பியத்தைத் தமிழில் தந்தவர். அவர்தம் 'தமிழாக்கச் சொற்' கள் பற்றிய, ஒரு தொகுப்பை வெளியிடலாகாதா ? கம்பர் கழகங்கள் நம்பத்தகுந்த நன்றியுணர்வுடன் செயற்படலாமே ?

ராம், ராம என்பதே கூடாது என்று, ' காசில் கொற்றத்து இராமன் கதையரோ ' எனப் பாடியவர் அவர். அவர் வாயில் ஸீதா வரமாட்டாள்.' சீரை சுற்றிய சீதை ' பற்றியே அவர் பேசுவார். 'லக்ஷ்மண் ' – இன்று. அட பாவிகாள்! கம்பர் இவனை இலட்சுமணன் என்றால் கூடப் போதாதென்று, ' இலக்குவன் ' எனத் தமிழாகவே மாற்றினாரே!

ரத்தாக்ஷன் – குருதிக் கண்ணன் ஆனானே ? ஹனுமானை, அனுமன் என்றே அழைப்பானே ? கம்பன் ஓரிடத்திற் கூட, தமிழ்மொழியை, ஒலிமரபை, சொல்மரபை, பண்பாட்டு மரபை மீறவில்லையே ? இதை விளக்க இங்கு யாரும் இல்லையே.

வடமொழித் தொடர்கள் தொலைக் காட்சியில் வந்தன. வீர் – வீரன். பீம் – பீமன். அவர்கள் வீர், பீம் – என்னும் போது, நாம் அரைகுறைப் பேர்வழிகளாகவே அவர்களைக் காண்கிறோம். நமது ' அன் ' சேர்ந்தாலன்றி, அவன் நமக்கு விளங்காதவனாகின்றான். தமிழ்ப் பெயர்கள் காலூன்றி நிற்கும். கணேசன், முருகன், உமையாள், கண்ணப்பன், அருச்சுனன், அரிச்சந்திரன், வீடணன், மேனகை, திலோத்தமை, சகுந்தலை எனத் தமிழாக அழைக்கப்படுவது நம் மரபு.

வடநாட்டுக் கட்சிப் பெயர்கள் பல. ஜனதாதள் – ஜனதாதளம். ஜனதா தள்ளில் என்று சொல்லிப் பாருங்கள். பொருந்தி வராதே. ஜன்சங் – தமிழில் சனசங்கம் ஆகும். சங்பரிவார் – தமிழில் சங்கப் பரிவாரம் ஆகும். சேவக் சங் – தமிழன்று – சேவகச் சங்கம் ஆகும் அது.

தமிழில் தனிமெய்யெழுத்து மொழிக்கு முதலில் வரவே வராது. க்ரியா, ப்ரியா, ஸ்வரம், ஸ்வர்ணம், ஸ்ருதி – சொர்ணம் கூட அன்று சொருணம் என்பதே மரபு வழித் தமிழாக்கம். நம் சொற்கள் பல தோசா, வடா ஆவதும் அடடா எனற் பாலனவே ! என்ன செய்வது ?

பிறமொழிச் சொற்களை எவ்வாறு தமிழாக்கம் செய்வது என்பதை, நாம் குழந்தைப் பருவம் முதல் கற்றுக் கொடுக்க வேண்டும். இதற்கொரு தனி இலக்கண நூல் எழுதலாம்.

லோக்சபா என்று தமிழில் எழுதக் கூடாது. லோகசபை, உலகசபை, மக்கள் மன்றமாகும் அது. மக்களவை என அழகிய தமிழாகிறது.

பாலர் முதலே.

1. தமிழ்ச் சொற்களையே ஆளுதல்

2. தமிழாக்கச் சொற்களாக்கி ஆளுதல்

3. அப்படியே ஆள நேர்ந்தால், 'மேற்கோள் குறியிட்டோ', 'சாய்வெழுத்தாகவோ ' எழுதுதல்

என இம் மூன்று நெறிகளையும் தொடர்ந்து கற்பிக்க வேண்டும்.

பேச்சு வழக்கில் பிற மொழிச் சொற்கலப்பு மிகுதி. அதனால் பேசுவது போல் எழுதாமல், எல்லோருக்கும் விளங்கும் பொதுத்தமிழுடன் கட்டளை மொழியையே பின்பற்றினால்தான், மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் திரிபுறாத நம் தமிழ், இனியும் அவ்வாறே காக்கப்படும். பேப்பரை எடு, லிப்டில் போகலாம், போனில் பேசு, call பண்ணு – இவற்றை எழுதும் போதாவது தாளை எடு, மின்தூக்கியில் போகலாம், பேசியில் பேசலாம், பேசியில் கூப்பிடு என எழுதினால் தமிழ் காக்கப்படும்.

உலக மொழிகள் பல முற்றிலும் வழக்கொழிந்தன. சில ஏட்டு வழக்குடன் நின்றன. மற்றும் சில பழைய மொழி. புதிய மொழி என இரண்டாயின.

தமிழ் ஒன்றே அன்றும் இன்றும் ஒரே மொழியாக வழங்கிவருகிறது. இலக்கியத் தமிழுக்கு, அகர முதலி வைத்துப் படிப்பது ஒரு மொழிகற்கும் நெறியே. அருஞ்சொல்லுடைமை மட்டும், ஒரு மொழியைப் 'பழையது ' எனப் பிரித்துவிடாது. நம் கடமை, பொறுப்பு பெரிது. சங்க இலக்கிய அகராதி, அருஞ்சொல் அகராதி என நூறு தொகுப்புக்கள் வரவேண்டும்.

மிகப் பெரும் செல்வமுடைமை பெருமையன்று அதனைக் களவு போகாமல் காப்பதே பெருமையாகும்.

ஆங்கிலமும் பேசுவது போல் எழுதுவதில்லை என்பதை நாம் அறிதல் வேண்டும் /u = You = இவற்றிடையே ஒலிப்பில் வேறுபாடுண்டா ? Know = என்பதை, பேச்சில் ஒலிப்பது போலவே எழுதினால், No என்றல்லவா எழுதவேண்டும் ?

புதுச்சேரியில் முன்பு ஒரு முறை, இலக்கணக் கருத்தரங்கில் அறிஞர் சிலர் பேசுவதுபோலவே, தமிழை எழுதவேண்டுமென்றனர். இரண்டற்கும் இடைவெளியைக் கூடியவரை குறைக்கவேண்டும் என விவாதித்தால் நன்றாக இருந்திருக்கும். எழுத்துத் தமிழை நீக்கி, பேச்சுத் தமிழே தமிழென ஆகி விட வேண்டுமாம். மக்கள் மொழி அதுதானாம். பேச்சுமொழிதான் (Spoken Language) மொழியாம். யாரோ ஒரு மேனாட்டான், எச்சூழலில் எது கருதியோ, அதற்கு முதன்மை தந்து, அதுவே மொழி என விவாதித்து – ஆனால் அவனும் எழுத்து மொழியிலேயே எழுதியிருந்தான்.

நம் அறிஞர் சிலர் கிளிப்பிள்ளைகள். இவர்கள் மேனாட்டறிஞர் சொன்னால் மட்டுமே, ஒப்புக் கொள்வார்கள். அவர்கள் சொல்வதையும் அரைகுறையாக விளங்கிக் கொண்டு, அதையே திரும்பச் சொல்வார்கள். நமது கருத்தை, நம் மொழிக் கொள்கையை அவர்களும் அறிந்து வியக்கும் வண்ணம் கற்று, சிந்தித்து, எழுத வேண்டுமென்னும் தற்சிந்தனையே அற்றவர்கள் இவர்கள்.

அக் கருத்தரங்கில் பேராசிரியர் ஒருவர் ஓர் ஆங்கில இலக்கண நூலைக் கொண்டு வந்திருந்தார். அது புத்தம் புதிய ஆங்கில இலக்கண நூல், அதன் பின்னட்டை வெளிப்பக்கத்தில், புத்தகத்தைத் திருப்பியதும் படிக்கும் படி, குறிப்பு ஒன்று இருந்தது.

'இந்தப் புதிய இலக்கணம் ஆங்கில குறுமொழி, கொச்சைவழக்கு, பிழைமொழிகளைத் தவிர்த்து, கட்டளை மொழிக்கே (Standard Language) இலக்கணம் கூறுகிறது.'

என அக்குறிப்புத் தொடங்கிய அப் பகுதியை அவர் படித்துக் காட்டியதும், அனைவரும் மௌனமாயினர். மொழி என்றால் அது கட்டளை மொழியே என்பதை வலியுறுத்தியது அந்நூல்.

மற்றவையெல்லாம் சுற்றிச் சுற்றி வரலாம். ஏறி இறங்கலாம். ஆனால் மூலவிசை கட்டளை மொழியே. அருமருந்தன்ன பிள்ளை என்பது, ஏட்டில் இருக்கும் வரைதான், அருமந்த பிள்ளை, அருமாந்த பிள்ளை எனும் சொற்களுக்குப் பொருளுணரப் படும். இல்லையென்றால் இது 'ஏமாந்த பிள்ளை' ஆகிவிடுதலும் கூடும்.

ஓர் ஆங்கிலேய அருட்தந்தை தமிழ்ஈழத்தில் ஒரு சர்ச்சுக் கோயிலுக்குப் போயிருந்தார். அங்குத் தமிழில் வழிபாடு நடத்திய, தமிழ்ப் பாதிரியார் ''மிசியோனாரிகளே!'' என அழைத்துப் பேச்சைத் தொடங்கினாராம். Missionaries (மிசனரீஸ்) என்ற ஆங்கிலச் சொல்லை, அவர் தமிழாக்கம் செய்து 'மிசியோனாரிகளே' என்றது, அவ் ஆங்கிலேயருக்கு வியப்பை மட்டுமன்றி, மகிழ்ச்சியையும் தந்ததாம். வழிபாடு முடிவில் அவர் கூறியது வருமாறு. "நண்பர்களே! நாங்கள் மிசியோனாரீஸ் என்ற இலத்தின் சொல்லைத்தான், 'மிசனரீஸ் என்று ஆங்கிலப் படுத்தினோம். நீங்கள் அதை மீண்டும் தமிழ்ப்படுத்தும்போது, 'மிசியோனாரிகளே' என்றது, நாங்கள் எடுத்த அம் மூலச் சொல்லையே, நீங்கள் மீண்டும் சொல்வது போலிருந்தது. இவ்வாறுதான் நீங்கள் எந்தப் பிறமொழிச் சொல்லையும், தமிழ் ஒலிப்பு முறை எழுத்துக்கு ஏற்ப மாற்றி,

உங்கள் தமிழ்போல உச்சரிக்க வேண்டும். அந்தத் தமிழாக்க வடிவம் (Tamilised form) தமிழாகிவிடும் ". அருட்தந்தை தனிநாயக அடிகளார் நடத்திய Tamil Culture எனும் ஆங்கிலத் தாளிகையில் கண்டது இது.

தொல்காப்பியரே மீண்டும் ஆங்கில அருட்தந்தை வடிவில் வந்து நினைவுபடுத்தினாரோ என எண்ணத் தோன்றுகிறது. முற்றிலும் தமிழ் ஒலிகளுக்குள் அடக்குக. ஆங்கிலேயன் 26 ஒலிகளுக்குள் அடக்கவில்லையா ? 'டின்னவேலி', 'மெசுரா', 'இண்டியா', டமில் என்றானே ? இலத்தின், பிரெஞ்சுட்பட உலகமொழிச் சொற்களை எல்லாம் ஆங்கிலப் படுத்தினானே ?

✧ ✧ ✧

# 4. தமிழ்ப் புலவர்களும் இருவகை வழக்கும்

தமிழ்ப் புலவர்கள் இவ்விருவகை வழக்குகளையும் சமனிலைப் படுத்தி, எடுத்தாள அரும்பாடு பட்டுள்ளனர். எளிமை கருதி மக்கள் வழக்கையும் ஏற்குமளவு ஏற்கவேண்டும். அதே சமயம் ' செம்மொழி ' யையும் காக்க வேண்டும்.

சிலபோது நாம் எழுதும் துறைவகை, இலக்கிய யாப்பு வேறுபாடுகளுக்கு ஏற்ப, மொழி நடை மாற வேண்டியிருக்கும். சங்கப் பாடல்களில் கலி, பரி, வரிப்பாடல்கள், நாட்டுப்புற வடிவங்களின் மறுபதிப்புக்கள். சந்தப் பாக்கள், கீர்த்தனைகள், கண்ணிகள், சித்தர் பா வடிவங்களில் மக்கள் வழக்குடன், பிறமொழித் தமிழாக்கச் சொற்கலப்பு மிகுதி.

எடுத்துக்காட்டிற்கு பாரதியார் பாடல்களைக் காண்போம்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே ! - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே !

இக் கும்மிப் பாடலில், சந்தத்திற்கு ஏற்ப பாயுது, பிறக்குது என வர வேண்டியுளது. கீர்த்தனை மெட்டில் பாடும் போது,

சாதிச் சண்டை போச்சோ - உங்கள்
சமயச் சண்டை போச்சோ !

என்று, ' போச்சோ ' ( போயிற்றோ ) வருகிறது. நொண்டிச் சிந்து, காவடிச்சிந்து, கிளிக்கண்ணி போல்வனவற்றிலும் கூடுமானவரை தொண்ணுற்று ஒன்பது பங்கு, கட்டளை மொழியே ஆளப்படுகிறது. மணக்குளத்து வினாயகர் நான்மணி மாலையில், செம்மொழி வடிவச் சிறப்பைக் காணலாம்.

நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல் - உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்
சிந்தையே இம்மூன்றும் செய்

பாரதியாரின் உரைநடையில் பேச்சுமொழி, பிறமொழிக் கலப்பு மிகுதி. ஆனால் ' பாட்டு ' என வரும் பொழுது, அது நல்ல தமிழாகவே இருக்கும்.

ஆங்கிலத்தை எடுத்தாள்வதில் காட்டும் அக்கறையை, நாம் தமிழில் காட்டுவதில்லை. 'எனக்குத் தமிழே தெரியாது. நானும் பெரிய எழுத்தாளனாகி விட்டேன் ' என்பது தான் பெருமை எனப் பேசும் படைப்பாளிகளே கூடுதலாகி வருகின்றனர். தமிழ்ப் படைப்பு, கற்பனைக் கருத்து அடிக்கருத்து போல்வனற்றில் மட்டுமன்றி, மொழியிலும் கீழேதான் வீழ்ந்து விடுகிறது.

சிற்பியின் ' ஒரு கிராமத்து நதி ' முற்றிலும் மக்கள் வழக்காற்றுப் படைப்பு.

ஆழியாற்றின் கரையிலுள்ள ' ஆத்துப் பொள்ளாச்சி ' கதை இது.

தெருக்கள் என்று பெயர் சூடும்
உருக்குலைந்த புழுதித்தடங்கள்

அங்கங்கே
அழுக்கை இழுக்கியிருந்தாலும்
சராசரி வாழ்வில்
தும்பைப்பூ மனிதர்கள்

அழிகிற கிராமத்துப் பண்பாடு
பிழிகிறது மனத்தை

தானும் உணவாகி
மீனும் உணவாகி
இந்த நதிக்கு
நானும் உணவாவேன்

ஏர்பிடித்து நிலத்தில்
எழுதியது தவிர
ஏடெழுதிக் கற்றதில்லை
ஆனாலும்
வில்லியும் கம்பனும் நாவில்
சடுகுடு விளையாடுவார்கள்

இவ்வாறு, கிராமத்துப் பாவியமேயானாலும், பாரதியார் போல் செம்மொழித் தடத்தில் நடை பயிலும் சிற்பி பாலசுப்பிரமணியம் ' தெற்கு வளவுப் பாட்டையா ' பேச்சை மட்டும் அப்படியே தருகிறார். இவ்வாறு வரும்போது இனிமை கூடுகிறது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். ஆனாலும் படைப்பாளிக்கு மொழிநடையில் ஒரு கண்ணும் கருத்துமிருப்பதை மறத்தல் கூடாது.

சிலர் தமிழ் மொழி அறிவு இல்லாததால், தாம் எழுதுவதே தமிழென்று, பிழையற்ற மொழிச்செப்பத்தைக் கிண்டல் செய்கின்றார்கள். சிலர் தெரிந்தும் வேண்டுமென்று, அகந்தையால் தவறு செய்கிறார்கள். வேறு சிலரோ, இவ்வழியில் தமிழைச் சிதைப்பதிலேயே நோக்கமாக இருக்கிறார்கள்.

தாம் உட்கார்ந்திருக்கும் கிளையையே வெட்டி விட்டு வீழ்பவர்கள் இவர்கள்.

பேச்சுத் தமிழை எடுத்தாளலாம், இடம் நோக்கி எழுதும் தடம் நோக்கி, சிற்பியும் 'பாட்டையா வாக்காகப் பாடுகிறார் ' கேளுங்கள்.

ஏருநிண்ணா சோறு நிண்ணுறும்

புளியடியிலே செரிச்சவனும் உண்டு
வேம்படி விட்டு விலகாதே

கடப்பாரை முழுங்கிச் செரிச்சவனும் உண்டு
கம்மங்கூழ் விக்கிச் செத்தவனும் உண்டு

மாட்டுக்குப் பல்லை புடிச்சுப் பாக்கணும்
மனுசனுக்குச் சொல்லை புடிச்சுப் பாக்கணும்

மளமளவென்று உதிரும் வேப்பம் பூக்களைப் போல, இவைகள் அவர் வாயினின்றும் உதிர்கின்றனவாம். இதைச் சொன்ன பிறகு, சிற்பி,

'திருவள்ளுவரும் தெற்குவளவுப் பாட்டையாதானே' என்று கேட்கும் பொழுது, 'ஆமாம்' என்று நம் தலை அசைகிறது.

இப்போது எண்ணிப் பாருங்கள். பேச்சு வழக்கும் இனிதாகும். செம்மொழித் தடத்தில் இணையும் போது. செம்மொழிக்கும் இசையினிமை தரக்கூடும் – வாய்மொழிப் பண்பு வரையறையோடு கலக்கும்போது.

பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் ஒரு கயிறு இழுப்புப் போட்டியில் ஈடுபட்டுள்ளன. இது ஒரு தொடர் கயிறிழுப்பாகும். ஒரு பக்கமாகச் சாய்ந்து விழவும் கூடாது. விழப் பண்ணவும் கூடாது.

ஒன்று நேர்விசை. மற்றது எதிர்விசை. இதனால் இயங்கும் பொறி இயந்திரம் இது.

தமிழ் இளமை மாறாதிருக்க இவை உதவுகின்றன. இனிப்பும் காரமும் உண்பதுபோல, இவை இனிமை தருவது. படைப்பவனின் உள்ளுணர்வையும், உள் நோக்கத்தையும், அறிவையும் பொறுத்திருக்கிறது.

செம்மொழியின் சீர்குலைப்பாளர்கள் எல்லாம், தாம் இறக்குமுன்பே, தம் படைப்புக்கள் சீர்குலைவது கண்டு, தம் மனம் சீர்கெட்டுப் போகின்றவர்களே !

இந்தப் படைப்பு 'யானைகள்' தம் தலைமீது மண்ணை வாரிப் போட்டுக் கொள்கின்றன. அவ்வளவே !

பேராசிரியர் பழ. அன்புமீனாள் தொகுத்த, நகரத்தார் வழங்கிய ஒப்பாரிப் பாடல்கள்; அவை நாட்டுப்புற, வாய்மொழி இலக்கிய வடிவிலேயே தரப்பட்டன.

ஒருவர் இறந்தபோது ஒரு நகரத்தார் ஆச்சி ஒப்பாரி வைத்து அழுததில் ஒரு பகுதி.

மன்னிப் பொறந்தவுக
மாளுறதே நிச்சயந்தான்
மாளாம இருக்க
வரம் பெற்றார் யாருமில்லை

தரணிப் பொறந்தவுக
சாகறதே நிச்சயந்தான்
சாகாம இருக்க
தவம் பெற்றார் யாருமில்லை

பூமிப் பொறந்தவுக
போறதுவே நிச்சயந்தான்
போகம இருக்க
புகழ் பெற்றார் யாருமில்லை

இதனை ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவன என்பது இலக்கியம். அதற்கு வழிகொடுத்து, வாழ்வளித்தது இவ்வாய் மொழிப் பாட்டு. இவை நினைத்து, சிந்தித்து வந்தவை அல்ல. அப்போதைக் கப்போது, புன்னைப் பூப் போலே உதிர்பவைதான். இதில் ஒலித்திரிபுகள் உள. இதனையே கீழ் வருமாறு எழுதலாம்.

மண்ணில் பிறந்தவர்கள்
மாளுவதும் நிச்சயந்தான்
மாளாமே இருக்க
வரம்பெற்றார் யாருமில்லை

தரணிப் பிறந்தவர்கள்
சாகிறதும் நிச்சயந்தான்
சாகாமே இருக்க
தவம்பெற்றார் யாருமில்லை

பூமிப் பிறந்தவர்கள்
போவதுவும் நிச்சயந்தான்
போகாமே இருக்க
புகழ் பெற்றார் யாருமில்லை !

இவ்வாறு வாய்மொழி வழக்கையும் அச்சிட்டு, எதிரேயே வரிவடிவ வழக்கையும் அச்சிட வேண்டும். பேராசியர் பழ அன்புமீனாள் தொகுத்த இரு நூற்றுக்கு மேற்பட்ட ஒப்பாரிப் பாடல்களில், இலக்கியச் சொற்கள், வட்டார வழக்குச் சொற்கள் எல்லாம் வந்து விழுகின்றன.

தமிழில் வாய்மொழி இலக்கியமே வரிவடிவச் செம்மைக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டியது. அதைப் புறக்கணிக்க வேண்டாம். ஆனால் தமிழின் செம்மை பற்றியும் கடைக்கணிக்க வேண்டும்.

பேச்சில் வரும் விரைவு, குறைவு, சிதைவு, பிழைகள் எல்லாம், தூசிதட்டப்பட்டால், தூயதாகிவிடும். அது சுடச்சுடரும் பொன்னாகும்.

வாய்மொழி இன்னமும் முற்றிலுமாகச் செதுக்கப்படாத சிற்பம். சிப்பி களையப் படாத முத்து. வெட்டியெடுத்த தங்கம். கடையப் படாத வைரம். அவை இன்றேல், பிற செல்வங்கள் யாவை ?

தமிழர்கள், தொல்காப்பியர் காலம் முதல் இதை நன்குணர்ந்திருந்தார்கள். அதனால்தான் அவர் விடுகதை, பழமொழி, கதைகள் என இவற்றையும் சேரிமொழி, திசைமொழிகளையும் பற்றி விளக்கினார்.

அதனால் பேச்சுத் தமிழை இகழமாட்டோம். வாய்மொழி இலக்கியத்தை மறுக்க மாட்டோம். பேச்சில் ஏற்படும் குறைகளைத் தாழ்வெனக் கூறோம். சோம்பல், விரைவு, தடுமாற்றம், அறியாமை – இவை மனித இயல்புகள். அவை மொழியிலும் படியவே செய்யும்.

சிற்பத்தை முழுமையாகச் செதுக்கிக் கண்திறந்து தெய்வ நிலைக்கு உயர்த்துவோம். முத்தைக் கழுவி எடுத்துக் கோப்போம், மாலையாக. தங்கத்தை உருக்கி, மாசுநீக்கிப் பத்தரை மாற்றுப் பொன்னாக்குவோம். வைரத்தை வைரத்தால் கடைந்து, வடிவப்படுத்துவோம். இவை மொழிக்கும் முற்றிலும் பொருந்தும்.

இவையே இயல்பான வளர்ச்சி. இயற்கைக்கும் பொருந்திய முன்னேற்றம்.

✧ ✧ ✧

# 5. தமிழர்களின் பெயர்கள் படும்பாடு

தமிழில் இன்று பெயர்கள் படும்பாடு பெரிது. யாரும் தமிழ்ப் பெயர்களே வைத்துக் கொள்வதில்லை. தமிழன் என்ற அடையாளம் பெயரிலும் இருக்கிறது. கோவலன், மாதவி வழி தனக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு 'மணிமேகலை' என்று பெயரிட்டான். அது அவனுடைய குல தெய்வப் பெயர். 'மணிமேகலா தெய்வம்' என்பது தமிழை வடமொழியாக்குவது.

பாட்டன் பெயரைப் பேரனுக்கிடும் மரபினாலேதான், பேரன் என்றனர். பெயரன் – பேரன் ஆனான். பேர்த்தியும் பாட்டி பெயரை உடையவளே. குலதெய்வப் பெயரிடல், பொதுவாகத் தெய்வப் பெயரிடலும் மரபாக இருந்தது.

நல்ல நல்ல தமிழ்ப் பெயர்களைச் சங்க காலம் முதல் காணலாம். புதுவதாகப் படைத்த மலர்விழி, பூங்கொடி, அரசி, கயல்விழி, கண்மணி, தேன்மொழி, மலர், பூங்குழலி, குயிலி. மயிலி, எனவரும் பெண்பாற் பெயர்களைக் காண்க. தமிழில் ஆயிரம் பெயர்களிருக்கவும் இன்று வடமொழி, இந்திப் பெயர்களையே, தமிழாக்கமும் செய்யாமல் அப்படியப்படியே ஆள்கின்றனர்.

நகரத்தார் வட்டார வழக்கில் ஆணுக்கும் பெண்ணுக்கும் அப்பன், அம்மை சேர்த்தே பெயரிடுவர். அவர்களின் பத்திமைக்கு இது அடிப்படையாகலாம். நாச்சியப்பன், மெய்யப்பன், நாகப்பன், பெரிச்சியப்பன் என்றும் வள்ளியம்மை, தேனம்மை, நாகம்மை, நல்லம்மை என்றும் இவ்வாறு வழங்குவர். தமிழரனைவருக்கும் இது பொருந்துமெனினும், பெரும்பாலும் இது நகரத்தார் மரபாகவுளது. வேலு என்னாது வேலப்பன் என்றும் மருது என்னாது மருதப்பன் என்றும் வள்ளி என்னாது வள்ளியம்மை என்றும் நாகு என்னாது நாகம்மை என்றும் இவ்வாறு வழங்குவர்.

இன்றோ அதே நகரத்தார்களிடம் அஜய், விஜய், வினோத், கணேஷ், மகேஷ், சுரேஷ், விக்னேஷ் புகுந்து விட்டனர். பிறமொழி நடிகர் நடிகைகள், மட்டையடி ( கிட்டிப்புள் – கிரிக்கெட்டு ) வீரர்கள் எனப் புகழ்பெற்றவர்களின் பெயர்களே பெரும்பான்மையின. குலதெய்வம், கடவுட் பெயர்களெல்லாம் குடிபோய்விட்டன.

ஜெய்காந்த், விஜய்காந்த், ஸ்ரீகாந்த் – என்பன பல. ஜியா, ரோஹன், த்ரிஷா இப்படிப் பல. பொருள் விளங்காதனவே மிகப் பல. இன்னும் சொன்னால் தனிப்பட்டவர் சிலர் வருந்தக்கூடும். யாரையும் நினைத்து, இதைக் குறிப்பிடவில்லை.

தமிழ்ப்பெயர்களை ஆள்வதிலும் பிறமொழிப் பெயர்களை ஆள்வதிலும் சில வரன்முறைகளை, தமிழ்மணி இதழில் (14 – 7 – 1990 )யான் எழுதியதுண்டு. ஆந்திரா, கேரளா, கர்நாடகா என்பன ஆந்திரம், கேரளம், கருநாடகம் என்றே தமிழில் ஆளப்பட வேண்டும் எனக் குறித்திருந்தேன்.

கர்னாடிக் – கர்நாடகா எனச் சிதைத்து வழங்கினால் கருநாடகம் விளங்காமற் போய்விடும்

'கர்நாடகா' என்ற பெயரைக் 'கர்னாடிக் ' என ஆங்கிலத்திலும் கருநாடகம் எனத்தமிழிலும் ஆள்கிறோம் என்றால், அதன் காரணம் என்ன ? கருணாதாஸ் தமிழில் ' கருணை தாசன் ' ஆவதேன் ? எல்லாம் தமிழாக்க மரபு வழிபட்டனவே. பாக்யராஜ் – பாக்கியராசு, பாக்கியராசன் ஆதல் வேண்டும்.

தமிழிலேயே எழுத்துப் பேறு பெற்று எளிமைப்படும் பெயர்களைப் பாருங்கள். வேல் – வேலு, வடிவேல் – வடிவேலு, சிங்காரவேல் – சிங்காரவேலு. சித்ரவேல் தமிழ் மரபின் படி சித்திரவேலு ஆவார்.

சுப்பிரமணியன் என்பதை சுப்ர மணியன், சுப்ரமண்யன், ஸூப்பிரஹ்மண்யன் என்றெல்லாம் திரிப்பன தவறு. ஓர் இசைப் பேரறிஞர் ' சுப்ரஹ்மண்ய பாரதியே ' எனப் பாடியதைக் கேட்டுத் தூக்கிவாரிப் போட்டது. இதைக் கேட்டால் பாரதியாரே அயர்ந்துபோய், மனங்குமுறியிருப்பார்.

தெய்வப் பெயர்களையும் சிதைக்காமல் வழங்கலே நல்லது. அருள்மொழி புணர்ச்சிப் படி 'அருண்மொழி ' ஆகும். சோழவேந்தன் இராசராசனுக்கும் சேக்கிழாருக்கும் ' அருண்மொழி ' என்ற பெயர்

வழங்கியதுண்டு. இன்றும் அருண்மொழி எனப் பெயர்வைத்து ' அருண் 'என அழைத்து மனநிறைவடைகிறோம். ' அருண் ' ஆங்கிலப் பெயர் போலவும் இருப்பதில் ஒரு மகிழ்ச்சி ! அந்த அளவு பிறமொழி ஆர்வம் நம்மிடம் காணப்படுகிறது.

## அம்மன் பெயர்கள்

குழல்வாய்மொழி என்பது அழகிய தமிழ்ப் பெயர். தேவாரகாலத்துத் திருக்கோயில்களின் அம்மன் பெயர்களைத் தொகுத்தால், அழகழகான மகளிர் பெயர்கள் கிடைக்கும். குழல்போல் இனிது. யாழ்போல் இனிது என்னுமாறு பேசுபவளே குழல்வாய்மொழி. அதைச் சிலர் 'குழலாமணி ' என்பது, பொருள் விளங்காது போகும். (தமிழ்மணி 14 – 7 – 90 )

' தமிழில் ஒரு மரபுப் பிரச்சினை 'என்று பேரறிஞர் ஐராவதம் மாதேவன், அதே தமிழ்மணியில் கீழ்வருமாறு மிக விரிவாக எழுதினார். அதைப் பற்றி மிக விரிவான விவாதங்களும் பிறகு வந்தன. அவர் எழுதிய அரிய கட்டுரையின் சில பகுதிகள் வருமாறு. ( 14 – 7 –1990 )

## தமிழில் ஒரு 'மரபு'ப் பிரச்சினை

வடமொழிப் பெயர்களை தமிழில் எழுதும் பொழுது – அன் (அல்லது ) – அர் விகுதிகளைச் சேர்த்து எழுதுவது தமிழ் மரபாகும். ராம க்ருஷ்ண போன்ற வடமொழிப் பெயர்கள் இராமன், கிருஷ்ணன் என்று தமிழில் வழங்குகின்றன.

அதே போன்று வட நாட்டுப் பெரியார்களின் பெயர்களைத் தமிழாக்கம் செய்யும் பொழுது மரியாதைப் பன்மையைக் குறிக்கும் – அர் விகுதியைச் சேர்த்து எழுதுவது நம் மரபு.

(எ– டு) அரவிந்தர், திலகர், விவேகானந்தர்.

வரலாற்றுப் புகழ்பெற்ற பெயர்களையும் இவ்வாறே எழுதி வந்திருக்கிறோம்.

(எ – டு) புத்தர், அசோகர், ஹர்ஷர்.

கடந்த சில ஆண்டுகளில் தான் இந்த மரபு ஆங்கிலத்தின் தாக்கத்தால் சீர்குலைந்து வருகிறது. ஆங்கில மொழியாக்கத்தில் பெயர்களின் பின்னர்– அன்/–அர்/–அம் விகுதிகள்

சேர்க்கப்படுவதில்லை என்பதாலும், பெயர்களின் ஈற்றில் உள்ள அகரம் ஆங்கிலத்தில் ஆகாரமாக நீட்டி உச்சரிக்கப்படுகிறது என்ற தவறான எண்ணத்தினாலும், தமிழிலும் இப்போது இராமன், கிருஷ்ணன் போன்ற மரபுப் பெயர்களை 'ராமா' , 'கிருஷ்ணா' என மாற்றி எழுதி வருகின்றனர்.

இதே காரணங்களினால் தமிழ்ப் பெயர்ச்சொற்களின் ஈற்றில் இருக்கவேண்டிய – அம் அத்துச் சாரியைகளும் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. 'கேரளம்', 'கர்நாடகத்தில்', போன்ற வழக்குகள் நலிந்து 'கேரளா', 'கர்நாடகாவில் ' முதலிய தமிழ் இலக்கணத்திற்குப் புறம்பான சொற்கள் புழக்கத்தில் வந்து கொண்டிருக்கின்றன.

தமிழில் ஆண்பால் ஒருமைப் பெயர்கள் பெரும்பாலும் ஆகாரத்தில் முடிவதில்லை (அப்பா, அண்ணா, மாமா போன்ற உறவுமுறைச் சொற்கள் நீங்கலாக ). ஆனால் தற்காலத்தில் பலரும் இந்த மரபைப் புறக்கணித்து எழுதத் தொடங்கியிருக்கிறார்கள். விவேகானந்தர், தயானந்தர், சிரத்தாநந்தர் என்று எழுதிவந்த தமிழர்கள் இன்று சிவானந்தா, சின்மயானந்தா என்று எழுதத் தொடங்கியிருக்கிறார்கள்.

'சங்கரா நேத்திராலயா', ' விவேகானந்தா வித்தியாலயா' போன்ற 'நீண்ட' பெயர்களைக் கொண்ட பலகைகளை எங்கும் காணமுடிகிறது. ராமதாஸஎன்ற வடமொழிப் பெயரை இராமதாசர் என்றுதானே இதுவரை தமிழில் எழுதி வந்திருக்கிறோம்? ப்ரேமதாஸ் மட்டும் 'பிரேமதாசா' வாக ஆவதேன் ? ஹர்ஷவர்த்தனர், பிரபாகரவர்த்தனர் என்று நம் வரலாற்றுப் பெயர்களை எழுதி வந்திருக்கும்போது இலங்கை முன்னாள் அதிபரின் பெயரை மட்டும் 'ஜயவர்த்தனா' என்று ஏன் நீட்டி எழுதவேண்டும் ?

பெயர்களுடன் வேற்றுமை உருபுகளைச் சேர்க்கும் பொழுது கூட –அன்/ –அர் விகுதிகளையோ, அத்துச் சாரியையோ கூட்டாது 'சின்மயானந்தாவின் பேருரை', 'ஜயவர்த்தனாவின் அறிக்கை', 'உபேந்திராவின் வருகை', 'கேரளாவில் மழை' என்றெல்லாம் பத்திரிகைகள் எழுதி வருகின்றன. இவற்றிற்குத் தமிழில் இலக்கணம் எப்படிக் கூறுவது ?

தமிழ்நடை இப்படியே மாறிக்கொண்டு போனால் அடுத்த சில ஆண்டுகளில் நமது குழந்தைகள் 'ராமாயணாவில் ' 'ராமாவும்' 'லக்ஷ்மணாவும்' 'ராவணாவுடன்' போரிட்டதைப் படிப்பார்கள். வரலாற்று நூல்களில் வட நாட்டு 'புத்தா'வும், 'அசோகா'வும், 'குப்தா'க்களும்,

தமிழகத்து 'சேரா'க்கள், 'சோழா'க்கள், 'பாண்டியா'க்களுடன் வருகை தருவார்கள். தமிழ்ப் பாட நூல்களில் "எங்கள் கிராமாவில் உள்ள குளாவில் குளித்து மராவில் ஏறி பழாவைப் பறித்துத் தின்றோம் " என்று 'கதா'க்கள் வரும். 'சபா'க்களில் பாடகர்கள் 'தியாகராஜா'வின் 'கீர்த்தனா'வை கல்யாணி 'ராகா'வில் ஆதி 'தாளா'வில் பாடுவார்கள்.... இவ்வாறு தமிழ் மரபு பற்றி பேரறிஞர் ஐராவதம் மகாதேவனும் பிற ஆர்வலர்களும் நிரம்ப எழுதியிருந்தனர். இன்றோ நிலைமை அதைவிட மிக மோசமாகி விட்டது.

✧ ✧ ✧

# 6.தமிழ் மொழிக் காவலர்கள்

தமிழைக் காப்பாற்றும் முயற்சியுடையவர்கள் என்று சிறப்பித்துப் பேராசிரியர்களையும், பெரியவர்களையும் தமிழ்க் காவலர், செந்தமிழ்க் காவலர், முத்தமிழ்க் காவலர் என்றெல்லாம் அழைக்கின்றோம். ஆனால் தமிழ் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் ஆற்றலுடையதாக இருக்கிறது என்பதையும் தன்னைக் காலந்தோறும் அவ்வச் சூழலுக்கேற்பப் புதுப்பித்துக் கொள்கிறது என்பதையும் சிந்திக்க மறந்துவிடுகிறோம். தமிழ் மொழிக்குள்ளேயே இருக்கும் ' மொழிக் காவலர்களை ' எண்ணிப் பார்க்க வேண்டாமா ?

" என்றுமுள்ள தென் தமிழை இயம்பி இசை கொண்டான் " என்றார் கவிச் சக்கரவர்த்தி கம்பர். " வாழ்க நிரந்தரம், வாழ்க தமிழ்மொழி வாழிய, வாழியவே " என்றார் பாரதியார். அதற்குத் தமிழுக்கெனவுள்ள பேராற்றலும் காரணம் ஆகும்.

தமிழில் ' உயிர் ' எழுத்தின் பயன்பாடு மிகுதி எனக் கண்டோம். சாரியை, எழுத்துப்பேறு, ஒலித்துணை உயிர்கள், பின்னொட்டுகள், இடைநிலை, இறுதிநிலைகள், மெய்ம்மயக்க விதிகள் என்பன யாவும் தமிழ் மொழிக் காவலர்கள் எனலாம். பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்வதிலும் அவை மிகுதியும் பயன்படுகின்றன.

**சாரியைகள்– இணைப்பு உறுப்புகள்**

சாரியைகள், தமிழில் உருபுகள் சேரும்போது வரும் இணைப்பு உறுப்புகளாகப் பயன்படுகின்றன. அவை + கு – அவற்றுக்கு. எவை + ஐ – எவற்றை, பல + ஐ – பலவை ஆகாமல் பலவற்றை என்றாகும். இந்த ' வற்றுச் ' சாரியை, சொல்லுடன் சேரும் உருபை இணைக்கப் பயன்படுகிறதல்லவா ? இரண்டு செங்கல்களுக்கிடையே போடப் படும் செம்மண், சுண்ணாம்பு, சிமிந்தி போல இச் சாரியைகள் சொற்களையும்

உருபுகளையும் இணைத்து ஒற்றுமைப்படுத்துகின்றன. மரம் + ஐ + மரமை ஆகாமல் மரத்தை ஆனால்தான் இயல்பாக இருக்கிறது. அத்துச் சாரியை அங்கே தேவைப்படுகிறது. மாடு + தாவணி – மாட்டுத்தாவணி, நாடு + பழம் =நாட்டுப்பழம், தாறு + கோல் = தாற்றுக்கோல் என இரட்டிக்கும் போதும் இந்த இணைப்பு முயற்சியைக் காணலாம். 'ரோடு' (Road) என்ற ஆங்கிலச் சொல்லை ஆளும் போதும் 'ரோட்டுக்குப் பக்கத்தில்'என்றோ, 'ரோட்டிலேயே போ' என்றோதான் கூற மரபு வழிவகுக்கிறது.

### உருபேற்கும் போது தமிழாகும் வடிவங்கள்

பிறமொழிச் சொல் ஒன்றைத் தமிழில் கலந்து பேசும் போது, உருபு, சாரியைகளைச் சேர்த்தாலன்றித் தொடர்களாக்க முடிவதில்லை. அப்போது அப் பிறமொழிச் சொற்கள், தமிழ் விதிகளுக்கு உட்பட்டுத் தமிழின் கட்டமைப்பை இயல்பாகப் பெறுகின்றன. 'கிளாஸ்'(class) என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழிற் கலக்கும்போது 'கிளாசுக்குப் போ', 'கிளாசுக்குள் கிடந்தது', 'கிளாசிலேயே ஃபர்ஸ்டு' என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. உருபு சேரும்போது 'கிளாஸ்', 'கிளாசு' ஆகிவிடுவதைக் கவனியுங்கள். இன்றேல் தமிழ் மரபு ஒட்டாது.

பாக்கெட், ராக்கெட்டைப் பன்மையாக்க 'கள்' விகுதி சேர்க்கும் போது, அவை பாக்கெட்டுகள், ராக்கெட்டுகள் என இறுதி உகரம் பெற்றே இணைகின்றன. 'ஷோவுக்குப் போனேன்' என்கிறார் ஒருவர். ஷோ + கு போனவர் ஷோ + வு + க்குப் போனதேன் ? இடையே உகரச் சாரியை தேவைப்படுகிறது.

### ஜய் - ஜயம், பாரத் - பாரதம்

ஜய் என்றால் போதும், இந்தியில். தமிழில் அது ஜயமாகும். சயசய என்பது தமிழாக்க வடிவம். 'சயசய போற்றி' என்பதே தமிழ் போற்றி. 'பாரத்' என்பது இந்தி வடிவம். பாரதம் தமிழ் வடிவம். ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவை இன்று 'பாரத வங்கி' என்றே அழைக்கின்றமை காண்க.

உலகப் பேச்சில் 'நம் வீடு' என்பதை, 'இது நம்ம வீடு' என்பர். இது நம்ம கடை என்பர்.

இங்கே அகரப்பேறு உருபன்று. எளிமை நோக்கிய ஒலித்துணையேயாம். என் கண்ணு, என் உயிரு, என்று மெல்லினம், இடையினம் வருமிடத்திலும் 'உகரப் பேறு' காணலாம். தமிழில்

வல்லெழுத்து ஆறும் ( க ச ட த ப ற ) மொழிக்கு இறுதியில் வருவதே இல்லை. அங்கெல்லாம் உகரம் வந்துவிடும். சில ஆங்கிலச் சொற்கள் வல்லெழுத்திலேயே முடிவன. அவற்றையும் தமிழ் நாவினால் உச்சரிக்கும் போது ' போட்டு ' (Boat), கரெக்டு (Correct), பாசு ( Pass) ரைசு (Rice) என உகரப் பேற்றுடன் வந்துவிடுவதையும் சிந்தித்துப் பாருங்கள்.

## இறுதி ஒட்டு முழு வடிவாக்குகிறது

சில சொற்கள் பிறமொழியில் வழங்கும்போது முதனிலையோடு மட்டும் காணப்படும். தமிழில் அவை இறுதி ஒட்டுப் பெற்று முழு வடிவம் பெறும். ரஸ – ரசம், இரசம். அலங்கார் – அலங்காரம், அவுசித்ய – அவுசித்தியம். வாமன – வாமணன். நள – நளன். தொலைக்காட்சி மகாபாரதத்தில் அண்மையில் அடிக்கடி வந்த 'பீம்' யார் தெரியுமா ? தமிழில் நாம் படித்த 'பீமன்' தான், அப்பாத்திரம். ராம் – ராமன், இராமன் என ஆகும் தமிழில் 'சுத்'– இந்தி. சுத்தம் – தமிழ். நான் சொல்வது உங்களுக்குச் சுத்தமாக விளங்குகிறதா ? இந்தச் சொற்கள் சில தமிழாக்கம் பெறுவது மட்டுமன்று. தமிழில் தொடர்புடைய அல்லது பிறிதொரு பொருளிலும் வழங்கத் தலைப்பட்டு, அவை தமிழாகவே மாறிவிடுகின்றன எனலாம்.

தமிழில் ஐகார ஈறுபோல ஆகார ஈறும் உண்டு. எனினும் பல வடசொற்கள் 'ஐ' கார விகுதியால் தமிழாக்கம் பெறுகின்றன. சீதா – சீதை. ஆராதனா – ஆராதனை. அர்ச்சனா – அருச்சனை. காசி விஸ்வநாத் தமிழில் காசி விசுவநாதர் ஆவதைக் கவனித்தால் தமிழாக்க மரபுகள் புலனாகும்.

## மெய்யெழுத்துக்களின் கூட்டமைப்பு

தமிழில் மெய்யெழுத்துக்கள் ஒன்றுடன் ஒன்று 'கூட்டு' உடையனவும் ஒன்றுடன் ஒன்று ஒன்றாதனவும் ஒன்றியும் ஒன்றாமலும் வருவனவும் என மூவகைச் சேர்க்கை இருக்கிறது.

'க், ச், த், ப் நான்கும் வந்தால் பக்கத்தில் அதே எழுத்துத்தான் வரும். இது சத்தியம். என்ன திகைக்கிறீர்கள் ? 'சத்ய' எனத் தமிழில் வராமல், சத்தியம் என வரும். புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள திருமெய்யத்தில் இறைவன் பெயர் மெய்யர், அல்லது மெய்யப்பர். அவர் சத்தியமூர்த்தி என்று அழைக்கப்படுகிறார். எப்பெயரையும் வடமொழியாக்குவது வைதிகரின் பணி, பாக்யா, தமிழாக்கத்தில் பாக்கியம் ஆகும்.

பக்கம், காக்கை. பச்சை, தச்சன், பித்தம், மத்து, காப்பு, பொறுப்பு எனச் சொல்லிப் பாருங்கள். தமிழ்ச் சொற்களில் க், ச், த், ப் என்ற நான்கில் எது வந்தாலும் அடுத்து அதே எழுத்துத்தான் இடம் பெறும். ஆனால் ர், ழ் என்ற இரண்டு மெய்களும் வந்தால் பக்கத்தில் வேறு எழுத்துத்தான் இடம் பெறும். ஆர்வம், வாழ்வு, என்பன காண்க. "குதிரைக்கு குர்ரம் என்றால் ஆனைக்கு அர்ரம்" எனலாமா ? என்பது தெலுங்குச் சொல் பற்றிய பழமொழி. தமிழில் ரகர ஒற்றுக்குப் பின் அதே ரகர வரிசை இடம் பெறாது. குர்ரம் என்று தமிழில் வராது.

ஏனைய பனிரண்டு மெய்களும் தம்முடன் தாமும் தம்முடன் பிற மெய்களுமாக மயங்கும்.

**அறிவியல் தமிழில் உறழ்ந்து வரும் மரபு**

இன்று உலகளாவிய கலைச் சொற்களை அவ்வாறே தமிழில் எடுத்தாள நேரும் போது, இவ்விதிகள் தளர்த்தப்பட வேண்டியவையாகின்றன. அறிவியல் தமிழ் வளர வேண்டுமென்றால், அறிவியல் கலைச் சொற்களை, அப்படியே ஏற்று, அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புச் சொற்களையும் போட நேரிடலாம். மேற்கோள் குறி, சாய்வெழுத்து என எழுதி அது தமிழன்று எனக் காட்டலாம்.

முன்னைய மரபுகள் இதனால் உடையும் என அஞ்ச வேண்டியதில்லை. ‘ உறழ்ந்து வரும் மரபு – இரண்டு விதமாகவும் வரும் மரபு – தொன்று தொட்டுளது, பிறமொழிக் கலைச் சொற்களுக்கு மட்டும் இவ்வாறு அமைப்பது குற்றமாகாது.

*தமிழ்மணி 8-9-1990*

✧ ✧ ✧

# 7. செந்தமிழும் திசை வழக்குகளும்

## ஞாயிறும் விண்மீன்களும்

ஒளிப்பிழம்பாகத் திகழும் சூரியனும் ஒரு விண்மீன்தான். ஆயினும் ஏனைய விண்மீன்கள் இரவில் மட்டும் கண் சிமிட்டுகின்றன. பகலில் எழுஞாயிறு ஒன்றே ஏனையவற்றின் ஒளிகளையும் தான் வாங்கிக்கொண்டு ஒப்பற்ற சுடராய் ஒளிவீசித் திகழ்கிறது. தமிழுக்கும் இந்த இயல்பு உண்டு. செந்தமிழ் என்பது சூரியனைப் போலவும் ஏனைய துணை வழக்குகள் யாவும் பிற விண்மீன்களைப் போலவும் நிலவிவந்தன. இருளிலே மட்டும் கண் இமைக்கும் நட்சத்திரங்கள் போலத் துணை வழக்குகள் ஆங்காங்கு, அவ்வப் போது நிலவிவந்தனவாயினும் செந்தமிழுடன் அவை ஒன்று கலந்து, சோதியில் கலந்த சுடர் போலாயின.

அதனால் தான் ஒரு தமிழ்ப் புலவர் " ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி, ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்– ஆங்கவற்றுள் மின்னோர் தனி ஆழி வெங்கதிர் ஒன்று ஏனையது, தன் நேரிலாத தமிழ் " என்று ஞாயிற்றுடன் தமிழை உவமித்தார். ஆனால் இன்றைய நிலை என்ன ? விண்மீன்கள் ஞாயிற்றை விழுங்கப் பார்க்கின்றன.

இது நடக்குமா ? நடந்தால் அடுக்குமா ? என்பது தான் கேள்வி.

## 'செந்தமிழ்'

இன்று கட்டளைமொழி ( Standard Language) என்பதுபோல ஒரு பொது மொழி – எல்லோர்க்கும் எளிதில் இயல்பாக விளங்கும் மொழி தமிழகத்தில் தலைமை பெற்றுத் திகழ்கிறது. அதுவே உலகப் பேச்சு வழக்கிற்கும் இலக்கிய எழுத்து வழக்கிற்கும் பொதுவாக வழங்கியது. அன்று தமிழகம் செந்தமிழ் நிலம் என்றும், தமிழகத்தைச் சார்ந்த பல்வேறு

பகுதிகள் தமிழின் திசை வழக்குகளின் இருப்பிடம் என்றும் கருதப்பட்டன. அவையே இன்று மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலாய மொழிகள் வழங்கும் நாடுகளாகிவிட்டன. செந்தமிழ் நிலம் சார்ந்த இவை பனிரண்டு என வகைப்படுத்தப் பட்டதுண்டு. 'தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி– பன்றி, அருவா,அதன் வடக்கு – நன்றாய சீத, மலாடு, புனல்நாடு, செந்தமிழ் சேர் – ஏதமில் பன்னிருநாட்டெண்'. 1) தென்பாண்டிநாடு 2) குட்டநாடு 3) குட நாடு 4) கற்காநாடு 5) வேணாடு 6) பூழி நாடு 7) பன்றி நாடு 8)அருவா நாடு 9) அருவா வடதலை நாடு 10) சீதநாடு 11) மலை நாடு 12)புனல் நாடு. இப்பனிரண்டும் முதற்கண் திசை வழக்குகளாகவே இருந்தன. அதாவது தமிழின் வட்டார வழக்குகளாகவே இருந்தன. தொல்காப்பியர் இவற்றைக் 'கொடுந்தமிழ்நாடு' என்று குறிக்கவில்லை. முதல் உரையாசிரியராகிய **இளம்பூரணர்** இதை விளக்கும் போது, 'திசைச்சொல் என்பது செந்தமிழ் நாட்டை அடையும் புடையும் கிடந்த திசை நாட்டார் வழங்கும் சொல் என்றே குறிப்பிடுகிறார். அடையும் புடையும் கிடந்த என்றால் சுற்றிக் கிடந்த, பக்கத்தே இருந்த நாடுகள் என்பதே பொருளாகும். இப்பெயர்களில் சிறிது மாற்றமுண்டு. பின்னர்ப் போந்த இடைக்கால உரையாசிரியர்கள் இவற்றைக் 'கொடுந்தமிழ்நாடு' என்று குறிக்கலாயினர். அதற்குக் காரணம் அங்கே வழங்கிய தமிழ் மேலும் மேலும் திரிபுற்றமையாக இருக்கலாம்.

காலப் போக்கில் செந்தமிழ் நிலம் என்பது பாண்டிய நாடு மட்டுமே எனக் கருதப்படலாயிற்று. இதற்கும் சங்கமிருந்து தமிழ் வளர்த்த மாமதுரையும் அதனைச் சூழ்ந்த பகுதிகளும் தமிழ் மரபைக் கட்டிக் காத்திருக்க, ஏனைய பகுதிகள் காலப்போக்கில் சிறுகச் சிறுக பழைய வழக்குகளினின்றும் இறங்கிச் சென்றது காரணமாகலாம்.

## இலக்கியத்தில் எடுத்தாளப்படும் சொற்கள்

தொல்காப்பியரின் கருத்தே பின்னரும் பின்பற்றப்பட்டது, ஆதலால் அவர் கருத்தையே அடிப்படையாகக் கொண்டு காண்போம். "இயற்சொல் என்பது செந்தமிழ் நிலத்து வழங்குவது. எல்லோர்க்கும் தன் பொருளைத் தப்பாமல் இயல்பாகத் தருவது". இன்று நம் எல்லோர்க்கும் விளங்கும் பொதுத்தமிழ் என்கிறோமே, அதுவும் இதுதான். கட்டளை மொழி என ஆங்கில மரபிற்கு ஏற்பவும் சொல்லலாம். இச் செந்தமிழே பெரும்பான்மையாக, மதிப்பிற்குரியதாக இலக்கியத்தில்

தலைமையாக எடுத்தாளப்படுவதாக, வழக்கில் இயல்பாகவே யாண்டும் காணப்படுவதாக இலங்கியது. இச்சொற்களை எங்கு சொன்னாலும் ஒரே மாதிரியாகப் பொருள் விளங்கும்.

செந்தமிழ் என்றவுடன் சிலர் நினைப்பதுபோல் கடுந்தமிழ், பண்டிதர் தமிழ், பொருள் எளிதில் விளங்காத தமிழ் என்ற நினைப்புப் போய் ஒழிய வேண்டும். இன்று இப்பொதுத் தமிழாம் செந்தமிழை வளர்ப்பதற்கு – காப்பதற்கு – நிலை பெறுத்துவதற்குப் பல வழிகள் உள்ளன.

கல்வி நிலையங்கள், தகவல் தொடர்புச் சாதனங்கள், திரைப்படம், சொற்பொழிவு மேடைகள், இலக்கியம், நுண்கலைகள் (நாடகம், இசை) என இவை யாவும் பொதுத் தமிழைக் காப்பாற்ற நமக்குக் கிடைத்துள்ள அரிய கருவிகள் ஆகும். இவற்றுள் பல நம் முன்னோர் கனவிலும் எண்ணிப் பாராதன. இவ்வளவு அரிய கருவிகள் இருந்தும் நாம் ஏன் திகைக்கின்றோம் ? இவற்றுள் பல பொதுத் தமிழினின்றும் விலகிப் போவதுண்மையே. அவற்றைக் கனிவாகவும் கடிந்தும் திருத்துதல் எளிதென்றே தோன்றுகிறது.

செந்தமிழ்ச் சொல்லை ' இயற்சொல் ' என்றார் தொல்காப்பியர். சொல் மட்டுமா, தொடரும் இலக்கணமும் நிறைந்ததுதான் செந்தமிழ் என்றாலும் சொல் தொகுதியே அடிப்படையாதலின் இயற்சொல் எனச் சொல் மேல் வைத்துக் கூறப்பட்டது. இயற்சொற்களின் தொகுதியே செந்தமிழ் என்பது இலக்கண நூலார் கருத்தாகும்.

*இயற்சொல் தாமே*
*செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்*
*தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே'* (881)

என்பது தொல்காப்பியம்.

'செந்தமிழாகித் திரியாது யார்க்கும் தம்பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல் ' என்பது நன்னூல். இன்றும் நம் இலக்கியங்கள் பல இப் பொதுத் தமிழ் மரபைப் பேணி வருமிடங்கள் பலவுள. குறையை எண்ணும்போது நாம் நிறையையும் எண்ணிப் பார்க்க வேண்டும் அல்லவா?

'வழுவாமல் இசைத்த ' என்னும்போது கொச்சை வடிவங்களையும் குறை வடிவங்களையும் தவிர்த்தலையும் இலக்கணப் பிழையின்றி ஆளுதலையும் குறிப்பாகச் சொல்கிறது தொல்காப்பியம்.

இவையெல்லாம் இலக்கணம் கற்றுவிட்டுத்தான் வருகின்றன என்பதில்லை. பலர் கூடி மரபுகளைப் பேணப் பேண இவை தாமே அமைகின்றன. அந்த நிலையை அடைய வேண்டுமென்றால் தமிழறிஞர்கள் என்போர் தம் வானளாவிய கற்பனை மேடையை விட்டுக் கீழே இறங்கி வர வேண்டும். அங்கே வெள்ளம் பெருக்கெடுத்துக் கொண்டிருக்கிறது. நானும் சிலரும் மண்கூடையை எடுத்துக் கொண்டு வருகிறோம் என்றால் போதாது.

## தகவல் தொடர்பு நிறுவனங்களும் செந்தமிழும்

தகவல் தொடர்புக்குப் பயன்படும் மின்னியக்கக் கருவிகள் பலவாகும். ஏடுகள், வார மாத இதழ்கள் உட்பட யாவும் எவ்வாறு பொதுத் தமிழை ஆளவேண்டுமென சில கையேடுகள், நெறிமுறை வழிகாட்டிகள் உருவாக்கப்பட வேண்டும். இப்போது அவை தாம் தாம் நினைத்தவாறு தமிழை வளர்க்கின்றன. அவற்றிற்குச் செய்திகளைத் தருவதும் வாசகர்களை மகிழ்விப்பதுமே குறிக்கோளாதலின் மொழியைப் பற்றி அலட்சியப்படுத்துகின்றன. ஆங்கில மொழியில் இப் புறக்கணிப்பை எங்கும் காணவியலாது. தமிழகத்தில் தமிழர்களால் நடத்தப்படுவனவேயாயினும் ஆங்கில நாளிதழ்களில் ஆங்கிலத்திற்குத் தரப்படும் முக்கியத்துவத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். ஆங்கிலேயர்களுக்கில்லாத மொழி அக்கறை நமக்கென்ன வந்தது என யாரும் நினைப்பதில்லை. தமிழிலும் அத்தகைய நினைவோட்டம் வருவதற்கான சூழ்நிலை வந்து கொண்டிருக்கிறது.

வெண்ணெய் திரளும் போது தாழியை உடைத்துவிடாதீர்கள் ! களைகளைத் தேடிக் களைவது நல்லது. ஆனாலும் பயிரும் ஊடே பயிராகிக் கொண்டுதான் இருக்கிறது. அதனால் பயிர்களைத் தேடிப் போற்றிப்பேணத் தொடங்குவோம்.

தமிழறிஞர்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்குத்தான் பொறுப்பு அதிகம். இலக்கணத்தை இலக்கணம் என்று சொல்லாமலே நடைமுறையிலேயே கற்பார் மனத்தில் புகுத்த, படிநிலைகளுக்கு ஏற்பப் புதிய முறை இலக்கணம் வகுக்க வேண்டும். புதிய தமிழ் எவ்வளவோ

வளர்ந்துவிட்டது. அவற்றையும் தேடிக் கண்டு கொள்ள வேண்டும். புதிய தமிழுக்கு இலக்கணம் வகுத்தால், அது சுவையாக இருக்கும் – இருக்கவேண்டும். புதிய தமிழ் மரபுகளை எல்லாம் ஆழமாக அறியமாட்டாதவர்கள், மேற்போக்கான கொச்சை வழக்குகளிலேயே கிடந்து உழல்வர். அதனையும் தவிர்த்துப் புத்தம் புதிய நடைமுறைத் தமிழிலக்கணம் வகுப்பது கடினமான பணிதான். பலர் கூடித் தேரிழுப்பது போன்றது அது.

இயற்சொல் எனப்படும் செந்தமிழ் தவிர திரிசொல் (புலவர் வழக்கு) திசைச்சொல் (வட்டார வழக்கு) வட சொல் (பிறமொழிச் சொற்கள் தமிழ் ஒலி வடிவப்படுத்தியவை) ஆகியவை இலக்கியப் படைப்பில் வரலாம். பழைய இலக்கியங்களின் நிலை யாது? புதிய இலக்கியங்களின் போக்கு யாது ? பழகு தமிழுக்கும் படிப்புத் தமிழுக்கும் பாலம் அமைக்கவே முடியாதா , "ரொம்ப ரொம்பச் சிந்திக்க வேண்டும்" அதாவது நிரம்பச் சிந்திக்க வேண்டும்.

*தமிழ்மணி 9-2-1991*

✧ ✧ ✧

# 8. ‘செப்பு மொழி பதினெட்டுடையாள் - எனில் சிந்தனை ஒன்றுடையாள்’

இந்தியத் தாய்போலத் தமிழ்த் தாயும் செப்பும் மொழி – பேச்சு மொழி பதினெட்டும் அதற்கு மேலும் உடையவள்தான். ஆனாலும் அவள் சிந்தனை ஒன்றுடையாள். அதற்குக் காரணம் அத்தமிழ்த் தாய் அன்றும் இன்றும் ஏதோ ஒரு வகையில் பொது மொழி ஒன்றைப் பேணி வருவதுதான்.

அந்தப் பொதுமொழி என்பதுதான் என்ன ? அது எவ்வாறு உருவாகிறது அல்லது நிலவுகிறது ? முன்பு தொல்காப்பியர் காலத்தில் ‘செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்’,‘ செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி’ என்றெல்லாம் கூறப்பட்டு, தலைமை வாய்ந்த வட்டார வழக்காக இருந்து, கட்டளை மொழியாய் – பொது மொழியாய் விளங்கியது. அன்று செந்தமிழ் நிலம் சேர் பன்னிரு நிலம் எனப்பட்ட பன்னிரண்டு வட்டாரங்களில் திசை வழக்குகள் இருந்தன. இவற்றின் உட்பிரிவுகளும் பலவாகும்.. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை எனப்பட்ட ஐந்து நிலப்பகுதிகளிலும் வெவ்வேறு வட்டாரத் தமிழ்கள், இனம் தெரியுமளவு பிரிந்து வழங்கி வந்துள்ளன. என்றாலும், செந்தமிழ் என ஒன்று பேணப்பட்டதால் இடைக்காலம் வரை தமிழின் பொதுமை காப்பாற்றப்பட்டு, இளமை போற்றப்பட்டு வந்தது. இன்று கல்விக்கூடம், பாடநூல், பொதுத் தகவல் தொடர்புச் சாதனங்கள் போன்றவை பல ‘எழுத்து மொழி’க்கு அல்லது பொதுமைக்கு அரண் சேர்க்கின்றன.

தினமணி ‘பதற்றம்’, ‘பதற்றநிலை’ என்ற சொற்களையே ஆளக் காணலாம். பதட்டம் என்றால் பொருளில்லை. பதறுவதுதான் பதற்றமானது. பதட்ட என்ற திரிபு வழக்கும் பேச்சில் காணப்படுகிறதென்று, பொதுத் தமிழில் – எழுத்து வடிவத் தமிழில் அதை ஆளாமல், பொருளுணர்ச்சிக்கு ஏற்ற இத்தகைய திருந்திய சொல்

ஆட்சிகளைப் பின்பற்றுவதைத்தான் 'பொதுத் தமிழ்' என்கிறோம். இதையே பேண வேண்டும். இதனை அனைவரும் ஏற்பது நல்லது. மிகக் கடினமான தமிழுக்குப் போவதாகவோ, முழுவதும் கொச்சை வடிவத்திற்கு இறங்குவதாகவோ கருதுபவர் கருதட்டும். ஆங்கிலச் சொற் கலப்பை எடுத்துக் கொள்ளுங்கள். கூடுமானவரை எழுத்துவழக்கில் தமிழ்ச் சொற்களை ஆள்வது நல்லது. அங்கு நிதானமாக, ஆர அமர எழுத வாய்ப்பிருக்கிறது.

தனித் தமிழியக்கம் போல, இன்று 'பொதுத் தமிழியக்கம்' ஒன்று தொடங்கவேண்டும். கடைப் பெயர்ப் பலகைகளில் நல்ல தமிழில் – விளங்கும்படியான தமிழில் எழுதிவைக்க வேண்டும் என்ற இயக்கம் உள்படப் பல்வேறு இயக்கங்கள் தேவைப்படுகின்றன.

**பல திரிபுகள் ஓர் அடிப்படை**

பேச்சில் பல்வேறு திரிபுகள் இருந்தாலும் அவற்றுக்கெல்லாம் அடிப்படையாய் எழுத்தில் ஒரே ஒரு வடிவமே இருப்பதால், நம் சிந்தனை அதனையே எண்ணுகிறது. மு. வ. தம் இலக்கிய வரலாற்றில் சில திரிபுகளைச் சுட்டிக் காட்டுகிறார். இருக்கு, கீது, என்பன இருக்கிறது என்பதன் திரிபுகள். எத்தனை எத்தனையோ வட்டாரத் திரிபுகள் – தனி மனிதத் திரிபுகள். வருகிறார்கள், போகிறார்கள், விளையாடுகிறார்கள் என்ற பொதுத் தமிழாகிய அடிப்படை இருக்கும் வரை, இத் திரிபுகளெல்லாம் அதைச் சுற்றியே வருமன்றி விலகிவிடாது. சூரியனைச் சுற்றிச் சுற்றி வரும் கோள்கள் எல்லாம் சூரிய ஒளியில் மறைந்து நின்றே வெளிப்படுமன்றி, அவை ஞாயிற்றது பேரொளியை மறைப்பதில்லை.

**பாரதியார் சொல்லும் பாடம்**

பாரதியார் நாட்டுப்புறப் பா வடிவங்களைப் பயன்படுத்தும் போது, பேச்சு வடிவங்களை அளவாக, சந்தத்திற்குரிய இடங்களில் மட்டும் ஆள்வார். அவருடைய மணக்குளத்து விநாயகர் நான்மணிமாலையையும் கும்மி, ஆனந்தக்களிப்பு, சிந்துப் பாடல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் எங்கே எந்த அளவு பேச்சுத் தமிழுக்கு இடம் தர வேண்டும். எங்கே எழுத்துத் தமிழை முற்றிலும் போற்ற வேண்டும் என்ற தெளிவான சிந்தனை அவருக்கு இருந்ததை ஒப்புவர். பேராசிரியர் ரங்கநாயகி தம் இலக்கியத் தமிழும் பேச்சுத் தமிழும் பற்றிய நூலில், இன்று நாம் பேச்சுத் தமிழைப் பயன்படுத்துமிடங்கள், எழுத்துத் தமிழைப்

பயன்படுத்துமிடங்கள் இவை இவை என ஒரு சிறு பட்டியல் தருகிறார். அது இன்னும் விரிவாகச் சிந்தித்து, ஆராயத் தக்கதாகக் காணப்படுகிறது.

''நாட்லே, வூட்லே, பேச்லே யார் யாரோ பாட்றான், ஆட்றான், ஊர்லெ, அங்கெ, இங்கென்னு அலைறான்.நாயி பேயிங்கிறான். எலையைப் போட்டுத் திங்கறான். ஒரல்லே தலையெக் குடுக்கிறான். '' தயவு செய்து இந்தத் தமிழினை முடிந்தவரை பொதுத் தமிழை விட்டு விலகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

அவன் மொழி சிறந்த கருத்துப் பரிமாற்றக் கருவியாக இருந்தால், அவன் உலகில் சிறந்த கல்வியாளனாக வர முடியும். ஆகவே, தமிழனைக் காப்பாற்றுங்கள், என்பதே நம் வேண்டுகோளாகும். மு. வ. ''லீவ்'' ஸ்டாம்பு ரயில் ஸ்டேஷன் டெலிபோன் முதலான ஆங்கிலச் சொற்கள் பேச்சு வழக்கில் இருந்த போதிலும் எழுதும் போது விடுமுறை தபால்தலை புகை வண்டி நிலையம் தொலைபேசி முதலான தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்துவோரும் உண்டு'' என்று தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடுவார்.

**வேற்றுமையும் ஒற்றுமையும்**

நாம் பேசும்போது முயற்சிச் சுருக்கம், சோம்பல், விரைவு காரணமாகச் சொற்களைச் சிதைத்தும் கொச்சையாகவும் குறைகளுடனும் பேசிவிடுகிறோம். இவை முற்றிலும் திருத்தப்பட வேண்டியன. இவற்றை ஆராய்ச்சிக்கு ஒரு களமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும். இயல்பாக மொழியில் ஏற்படும் மாற்றங்களை, காலப்போக்கிலேற்படும் விளைவுகளை முற்கூறியதிலிருந்து பிரித்தறிவது கடினம்தான். என்றாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியன, சிறிது சிறிதாக மொழியில் ஏறிப் படியும். அவற்றைப் பிரித்தறிய வேண்டும். பேச்சுக்கும் எழுத்துக்கும் உள்ள வேற்றுமை பெரிதும் ஒலி பற்றியது. ஒலியன்கள் பற்றியது. புணர்ச்சித் திரிபுகள் பற்றியது. இவற்றைத் திருத்த வேண்டியன, ஏற்க வேண்டியன எனப் பிரித்தறிய வேண்டும். இது ஒருவகையில் மொழியினுள் நடைபெறும் போராட்டம்தான் !

சொற்களஞ்சியம், சொற்பொருளியல், தொடரியல்கள் என்று பார்த்தால் பேச்சுத் தமிழில்தான் செல்வம் குவிந்து கிடக்கிறது. அதாவது

எழுத்துத் தமிழில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அளவு கவனம், இவ் உலக வழக்கில் செலுத்தப்படவில்லை. எழுத்து வழக்குக்கு வழிகாட்டியாகவும் வளமிக்கதாகவும் நயங்கள் பலவற்றை நல்குவதாகவும் பேச்சு வழக்கு விளங்குகிறது.

**இருவகை வழக்காறுகள்**

கால்வெல்டு ஐயர், "தமிழ் மொழியில் உலக வழக்கும் செய்யுள் வழக்கும் என்றும் ஒன்றாக இருந்ததில்லை. மிக முற்பட்ட காலத்திலிருந்தே செந்தமிழ் கொடுந்தமிழிலிருந்து இன்றுபோல் வேறுபட்டே வழங்கி வந்திருக்கிறது" என்று தமது திராவிட மொழி ஒப்பிலக்கணத்தில் குறிப்பிடுகிறார். வீரமாமுனிவர் வெளிநாட்டவர் பயில்வதற்கு எனச் "செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம்" ஆகிய இரண்டினையும் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணத் தமிழறிஞர் அ. சண்முகதாசு, 'தமிழ்மொழி இலக்கண இயல்புகள்' என்ற தம் நூலில் தமிழ் இலக்கணக்காரர் எழுத்து வடிவுக்கே முக்கியத்துவம் கொடுத்தனர் என்றும் எழுதப்பட்ட இலக்கிய மொழியின் திறனை அறிவதிலேயே தொல்காப்பியர் முதலிய இலக்கணிகள் நாட்டம் செலுத்தினர் என்றும் குறிப்பிடுகின்றார். பனம்பாரனார் தொல்காப்பியம் வழக்கும் செய்யுளும் (இலக்கியமும்) ஆகிய இரண்டையும் அடிப்படையாக வைத்தே எழுதப்பட்டது என – வழக்குக்கு முதலிடம் தந்து கூறியுள்ளார். 'செய்யுளுள் உரித்தே' என்று பிரித்துச்சுட்டும் தொல்காப்பிய இடங்கள் பலவாகும். (237, 258). அதுபோல, உலக வழக்கைப் பிரித்துப் பேசுமிடங்களும் உண்டு. 'போக்கின்று என்ப வழக்கினுள்ளே' (505). 'நெறிபட வழங்கிய வழிமருங்கு என்ப' (பிழைபாடில்லாத உலக வழக்கு) (588), 'வழக்கினாகிய உயர்சொற்கிளவி' (510) 'மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே' (172) (உலக வழக்கில் திரிபுற்று வழங்குவன) – இவ்வாறு வருவன பலவுள. எஞ்சியவற்றில் பெரும்பான்மையை பொதுவழக்குப் பற்றியன என நம்பலாம். இன்று போல் அன்று பேச்சுக்கும் எழுத்துக்கும் இடைவெளி அதிகமாக இருந்திராது என எண்ண இடமுள்ளது.

புறனடைச் சூத்திரம் ஒன்றில் (946) தொல்காப்பியர் செய்யுள் மருங்கு, வழங்கியல் மருங்கு என்று, மொழியின் இரு மருங்குகளைக் குறிப்பிடுகிறார். மேலும் அவர் தாம் கூறியவற்றினின்றும் ஏதாவது வேறுபடத் தோன்றினால், 'வழங்கியல் மருங்கு' வழியே பார்த்து, அதன்படி செய்க என்று உலக வழக்குக்கு முதலிடம் தருகிறார்.

'கிளந்த அல்ல
செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கில்
மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின்
வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின்
உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத்து
என்மனார் புலவர்'. (483)

உலக வழக்கின் வழிப்படுவதுதான் நல்ல அறிவுடைமையோடு கூடிய ஆராய்ச்சியாகும் என்று கூறும் தொல்காப்பியரை ஐயப்படலாமா? அவர் குறிப்பிடும் செய்யுள் மருங்கு, வழங்கியல் மருங்கு என்ற சொல்லாட்சிகள் உணர்த்தும் உண்மை என்ன? இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்ற இருமையே தவிர, இரட்டைகளல்ல என்பதை மனத்தில் நன்கு பதிய வைத்துக்கொள்ள வேண்டும். இரட்டை என்றால், தனித்தனியாய் நின்று ஒன்று சேர்வன என்றாகிவிடும்.

### போராட்டமே உயிர் வாழ்க்கை

பரிணாமவாத – அடிப்படையில் உயிரினங்களிடையேயும், வாழ்வு நீட்டிப்புக்கான போராட்டமே காணப்படுகிறது. மொழியிலும் பேச்சு வழக்குக்கும் எழுத்து வழக்குக்கும் ஒரு போராட்டமே நிகழ்ந்த வண்ணமிருக்கிறது. இது உலக மொழிகள் அனைத்திலும் காணப்படுவதேயாம். ஆங்கிலந்தானும் உலகளாவிய நிலையில் எத்துணையோ ஒலிப்பு வேறுபாடுகளும் பிற வேறுபாடுகளும் உடையதாகவே காணப்படுகிறது. அங்கும் எழுத்து வழக்குத்தான், பெரிதும் அதன் பொதுமையைக் காப்பாற்றுகிறது. இருமை வழக்குடைய தொல்காப்பியர் சொல்வதுபோல் இரு மருங்குடைய செருமன், சீனம், தமிழ் போன்ற மொழிகளில் இப் போட்டி பல நிலைகளில் காணப்படுகிறது. எனினும் ஒன்றின் வளர்ச்சிதான் மற்றொன்று என்பதையும் இரண்டும் கொண்டும் கொடுத்தும் வாழும் விதங்கள் பலவென்பதையும், ஒன்றின் சாயல் மற்றதில் காணப்படும் என்பதையும் இவை 'ஊடியும் கூடியும்' வாழ்வன என்பதையும் இவற்றிடையே ஒன்றை ஒன்று ஈர்க்கும்

‘ஈர்ப்பாற்றல்’ காணப்படுதலையும் இவை ‘அகலாது அணுகாது தீக்காய்வார் போல ’ உடனுறையும் திறமுடையன என்பதையும் ஆராய வேண்டும்.

‘ரங்கநாயகி குறிப்பிடுவது போல, ''இவ்விரு வழக்குகளும் இவ்வாறு இணைந்து செயல்படுகின்றன என்பதும் அதே சமயத்தில் இரண்டும் ஒன்றையொன்று, ஒவ்வொரு சூழ்நிலையிலும் தத்தம் தகுதியை நிறுவப் பார்த்து, வெற்றி கொள்ள முயலும் போட்டி நிலையிலேயே இருப்பதும் தெரியவரும்'' என்பதே உண்மையாகும். மேலும், பேரா. கு. பரமசிவம் கருதுகிறபடி ''பேச்சு வழக்குகளையும் எழுத்து வழக்கையும் ஒப்பிடும் போதுதான் மாறுகின்றவை எவை, மாறாத அடிப்படைகள் எவை என்பதை அறிந்துகொள்ள முடியும் ''.

இவ்விரு வழக்குகளின் சீர்மை நீர்மைகளை மேலும் மேலும் ஆராய இன்று மொழியியல் ஒளிவிளக்கு வழிகாட்டுகிறது. எங்ஙனம் நோக்கினாலும் திசைவழக்குகள் என்ற விண்மீன்களிடையே, எழுத்து வழக்கு என்ற பொதுமொழி ஞாயிறாக இலங்குகிறது என்பதை மறந்துவிடுதல் கூடாது.

*தமிழ்மணி 22.6.1991*

✧ ✧ ✧

# 9. ‘ தாழையாம் பூமுடித்து, தடம் பார்த்து நடை நடந்து’

‘தாழையாம் பூ முடித்து, தடம் பார்த்து நடை நடந்து – வாழை இலை போல வந்த பொன்னம்மா என் வாசலுக்கு வாங்கி வந்தது என்னம்மா !’ எங்கோ கேட்ட திரை இசைப் பாடல். நாட்டுப்புற இசையும் கிராமிய மணமும் மனத்தை ஈர்க்கின்றன. கவியரசர் கண்ணதாசன் மனைவி பெயர் பொன்னம்மா. இவ்வாறு சொந்த மன உணர்வுகளைக் கூடத் திரைப் பாடல்களில் இழையோட விடுவதில் அவர் வல்லவர்.

கண்மாய் மேடுகளில் கிராமப்புறக் காடுகளில் தடம் பார்த்துத்தான் நடக்க வேண்டும். அந்த ஒற்றை அடிப் பாதைகள் வளைந்தும் நெளிந்தும் ஏறியும் இறங்கியும் போகும். போகப் போகத்தான் வழி தெரியும். திசை தெரியாமல் போய்விட வாய்ப்புண்டு. ஒரு மொழிநடையும் அப்படிப்பட்டதுதான். முன்னோர் போன வழி பார்த்துத்தான் போக வேண்டும். சரியோ, தவறோ முன்னோர் வகுத்த அடிப்படையை வைத்துத்தான் புதுமையையும் படைக்க முடியும். நடந்து நடந்து உருவாகும் வழித் தடத்தைத்தான் ‘ மரபு’ என்று இலக்கணிகள் கூறுவார்கள்.

## ஆங்கிலம் காட்டும் வழி

இன்று உலகை ஆளும் ஆங்கில மொழியின் 14 – ஆம் நூற்றாண்டு நிலை என்ன ? ஆங்கில மக்கள் பிரெஞ்சு மொழி மோகத்தில் மூழ்கிக் கிடந்த நேரம் அது. இலக்கியமா, நீதிமன்றமா – எங்கும் பிரெஞ்சு மொழி ஆதிக்கம். கற்றவர்கள், மேட்டுக்குடியினர் பிரெஞ்சில் பேசுவதை அம் மொழியைக் கற்பதைப் பெருமையாக நாகரிகமாகக் கருதினர். கி. பி. 1362இல் இங்கிலாந்தில் ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டு அதன் மூலம் ஆங்கிலம் நீதிமன்ற மொழியானது.

அன்று பிரெஞ்சு ஆங்கில மொழி பெயர்ப்பாளர்களாக விளங்கியவர்கள், பிரெஞ்சு மொழியிலிருந்த அன்றைய கதை இலக்கியமனைத்தையும் ஆங்கில ஆக்கம் செய்து, மக்கள் ஆங்கில வழி அவற்றைப் படிக்கத் தூண்டுகோலாயினர். இவ்வாறு ஆங்கில மக்களில் ஆர்வமுடையவர் தம் தீவிரப்பணிகளும் ஒரே ஒரு சட்டமும் திருப்புமுனையை ஏற்படுத்தின.

ஆனால் பிரெஞ்சு மொழி ஆதிக்கம் நீங்கியதே அல்லாமல் ஆங்கிலம் மிகத் தாழ்ந்த நிலையில் பாமரர் மொழியாகப் பிரிந்து கிடந்தது. வடதிசை வழக்கு, தென்திசை வழக்கு, நடுவண் வழக்கு என அடிப்படை வேறுபாடுகளுடனும் அவை ஒவ்வொன்றும் பல்வேறு உள்வகைகளுடனும் பிரிந்து கிடந்ததால், தேசிய அளவிலான பொதுமொழி என ஒன்று இல்லாதிருந்தது. இச் சூழ்நிலையில் நடுப்பகுதியின் கிழக்கில் வழங்கிய வட்டார மொழி, தலைமையையும் பொதுமைகளையும் நோக்கி உயர்ந்தது. காரணம் தலைநகரமும் கல்வி மையங்களமைந்த ஆக்சுபோர்டு. கேம்பிரிட்சு நகரங்களும் சார்ந்த வட்டாரமாதலால், அவ் வட்டாரக் கிளை வழக்கு மேலோங்கியதில் வியப்பில்லை. சாசரும் இவ் வட்டார மொழியில் எழுதத் தொடங்கியதால் அது நிலைபேறுடையதாயிற்று. அதனால் ஒரு சிறு வட்டார அளவிலான திசை வழக்கே, தேசிய அளவில் நாடு தழுவிய பொது மொழியாகியது. (W.H. Hudson, An outline history of English literature p.15)

இத்தகைய வளர்ச்சி ஏற்படாமல் ஒவ்வொரு திசை வழக்கும் சிறந்ததென்று தனித்தனியே மேலோங்கியிருந்தால் ஆங்கிலம் சிதறுண்டு போயிருக்கும். பிரெஞ்சின் இடத்தை அது பிடித்திருக்க முடியாது என்பதோடு இன்று உலகளாவிய நிலைக்கு உயர்ந்திருக்கவும் முடியாது.

### தமிழ் மொழியில் அமைந்த தடம்

ஆங்கிலம் பின்பற்றிய இதே தடத்தைத்தான் கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தில் தமிழும் வகுத்ததாகத் தெரிகிறது.

இலக்கியப் படைப்பில் எந்த எந்தச் சொற்களை எடுத்தாளலாம் ? தொல்காப்பியர் மொழியின் அமைப்பை முற்றிலும் விளங்கிக் கொண்டு சொன்னார், நான்கு வகைச் சொற்களை எடுத்தாளலாம் என்று. அவை

இயற்சொல், திசைச் சொல், திரிசொல், வடசொல் என்ற நான்குமாகும். இவற்றுள் 'இயற்சொல்' என்பதுதான் பொதுமொழி, கட்டளைமொழி, எல்லோர்க்கும் விளங்கும் தேசிய அளவிலான நாடு தழுவிய மொழி. திசைச்சொல் வட்டார வழக்கு, அவ்வப் பகுதி மக்களுக்கு மட்டும் விளங்குவது. அவ்வத் திசை பற்றிய வழக்காற்றை அறிந்தவர்க்கே தெளிவாகவும் மற்றவர்க்குத் தத்தம் குறிப்பினாலும் விளங்கக்கூடியது. தொல்காப்பியர் காலத்தில் வடசொல் ஒன்றுதான் பிறமொழிச் சொல். இன்று அதனைப் பிறசொல் எனக் குறிக்கலாம். ஒரு சொல்லை ஆளும் முறையால் வேறு பொருளைக் குறிக்கவும் ஒரு பொருளைக் குறிக்கப் பிறிதொரு சொல்லைப் பயன்படுத்தியும் இவ்வாறு படைப்பாளிகள் ஆளும் முறையால் சொற்பொருள் வேறுபாடுறுவனவே திரிசொற்களாகும். தொல்காப்பியர் 'வட்டார வழக்கா ? அது பாமரர் மொழி ஆயிற்றே ? அதை இலக்கியத்தில் ஆளாதே' என்று தடைவிதிக்கவில்லை. வடசொல்லையும், தமிழ் வடிவப்படுத்தி எடுத்தாளச் சொல்கிறார்.

'இயற்சொல்' என்று அவர் கூறியது, கட்டளை மொழிதான் (Standard Language). ஆனால் அதை அவர் பின்வந்தவர்கள் கூறியதுபோலச் 'செந்தமிழ்' என்று நேரே குறிப்பிடவில்லை. செந்தமிழ் நிலத்தில் வழங்கியதும் ஒரு திசை வழக்கு. ஏனைய பன்னிரு நிலங்களிலும் வழங்கியதும் திசை வழக்குகளே. ஆனால் பாண்டிய நாட்டில் நூல்கள் பல அரங்கேற்றப்பட்டமையாலும் மக்கள் ஏனைய திசைகளிலிருந்து தமிழகத்தின் நடுவணதாகிய அங்கு வந்து போயினமையாலும், சங்கமிருந்து தமிழாராய்ந்ததாலும், தொல்காப்பியமே நிலந்தருதிருவின் பாண்டியன் அவையத்தில் அரங்கேற்றப்பட்டதென்ற குறிப்பினாலும் அப் பகுதி வட்டார வழக்குத் தலைமை பெற்று எல்லோர்க்கும் எளிதில் விளங்கும் இயற்சொல் ஆகியதில் வியப்பில்லை. அதனால் தொல்காப்பியர் 'செந்தமிழ்' என்று சுட்டாமல் 'செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணியது' என்று வரலாற்று உணர்வோடு குறிப்பிட்டார்.

அதாவது பதினான்காம் நூற்றாண்டில் ஆங்கிலம் ஒரு தலைமை வழக்கைச் சார்ந்து, நிலைபெற்றதுபோல, தமிழ் பழங்காலத்தில் செந்தமிழ் வழங்கிய பாண்டிய நாட்டு வழக்கொடு சார்ந்து பொதுத் தமிழாய் வளர்ந்து நிலை பெற்றது. இன்றேல் தமிழ் பல கிளை மொழிகளாகிப் போயிருக்கும்.

## பொதுத் தமிழே இன்று கட்டளை மொழி

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வழங்கியதே ' இயற்சொல் ' என்ற நிலை காலப்போக்கில் மாறி, எழுத்துத் தமிழே பொது மொழி அல்லது கட்டளை மொழியாகவும் பேசுந்தமிழ் வட்டார வேறுபாடுடையதாகியும் வளர்ந்தது. பேச்சுத் தமிழ் அனைத்தையும் இணைக்கும் சக்தியாகப் பொதுத் தமிழ் விளங்கியது. ' இன்றைய தமிழ் ' இலக்கிய வழக்கும் பேச்சு வழக்கும் என்பது பற்றி ஆராய்ந்த, கல்கத்தாப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் ரங்கநாயகி மகா பாத்திரா இவ்வாறு குறிப்பிடுகிறார். " ஆனால் இவை எல்லாவற்றிற்கும் (திசை வழக்குகள்) பொதுவாக எந்த ஒரு தனிப் பிரிவினர்க்கும் அதிக நெருக்கம் காட்டுவதாக அல்லாமல், அனைத்துப் பேச்சுமொழியாளரையும் இணைக்கும் பொதுப்பாலமாக இந்தத் தமிழ் மொழியில் அமைந்திருப்பது இலக்கிய மொழி அல்லது எழுத்து வழக்கு. தமிழ் கூறும் மக்கள் உலகில் எப்பகுதியிலிருந்தாலும் அவர்கள் தடையின்றிப் புரிந்துகொள்ளக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள உதவும் இந்தப் பொதுமொழி சாதி, சமயம், நிலம், தொழில் ஆகிய எல்லா வேற்றுமைகளாலும் உண்டாகும் தனித் தன்மைகளையெல்லாம் ஊடறுத்துச் சென்று ஒரு தனிப்பட்ட இலக்கண அமைப்போடு விளங்குகின்றது. இந்த நிலை உலகில் தமிழில் மட்டுமன்றி இன்னும் பல மொழிகளிலும் உண்டு " (பக்.14)

ஆனால் இக்கால மேலை நாட்டு மொழியியலாரில் சிலர் பேச்சு வழக்கே ஆராயப்பட வேண்டும் என்று வலியுறுத்தியதுண்டு. பேச்சு மொழி உயிருள்ள, சிறப்புடைய ஒன்று என்ற பேரார்வத்தால் எழுந்த கருத்து இது. சிறந்த மொழியியலறிஞர்கள் பலர் இன்று நடுநிலையோடு சிந்திக்கத் தலைப்பட்டுவிட்டனர். மொழியியல் வல்லுநர் கு. பரமசிவம் கூறுவதைக் கேளுங்கள். " ஆனால் பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் கொண்ட ஒரு சிறு மொழியின் அமைப்பைப் பேச்சு வழக்கை மட்டும் வைத்து ஆராய்ந்தறிய முடியாது. மொழியென்பது ஒலிகளாகிய குறியீடுகளைக் கொண்ட அமைப்பு என்று மேலே கூறினோம். அவ்வொலிகள் பேசவும்படலாம். எழுதவும்படலாம். எனவே மொழியாகிய அமைப்பைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் இரண்டு வழக்குகளையுமே ஆராய வேண்டும். நம் இலக்கண நூலார் இவ்வுண்மையை உணர்ந்திருந்ததனாலேயே உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இரண்டையும் குறிப்பிடுகின்றனர் ( இக்காலத் தமிழ்

மரபு – பக்.5–6). "எழுத்து மொழி பேச்சு மொழி ஆகிய இரண்டிலும் பேச்சுமொழியே முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கூறுவர் நவீன மொழியியலார். எனினும் எழுத்து மொழிக்கும் சில நற்பண்புகள் உண்டென்பதையும் நாம் மறந்துவிடலாகாது" என்பர் அ. சண்முகதாசு (தமிழ்மொழி இலக்கண இயல்புகள்–பக்.26)

இவ்வாறு நம் முன்னோர் அமைத்த தடம் தமிழை இன்றளவும் கன்னித் தமிழாகக் காப்பாற்றி வந்திருக்கிறது. அந்தத் தடம் பார்த்து, நடைநடப்பதில் நமக்கென்ன தடையோ ? எண்ணிப் பாருங்கள்.

*தமிழ்மணி 8.6.1991*

✧ ✧ ✧

# 10. செல்வம் குவிந்து கிடக்கிறது இங்கே ! சேமித்துக் காப்பவர் எங்கே !

பயிர் விளைந்து கதிர்மணிகள் முற்றிக் கிடக்கின்றன. அறுவடை செய்து தானியக் கிடங்கில் சேமித்து வைக்க ஆளைக் காணோம். செல்வம் எதிரே குவிந்து கிடக்கிறது. பார்த்து மிதித்துக் கொண்டே போகிறார்கள். சேமித்துக் காத்துச் செல்வராகும் வழி தெரியவில்லை ! தனி மனித வாழ்விலும் சோம்பேறித்தனத்தால் இதுபோல் நடைபெறுகிறது. தமிழைப் பற்றியும் 'எங்கள் செல்வம், எங்கள் வாழ்வு, எங்கள் உயிர்' என்பவர்கள் இது போல்தான் நடந்து கொள்கிறார்கள்.

தொல்காப்பியர் 'இயற்சொல்' என்று செந்தமிழை – பொதுத் தமிழை – கட்டளைத் தமிழைக் குறிப்பிட்டார். அதனோடு 'அடையும் புடையும் கிடந்த 'நிலத்தில் வழங்கிய சொற்களைத் திசைச் சொல் என்றார். எல்லோருக்கும் விளங்கும் சொல்லை 'இயற்சொல் என்ற அவர், அவ்வவ் வட்டாரத்தார் எவ்விதம் வழங்குகின்றனர் என்ற 'குறிப்பி 'னால் மட்டுமே விளங்கக் கூடியதைத் 'திசைச் சொல்' என்றார்.

காய், கனி என்றால் எல்லோர்க்கும் விளங்குகிறதல்லவா? தொல்காப்பியர் கருத்துப்படி செந்தமிழ் நிலத்தார் வழங்கும் வழக்கத்தோடு பொருந்திய சொற்களாய், அவை தம் பொருளைத் தவறாமல் எல்லோர்க்கும் ஒரே மாதிரியாய் விளங்க வைக்குமானால் 'இயற்சொல்' எனப்பட்டன. நன்னூல் 'திரியாது எல்லோர்க்கும் தம் பொருளை விளக்குவன' என இதையே சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும்.

திசைச் சொல் என்பது செந்தமிழ் நிலத்திற்குப் பக்கத்தே கிடந்த – தென்பாண்டி, குட்டம், குடநாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு முதலிய பன்னிரு வட்டாரங்களில் வழங்கிய வட்டார வழக்குச் சொல்லாகும். **இளம்பூரணர்** 'செந்தமிழ் நாட்டின் அடையும் புடையும்

(பக்கத்தில்) கிடந்த பன்னிரு நிலம்' என்றும் 'அவ்வப் பகுதியினர் அச் சொற்களை எப்பொருளில் எவ்வாறு வழங்கினாரோ அதுவே அவற்றிற்கு இலக்கணம்' என்றும் மிகத் தெளிவுபட விளக்குகிறார். மேலும் அச் சொற்கள் 'ஒரு வாய்பாட்ட அல்ல. வேறு வேறு வாய்பாட்ட' என்பார். மேலும் அவர் திசைச் சொற்களை 'எல்லா நாட்டாரும் பட்டாங்குணரார்' என்றார். அதாவது பொருள் புலனாகாதாம். அவர் காலத்தே 'நாடு', 'வளநாடு' என்பன வட்டாரப் பகுதிகளைக் குறிக்கும். ஒரே சொல் கூட வட்டாரத்திற்கு ஏற்பப் பல மாதிரியாய், பல பொருளில் வழங்குவது போன்ற இலக்கணம் இது. பவணந்தி முனிவர் சிங்களம், சாவகம் முதலிய தமிழ் தவிர்த்த பதினெட்டுப் பிறமொழி நாடுகளிலும் வழங்கும் தமிழ்ச்சொல் வகைகளையும் 'திசைச்சொல்லு'க்குள் கொண்டு வருகிறார்.

இன்று 'கிளைமொழி' வழக்குப் பற்றி, மொழியியலறிஞர் ஆராய்கின்றனர். அதற்குத் தொல்காப்பியரும் உரையாசிரியர்களும் நல்ல தோற்றுவாய் செய்துள்ளனர். மேலைநாட்டாரின் கிளைமொழி ஆராய்ச்சி, பல துறையினதாய்ப் பல்கிப் பெருக வாய்ப்புள்ளது. பிழை வழக்கு, இழி வழக்கு, கொச்சை வழக்கு, குறை வழக்குகளையும் வட்டார வழக்கினுள் ஆய்வது சிலர் தம் வழக்கமாக இருக்கலாம். அவற்றைத் தனித் துறைப் படுத்தி நாம் ஆராய வேண்டும்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலாக நம் திசை வழக்குகள் பல்கிப் பெருகியுள்ளன. சாதி அல்லது சமூகம், வட்டாரம் அல்லது இடம் அடிப்படையில் நூற்றுக்கணக்கில் வட்டார மொழிகள் உள்ளன. "கிரேக்க நாட்டில் எழுபது கிளை மொழிகள் இருந்தனவாம். முந்நூறு கிளைமொழிகளையுடைய மொழியும் உண்டு என்பர் " எனப் பேரா. சூ. இன்னாசி குறிப்பிடுகிறார். தமிழில் இங்ஙனம் வகை தொகைப்படுத்த வல்லவர் யாரும் பிறந்திலர். தமிழறிஞரில் பலர் தாமறிந்த ஒரு சிலவற்றை ஸ்வத்தே, வாழ்நாள் முழுவதும் வியாபாரம் செய்வதில் வல்லவராய்க் காணப்படுதலை எடுத்துச் சொல்லுதல் இழிவன்று. இனி மேலேனும் தன் முயற்சிக்கு வித்திடுவதாகும்.

நம் உரையாசிரியர்கள் சில வட்டார வழக்குகளைக் காட்டியுள்ளனர். நன்னூல் உரையாசிரியர்கள்வரை அவற்றையே திரும்பத் திரும்பக் காட்டி வருகின்றனர். நாயைப் பூழி நாட்டார் 'ஞமலி' என்பர். குடநாட்டார் தாயைத் 'தள்ளை' என்பர். தென்பாண்டி நாட்டார் பசுவைப் பெற்றம் என்றும் சோற்றைச் சொன்றி என்றும் கூறுவர்.

இங்ஙனம் ஒரு சில காட்டப்பட்டதோடு, அவ் வளர்ச்சி நின்று போயிருக்கிறது.

**திருவல்லிக்கேணியும் பெரியகுளமும்**

'அல்லிக் கேணி 'எவ்வாறு வரும் ? ' அல்லிக் குளத்தருகே' என்று அதே 'கேணியை'த்தான் பாரதியார் பாடியுள்ளார். 'கேணி' என்பது குளத்தையும் குறித்த வட்டார வழக்கு. அருவாநாட்டார் சிறு குளத்தைக் 'கேணி' என்பர் என்று உரையாசிரியர்கள் உதாரணம் காட்டியுள்ளனர். கேணி 'ஏற்றக்கேணி' எனப் பெரிய கிணற்றைக் குறிப்பதைப் பிற வட்டாரங்களில் காணலாம். பெரிய குளத்தில், கடல்போல் பரந்த 'ஏரி' அமைந்துள்ளது. பெரிய 'குளம்' என்ற சொல், ஏரியைச் சுட்டுவது வட்டாரத் தன்மையாகும்.

**இலக்கியத்தில் வட்டாரச் சொற்கள்**

வட்டார வழக்குச் சொற்களும் இலக்கியத்தில் கையாளத் தக்கன. அதனால் தான் தொல்காப்பியர் அதனையும் சேர்த்து 'செய்யுள் ஈட்டச் சொல்' இலக்கியத்திற்குரிய சொற்களஞ்சியம் என்றார். குடநாட்டார் தந்தையை ' அச்சன் ' என்றனர். அச்சன், அத்தன், என்று தந்தையையும் தலைவனையும் குறிப்பது இலக்கிய வழக்கு. தோழனை 'எலுவ' என அழைப்பது சீத நாட்டார் வழக்காம். நெல்லைப் பகுதியில் 'எலே ' என்பது இதன் திரிபாகும். அருவா நாட்டார் 'செ 'யை (வயலை) 'செறு' என்றும், கருநாடகத்தார் 'கூப்பிடுவதை'க் 'கரைய' என்றும் , வடுகர் 'சொல்'என ஏவுவதைச் 'செப்பு' என்றும், துளு நாட்டார் மாமரத்தைக் 'கொக்கு' என்றும் குறிப்பிடுவரென்பதும் பழைய உரைகளில் கண்ட செய்தியாகும். இச் சொற்கள் எல்லாம் பொதுத் தமிழை நோக்கி, வளர்ச்சி கண்டு காலப்போக்கில் நிலைபெற்றமையை, நாம் இலக்கியங்களில் கண்டு அறிகிறோம்.

**தொண்டும் தடுமனும்**

ஈரோட்டில் யான் தங்கியிருந்த போது, ஒரு நாள் மகளிர் இருவர் தம்முள் தெருவில் சண்டையிட்டுக் கொண்டிருந்ததை, வீட்டிலிருந்தபடி காணநேர்ந்தது. "நீதாண்டி தொண்டு செய்யிறவ", "நீதாண்டி தொண்டு செய்யிறவ" என்று ஒருவரை ஒருவர் பழிப்பதைப் பார்த்து, என் நண்பர் புலவர் சேதுராமனிடம் "ஏன் இது ? தொண்டு செய்வது நல்லதுதானே"

என்று வினவினேன். பிறகுதான் தெரியவந்தது, அவ்வட்டாரத்தில் 'தொண்டு செய்தல்' என்பது 'விபசாரம்' என்ற பொருளிலும் வழங்குகிறதென்பது. எனக்குத் ''தடுமன்'' பிடித்திருப்பதாக யான் சொன்ன போது, அப்பகுதி மக்கள் வியப்போடு பார்த்தனர்.

என் முகத்தைப் பார்த்து, 'ஓ சளிப் பிடித்திருக்கிறதா?'' என்று இரக்கப்பட்டனர். புலவர் அருணாசலம் வீட்டுக்கு, ஈரோட்டில் முதன்முதல் விருந்தருந்தப் போனது 1948இல் என்றாலும், ஒன்று மட்டும் மறக்கவே இல்லை. வீட்டுக்குள் நுழையப் போகுமுன், செருப்பைக் காட்டி, ''இங்கேயே விட்டுட்டு வாங்க'' என்றார் அவர். திரும்பும் போது, ''அதோ கிடக்கு, தொட்டுட்டு வாங்க'' என்றார். ஒரு கணம் திகைத்தேன். செருப்பைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுப் புறப்பட வேண்டுமா, என்ன ? ' தொட்டுட்டு ' வருக என்றால், போட்டுக் கொண்டு புறப்படுக என்பதே பொருளெனப் பிறகு உணர்ந்தேன். சங்க இலக்கியத்தில் 'தொடு தோல்' என்று நம் நடையனைக் குறிப்பது கண்டுள்ளேன். காலில் தொட்டுக் கொள்வது – போட்டுக் கொள்வது ஆதலால் 'தொடு தோல்' என்பது எவ்வளவு பொருத்தம் ! நடையன் என்பது செருப்பைச் சுட்டும் நகரத்தார் சமூக வழக்குச் சொல். விடுதல், தொடுதல் என்ற சொல்லாட்சிகள் இலக்கியத் தரத்திலும், மிகுதரம் உடையனவாய்க் காணப்படுகின்றன அல்லவா? பேச்சு மொழிச் செல்வத்தைக் குறைத்து மதிப்பிடுதல் கூடாது.

பிராமண சமூகத்திலும் நூற்றுக்கணக்கில் தரம் மிகுந்த தமிழ் வட்டார வழக்குகள் உள்ளன. ஏனைய சமூகங்களிலும் இத்தகைய 'சமூகச் சாயல்' காட்டும் நூற்றுக்கணக்கான வழக்குச் சொற்கள் காணப்படுகின்றன. குறிப்பாக பார்ப்பனர் ஒருவர் 'ஆத்துக்குப் போறேன்' என்னும் போது 'அகம்' என்ற சொல்லால் வீட்டைக் குறிக்கிறார். 'அகம்' எனக் காதல், குடும்பம் பற்றிய திணையே உளதாகலின், அச் சொல்லையும் அது போன்ற நூற்றுக்கணக்கான தனித் தமிழ்ச் சொற்களையும் அன்றாட நடைமுறை வாழ்வில் வழங்குபவர்கள் தமிழுடன் உறவிலார் போல நடப்பதும் வியப்பே.

மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, குடகு, கொங்கணி மொழிகளில் வழங்கும் தமிழ்ச் சொற்கள் பல ஆயிரமாகும். அவற்றையும் தனித் தனியே அகராதிகளாகத் தொகுக்க வேண்டும். மலையாளத் தமிழ்ச் சொல் அகராதி, தெலுங்குத் தமிழ்ச் சொல் அகராதி என இவை வெளிவரின், மேலாய்வுக்குப் பெருந்துணையாகும். வட்டார வழக்குச்

சொற்களுக்குள்ளேயே 'மரபுத் தொடர், நடைத் தொடர்' பற்றிய ( Idioms and Phrases ) அகராதி, தனிப் பேரகராதியாக உருவாக இடமுள்ளது. இவை தமிழ்ச் சொற்களஞ்சியத்தை மிகுவிப்பதோடு, சமூக ஆய்வு, இலக்கண ஆய்வு, இலக்கிய ஆய்வுகட்குப் பெரிதும் பயன்படுவனவாய் அமையும்.

தமிழ்ப் பேரகராதி எனப்படும் 'லெக்சிகனில்' இவையெல்லாம் முழுமை பெற இடம்பெறவில்லை. அந் நோக்கத்தில் அது தொகுக்கப்படவுமில்லை. அது முதல் முயற்சி என்பது மட்டுமன்றி, பெரிய முயற்சி. அத்தொகுதிகள் வெளியிடப் பெற்ற **1935** – க்குப் பிறகு எவ்வளவு பணிகள் செய்து எத்தனை தொகுதிகள், கொண்டு வந்திருக்க **வேண்டும்? ஒன்றுமே செய்யாமல், 'சாய்வு நாற்காலி ஆராய்ச்சியாளர்கள்' எல்லாம் லெக்சிகனில் இருக்கிறதுதானே என்று கதை பேசுகிறார்கள்! சேர்த்தலும் காத்தலும் பயன்படுத்தலும் செல்வத்திற்கு மட்டுந்தானா? சொற் செல்வத்திற்கும் பொருந்தும் அல்லவா?**

*தமிழ்மணி 23.3.1991*

✧ ✧ ✧

# 11. பேசுவது போலவே எழுதலாமா ?

'நாட்லே சோமாறிக தண்ணியைப் போட்டுட்டு அலையுதுக' என்று பேசுவது போலவே எழுதுவது கூடாது. எழுத்துத் தமிழ் ஒரு வடிவத்திற்குட்பட்டது. பேச்சை முடிந்தவரை முழுமைப்படுத்தியே எழுத்தில் வடிக்க முடியும்.

பேச்சுத் தமிழ் ஒரு போக்கில் சுழலும் ஒரு விசை என்றால், எழுத்துத் தமிழ் பிறிதொரு விசை. எழுத்துத் தமிழ் முன்பின்னாகச் சுழலும் விசை போல, முன்பின் தொடர்ச்சியுடையது. இவ்விரு விசையால் இயங்குவதால் மொழி நிலைபேறுடையதாகிறது. எழுத்துத் தமிழ் வட்டாரக் கிளைமொழிகளின் கூட்டமாகிறது. பொதுமொழியின் மேலோங்கிய ஆட்சியாலேதான், கிளை மொழிகள் தனித் தனியே பிரிந்து போய் விடாமல் இணைந்து நிற்கின்றன.

### தகவல் கருவிகளும் பொது மொழியும்

வானொலி, தொலைக்காட்சி, நாளிதழ், பட்டிமன்றம் உள்ளிட்ட மேடைப் பேச்சு என இன்றைய சாதனங்கள் பலவும் இப் பொதுத் தமிழைப் பரப்புவதில் பெருந் தொண்டு புரிகின்றன. அவை தடம் பிறழ்ந்தால், வேலியே பயிரை மேய்ந்த கதையாகிவிடும். மொழியின் பொதுமையைக் காப்பாற்ற இத்தகைய தொடர்புறுத்தும் கருவி மூலங்களனைத்தையும் கண்ணும் கருத்துமாகப் போற்றவேண்டும்.

### காளிதாசர் காட்டிய வழி

பேசுவது போல எழுத வேண்டுமாம். உலக மொழிகள் பலவும் பேச்சுக்கும் எழுத்துக்கும் வேறுபாடின்றி வழங்குகின்றனவாம். தமிழையும் பேசுவது போலவே எழுதினால் எளிமையாகிவிடும். பேச்சுத்தான் மக்கள் தமிழ். உயிருள்ள தமிழும் அதுவே. எழுதப்படும் ஏட்டுத் தமிழ் பண்டிதத் தமிழ். அதைத் தவிர்க்க வேண்டும். – இவ்வாறு ஒரு கருத்து நிலவுகிறது.

பேச்சுத் தமிழில் சொற்களஞ்சியம் இருக்கிறது. தொடர்க் களஞ்சியம் குவிந்துகிடக்கிறது. பேச்சுநடைதான், வாக்கிய நடையாய் – இலக்கிய நடையாய் உருவெடுக்கிறது. பல சமயங்களில் மொழியின் அமைப்பைப் பேச்சு மொழிதான் நிர்ணயிக்கிறது. அதற்காக... சோம்பலால், அறியாமையால், விரைவால், முயற்சிக் குறைவால் குறைத் தமிழாய்க் கொச்சையாய்ப் பேசி விடுகிறோமே – அதையும் அப்படியே எழுதலாமா?

பேச்சுத் தமிழை இகழக்கூடாது. பேசுவது போலவே எழுதக் கூடாது. நான் சொல்வதில் முரண்பாடு இருப்பது போல் நினைக்கிறீர்களா? இது தீரச் சிந்திக்க வேண்டிய ஒரு செய்தி.

காளிதாசர் சாகுந்தலத்தை வடமொழியில – செம்மொழி நடையிலேயே எழுதியிருப்பினும், மீனவர் உரையாடல்களைப் பேச்சு மொழியாகிய பிராகிருதத்தில் எழுதியுள்ளார். இன்று கதை இலக்கியம் எழுதும் போது, உயிருள்ள பாத்திரங்களை நடப்பியலாகப் படைக்கவேண்டுமென்றால், அப்பாத்திரங்களின் உரையாடல்களைக் காளிதாசர் போலப் பேச்சு மொழியில் தான் எழுத வேண்டும். ஆனால் கதை முழுதும் பேச்சு நடையாகிப் போனால், காலப் போக்கில் அக் கதை பலருக்கு விளங்காததாகிவிடும் அல்லது அம் மொழி பல பிரிவாகி, அவ்வப் பிரிவினர்க்கு மட்டும் விளங்கியும் மற்றவர்க்கு விளங்காமலும் போகும். இளங்கோவடிகளும் கம்பரும் பாரதியும் இன்றும் என்றும் பொதுமொழித் தொடர்பால் ஓரளவேனும் அனைவருக்கும் விளங்குவதுதான் அக் கவிஞர்களின் பேரும் புகழும் படைப்பும் நிலைபெற உதவியாகும். இன்றேல் மொழியின் சிதைவுக்கு வருந்துவதைவிட, இப்படைப்பாளிகளின் பேர் கூட அறிப்படாமல் போகவாய்ப்பிருக்கிறதல்லவா?

ஜெயகாந்தனும், புதுமைப்பித்தனும், கு.ப.ரா.வும், அசோகமித்திரனும், கி. ராஜநாராயணனும் அடுத்த நூற்றாண்டிலும் படிக்கப்பட வேண்டும். அவர்கள் எழுதும் வட்டார வழக்குகட்கு அப்பாற்பட்டவர்களுக்கும் விளங்கவேண்டும் எனறால் மறுப்பவர் உண்டா?

**தமிழுக்காகவா? தமிழருக்காகவா?**

இவை எல்லாம் தமிழ்ப் பற்றுக் காரணமாகச் சொல்லப்படுகின்றன என்பதைவிட, தமிழர்கள் கால, இட, சமூக வேறுபாடுகள் நீங்கி ஒருவருக்கொருவர் என்றென்றும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தாலேயே சொல்லப்படுகின்றன.

நாம் பேச்சு வழக்கில் இன்று கணக்கு வழக்கின்றி ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துகிறோம். இதை ஆங்கில மோகம் எனலாமா? நம்மைச் சுற்றியுள்ள – நாம் பயன்படுத்துகின்ற, புழங்குகிற எல்லாப் பொருள்களுமே அனைத்துக் கருவிகளுமே புதிய நாகரிகத்தால் நம் வீட்டிற்குள் புகுந்தவை – ஆங்கிலப் பெயருடையவை . இந்தச் சூழ்நிலையில் டி. வி. இருக்கிறதா? வாஷிங் மிஷின் வாங்கினாயா? கியாஸ் சிலிண்டர் இருக்கிறதா? ஸ்டவ் என்ன விலை ? – இவ்வாறுதான் விரைந்து பேசுகிறோம். மேலே கண்ட தொடர்களை எழுதும் போது, ஓரளவு நிதானமாகச் சிந்தித்துத் தமிழில் மொழி பெயர்த்தும், சொற்களைத் தமிழ்ப்படுத்தியும் எழுத வாய்ப்பும் நேரமும் இருப்பதால், எழுத்துத் தமிழ் பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாகிறது. எழுதும் போது இவற்றைத் தமிழ்ப் படுத்தியே எழுதப் பழக வேண்டும். இயன்றவரை முயல வேண்டும்.

மொழி என்பது தகவல் தொடர்புச் சாதனம். அதில் 'பொதுமை' பேணுவது, தகவல் தொடர்பில் இடையூறு வந்துவிடாமடல் காப்பாற்றும். இருமை வழக்குடைய மொழிகளில் இப் பொதுமை எழுத்திலேதான் இருக்கிறது. தமிழ் மொழியின் இயல்பறிந்து பழக வேண்டும். 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல் !'

## ஆயிரம் வகைகள் உச்சரிப்பில் - அடிப்படை தெரிந்தால் போதாதா ?

நம் உச்சரிப்பில் எத்தனை வேறுபாடுகள்? இன்பம் என்பதைச் சங்க காலத்தில் Inpam என்று உச்சரித்திருப்பர் என்பது கால்டுவெல் கருத்து. இன்று Inbam என ஒலிக்கிறோம். க, ச, த, ப, முதலியன பெறும் மெய்யொலி மாற்றங்கள் நாம் அறிந்தனவே. கடல் (K), தங்கம் (G), அகம் (H) என வரும் வேறுபாடுகள் எல்லாம் முன்பே அறியப்பட்டனவே. பிற மொழிகளைக் கற்பதால், அந்த நினைவோடும் தமிழை உச்சரிக்கிறோம். Gadgil என்பதைக் 'காட்கில்' என எழுதினாலும் அச்சொல்லின் பிறமொழி ஒலிப்பின் நினைவோடு உச்சரித்தே பழகிவிட்டோம். படியாத தமிழன் அதை 'Katkil' என்பதாகத்தான் உச்சரிப்பான். தேவைப்படும் ஒலிமாற்றங்களுக்குக் குறியீடுகள் உள. எல்லா ஒலிமாற்றங்களையும் எல்லோர்க்கும் கற்றுக் கொடுக்கும் அடிப்படையாக்கினால் மொழிப் படிப்பு உருப்படாது. அவ்வம் மொழிக்கு அதனதன் ஒலி வடிவே சிறந்தது.

**பேசுவதுபோல் எழுதமுடியுமா ?**

எத்தனை ஒலிமாற்றங்கள் இருந்தாலும், உலகில் எந்த மொழியாளரும் அடிப்படை ஒலியன்களுக்கு மட்டுமே வரி வடிவ எழுத்து வரிசை வைத்துள்ளார்கள். இது சிக்கனம். இவ்வளவுதான் முடியும். கற்க எளிது, போதுமானது என்பதாலும் அடிப்படையான ஒன்றை வைத்து எத்தனை மாற்றங்களை வேண்டுமானாலும் உணர்ந்து கொள்ள முடியும் என்பதாலும் அடிப்படைகள் மட்டுமே எழுத்துக்களாகின்றன.

யானைதான் ஆனை ஆனது. முன்பே ஏற்கப்பட்டது. அதை 'ஆனெ' என்றே சிலரும் 'ஆன' என்றே சிலரும் உச்சரித்தாலும் 'யானை' என்றுதான் எழுதவேண்டும். ஆயிற்று – ஆனது – ஆச்சு. இவை காலப்போக்கில் எழுந்த மாற்றங்கள்.

இவற்றில் ஆ (ஆகு) என்பது பகுதி. பேச்சு வழக்குக்கும் எழுத்து வழக்குக்கும் உள்ள கயிறு இழுப்புப் போட்டியில், குழப்பம் வராத அளவுக்கும், விளக்கம் உள்ள அளவுக்குமே திரிபுகள் தாமாக ஏற்கப்பட்டு வருகின்றன. அறியாமை, சோம்பலால் செய்யும் பிழைகளோ, வழுக்களோ ஏற்கப்படுவதில்லை. இதில் கருத்து வேறுபாடு வரும். பொதுவாக மொழியில் இத் திரிபுகளை எளிதில் ஏற்காமல் முன்னைய வடிவத்தையே காப்பாற்ற முயலுதலும், பின்னைய திரிபு வந்து வந்து மோதுதலும் காலப்போக்கில் நிலைபெறுவனதாமே நிலைபெறுதலும் மாறுவனதாமே மாறுதலும் அமையும். அதனால் தான் பவணந்தி முனிவர் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்றார். இப் போராட்டத்தில் கல்வியும் கற்றறிந்தவர்களும் திருந்திய பழைய வடிவத்தின் பக்கம் நிற்றலும் ஒரு பாதுகாப்பேயாகும். மொழி வழக்காற்றில் திரிபை நோக்கியே போகக் கூடியதுதான் – வீட்டில் குப்பை சேர்வது போல, உடம்பில் அழுக்கேறுவது போல. ஏனெனில் கல்லாதவரும் சோம்பல் மிக்கவருமே மிகுதியாக இருக்கும் போது நிலைமை இதுவாகத்தான் இருக்கும். திரிபைத் திருத்தவும் தடுக்கவும் முயல்வதே 'கல்வி'யின் கடமையாகும்.

**எதிர்த்திசையில் முடுக்குவதே இயல்பான மாற்றம் தரும்**

'குரு' அடிச் சொல்லிலிருந்து குருசில் வந்தது. பின்னுள்ள இகரத்தினால் பின்பு அது குரிசில் ஆனது. புறநானூற்றில் குருசில் என்றும் (16, 50, 68 ). குரிசில் என்றும் 14, 146 ) இரண்டு விதமாகவும்

வருவதைப் பார்த்தால், சங்க காலத்திலேயே ஒரு போராட்டம் நடந்தது தெரியவரும். குரிசில் பிறகு ஏற்கப்பட்டது. முன்னது வழக்காறற்றது. இவ்வாறு காலத்தாழ்வு செய்வதில், எளிதில் ஏற்காதிருப்பதில் ஒரு நன்மையுள்ளது. தொடர்ச்சி அறுபடாமல் ஓரளவு காக்கப்படுகிறது.

**எழுத்துத் தமிழ் - பொதுத் தமிழ்**

இங்கே வற்புறுத்தப்படுவது பொதுத் தமிழ் – எல்லோர்க்கும் விளங்கும் இயற்சொல் தமிழ் ! அது தான் இன்று கட்டளை மொழி. இப் பொதுத் தமிழ் பெரிதும் முற்கூறிய செந்தமிழைச் சார்ந்ததாகும். எழுத்துத் தமிழ் என்பது பேச்சுத் தமிழினின்றும் வேறுபட்டு, எழுத்தில் – நூலில், இதழில், நாளேடுகளில், பொதுத் தொடர்புகளில் நிலவுவதாகும். கப்பலோட்டும் மாலுமியின் திசையறி கருவி வடக்கு நோக்கியே இருப்பதுபோல, நம் எழுத்துத் தமிழும் பொதுமை நோக்கியே அமைய வேண்டும்.

*தமிழ்மணி 4.5.1991*

✧ ✧ ✧

# 12. இன்னொரு 'கிரியோல்' மொழி அல்லவா இங்கே உருவாகிக் கொண்டிருக்கிறது !

தமிழர்களே, தமிழர்களே! தாய்மொழிக்கு உயிர்கொடுக்கும் தமிழர்களே! இங்கே இப்பொழுது இன்னொரு 'கிரியோல்மொழி' அல்லவா உருவாகிக் கொண்டிருக்கிறது? நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் ? மொரிசியசில் பழங்குடியினர் தமது மொழியுடன் பிரெஞ்சு மொழியை அளவு கடந்து, கலந்து பேசுவதைக் 'கிரியோல்' என அழைப்பர். இங்கு 'தமிங்கிலம்' எனும் கிரியோல் உருவாகி வருவது பெருங்கேடு.

**தொலைக்காட்சியிலும் எதிரொலி**

சில வாரங்களுக்கு முன் சென்னைத் தொலைக்காட்சியில் 'எதிரொலி' கேட்டீர்களா ? குறிப்பிட்ட நிகழ்ச்சியொன்றில் வரம்பு கடந்து ஆங்கிலம் பயன்படுத்தப்பட்டிருந்ததால், அதனை எல்லோரும் விளங்கிக் கொள்ள முடியவில்லை என்பதை ஒரு நேயர் குறிப்பிட்டு மடல் எழுதியிருந்தார். அதைப் படித்துவிட்டு, 'எல்லோருக்கும் விளங்கும்படியான பொதுமொழியில்தான் நிகழ்ச்சிகள் அனைத்தையும் நடத்த வேண்டுமென்பது எங்கள் எண்ணம். இனி அவ்வாறு நிகழாமல் கவனித்துக் கொள்வோம்' எனத் தொலைக்காட்சியினர் விடை கூறினர்.

தொலைக்காட்சி மட்டுமா? திரைப்படம், வாரமாத இதழ்கள் எல்லாம் இதில் சளைக்கவில்லையே. ஏன் அப்படிப் போகிறது?

**தமிழை விளங்கிக்கொள்ளவே ஆங்கிலம் படித்தாக வேண்டும்.**

இனிமேல் தமிழில் ஒரு நாடகத்தைப் பார்த்து முழுவதும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றால், ஒரு நாவலை நன்றாகத் தடையின்றித் தொடர்ந்து படிக்க வேண்டுமென்றால், ஏன்? அன்றாடம் வீட்டில்

படித்தவர்களின் உரையாடல்களை இன்றைய நடுத்தர வயதுள்ள பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் ஆங்கிலம் நன்கு தெரிந்திருக்க வேண்டும் என்ற நிலை உருவாகி வருகிறது. படிக்காத பாமரனும் ஆங்கிலம் தெரியாமல் தன்பிள்ளை, தமிழகத்தில் எதையும் விளங்கிக் கொள்ள முடியாது என்பதாலேதான், தனது சிறு கிராமத்திலும் நர்சரிப் பள்ளிக்கே தன் பிள்ளையை அனுப்புகிறான். வரவர என்ன நிலைமை ஏற்படப்போகிறது தெரியுமா ? தமிழில் உள்ளவற்றை விளங்கிக் கொள்வதற்கே, நாம் நம் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளிகட்கு அனுப்பியாக வேண்டும் என்ற கட்டாய நிலை வரப்போகிறது.

**இலக்கியத்தில் ஆங்கிலம்**

இன்றைய இலக்கியம் என்பது என்ன? சிலப்பதிகாரமும் கம்பராமாயணமும் மட்டுமே தமிழிலக்கியம் என்று கூறி, அதிலுள்ள சிறந்த பாடலடிகளை மேற்கோள் காட்டிக் கொண்டிருந்தால் போதுமா? இன்று எழுதப்படுவனவற்றுள் நிலைபெறுவன யாவும் இலக்கியங்களாகாமல் மறைந்துவிடும் என மனப்பால் குடிக்கலாமா? தமிழ் நாடகங்களின் தலைப்புகளே இன்று ஆங்கில மயமாகிவிட்டன. கதை இலக்கியங்களில் ஆங்கில உரையாடல்களே மிகுதி. சிறிது கூச்சப்பட்டுத் தமிழ் எழுத்துக்களில் எழுதப்பட்ட காலம் போய், உரோமன் எழுத்துக்களிலேயே பக்கத்திற்குப் பக்கம் ஊடுருவி நிற்கின்றன.

இப் புதிய மணிப்பிரவாளம் எங்கிருந்து வந்தது?

இக்கால இலக்கியப் படைப்பாளிகளைக் குறை சொல்லலாம். ஆனாலும், நடைமுறையை நிதானமாக எண்ணிப் பார்க்க வேண்டாமா? இலக்கியப் படைப்பாளி என்பவன் உண்மையை நடந்தது நடந்தபடி காட்ட வேண்டும் என்று ஆசைப்படுகிறான். நடப்பியல் பாங்குடன் எழுதும் போதுதான் இலக்கியம் உயிருடையதாகிறது. இளங்கோவும், கம்பரும் இந் நடப்பியல் நெறியைத்தான் அழுத்தமாகப் பின்பற்றுகின்றனர். இலக்கியம் சமுதாயத்தை அவ்வாறே படம் பிடிக்கும் கண்ணாடி என்பர். இன்றைய கதை இலக்கியம் இன்று நடைமுறையிலுள்ள சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் போது, அதிலுள்ள மொழிக் குறைபாடுகளும் ஆங்கிலக் கலப்பும் இலக்கியத்தில் ஏறுகின்றன. "சிலர் அருகிய வழக்காயுள்ள ஆங்கிலக் கலப்பை, தம் படைப்பில் பெருகிய வழக்காய்க் காட்டுகின்றனர். எங்கோ மூலையில் நடப்பதை முச்சந்திக்குக்

கொணர்ந்து, விளம்பரம் செய்து விற்கின்றனர்". இவ்வாறெல்லாம் குறைகூறலாமாயினும், அவர்கள் படைக்கும் சமுதாயத்தைத் திருத்தாமல் – அச் சமுதாயத்தைப் பார்த்து படைப்பவர்களை நோவது ஒரு வகையில் தவறுதானே?

மேலும் இருபதாம் நூற்றாண்டு இலக்கணம் வேறு வகையில், புதிய முறையில் எழுதப்பட்டிருக்க வேண்டும். இன்றைய படைப்பாளிகள் தொடக்கப்பள்ளி தொட்டுப் படிக்கிற காலத்திலேயே, அவர்களுக்கு இலக்கணம் வேப்பங்காயாக அல்லாமல் விருப்பமிக்க நடைமுறையாகத் தரப்பட்டிருக்க வேண்டும். இலக்கிய இலக்கணம் கற்று, சிறிதும் பிழையின்றி எழுத வேண்டியவர்களே தப்பும் தவறுமாய் எழுதும் போது, படைப்பாளிகளை நோவதில் பயன் என்ன ?

**அன்றாட வாழ்வில் அலைமோதும் ஆங்கிலம்**

'வண்டி கரெக்ட் டயத்துக்கு வந்துதா?' என்றுதான் வினவுகின்றனர். வேலைக்காரி, 'நல்ல திக்காக் கரைக்கப் போதிய சாணி இல்லையே' என வருத்தப்படுகிறாள்.

தவிர்க்க முடியாத நிலையில் ஆங்கிலம் கலப்பது வேறு. அறிவியலில், புதிய புதிய கருவிகளில், பொருள்களில் நாம் செயற்படும் போது கட்டாயமாக ஆங்கிலத்தைக் கலந்தாக வேண்டியுள்ளது . டி. வி. இருக்கிறதா?' , 'சாட்டலிட் மூலம் தொடர்புறுத்தப்படுகிறது'.

ஆனால் கவுரவத்திற்காக படித்தவர் என்பது பிறர்க்குத் தெரியவேண்டுமென்பதற்காக, பலரறிய ஆங்கிலம் கலந்தே பேசுவதென்பது ஓர் அடிப்பட்ட வழக்கமாகிவிட்டது. "நான் பே பண்ண பர்ஸ் எடுத்து போகல்லே. அவதான் டீ பார்ட்டிக்கு ஹோட்டல்லே பே பண்ணினா" என்பது ஒரு தமிழ் லேடியின் கான்வர்சேஷன். நாகரிகம், மரியாதை, உயர்வு எல்லாம் ஆங்கிலச் சொற்களில் தான் அப்படி அப்படியே மிளிர்கின்றன. 'காபி' கொண்டு வா என்றாலே ஒரு மாதிரிதான். 'காஃபி' என உச்சரிப்பதிலே ஒரு பெருமிதம். தமிழன் எவனும் இப்போது உணவு சாப்பிடுவதில்லையே. ஹோட்டலில் உட்கார்ந்ததும் 'வாட்டர்தான் கேட்கிறான். மீல்ஸ்தான் சாப்பிடுகிறான் – ரைஸ் தான் போடச் சொல்கிறான் – வெஜிடபிள்ஸ் வைக்கும்படி கேட்கிறான்'. பிறகு ... சப்ளையரிடம் பில்லை வாங்கிக் கொண்டு கவுண்டருக்குப் போகிறான். சத்தியமாகச் சொல்கிறேன், தமிழரில்

நூற்றுக்குத் தொண்ணூறு பேர் நிலை இதுதான். அவர்கள் உப்புப் போட்டுச் சோறு தின்றதெல்லாம் போய் நீண்ட காலமாகிவிட்டது. ஓர் ஆபீசில் போய் காரியம் சக்செஸ் ஆக வேண்டுமேல், இங்கிலீஷ் கலந்தாக வேண்டும். சிலர் So, So என்றும் But, But என்றும் இடைவெளியை அடிக்கடி நிரப்பிக் கொண்டே பேசுவதைக் கேட்கச் சிரிப்பாய் இருக்கும். கடைசியாகப் பார்க்கப் போனால், சில வேற்றுமையுருபுகளும் வினைச் சொற்களும் தான் தமிழாக இருக்கும். 'திக் வொயிட்டாக கலர் பெயிண்டை அடித்து பில்டிங்கை ஜோர்ப்படுத்தி விட்டார்கள்'.

நாம் காணும் பெயர்ப்பலகை முதல் முக்கியமான அறிவிப்பு, விளம்பரம் எல்லாம் ஆங்கிலத்திலிருப்பதால், அம்மொழியை அறிவதும் முடிந்தவரை கலந்து புழங்குவதும் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு இன்றியமையாதனவாகின்றன. எனவே, படைப்பாளிகளைக் குறைகூறுமுன், அடி முதல் முடி வரை இப்படி ஆங்கிலமாக மாறிவரும் சமுதாய மாற்றத்தைத்தான் எண்ணிப் பார்க்க வேண்டும். நமது பள்ளிகளே நம் தாய் மொழியை மறக்கடிக்கும் அழிவுக் கூடங்களாக உள்ளன.

### அரைகுறை ஆங்கிலக் கல்வியால் வருவதே ஆபத்து

நிறைந்த ஆங்கிலப் புலமையுடையவர்கள் ஆங்கிலத்தை ஆங்கிலமாகவும் தமிழைத் தமிழாகவும் பேசுகிறார்கள்.

அரைகுறையாக அமையும் போதுதான் ஆடம்பரமும் போலிக் கவுரவமும் தேட வேண்டியவர்களாகின்றனர். இன்று நாடெங்கும் வீதிக்கு வீதி பல்கிப் பெருகி வரும் ஆங்கில நர்சரிப் பள்ளிகளில், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில போக பிற பள்ளிகள் யாவும் அரைகுறை ஆங்கிலம் தெரிந்தவர்களை மட்டுமே வைத்து, போலியாக வியாபார நோக்கில் நடத்தப்படுகின்றன. இதனால், தமிழ்க் குழந்தைகள் ஆங்கிலத்திலும் முழுப் புலமை பெறமாட்டாமல், தமிழிலும் இரண்டு சொல் பிழையின்றி எழுதத் தெரியாமல் தடுமாறும் நிலையே வளர்ந்து வருகிறது. தமிழ் மொழியில் ஆங்கிலத்தைக் கலக்கும் இன்றைய நிலை எவ்வளவோ தாவிலையென்று எண்ணும்படியான நிலை, அடுத்த பரம்பரையில் வரப்போகிறது. அப்போதைய படைப்பிலக்கியம் எப்படி இருக்குமென்று நினைக்கவே அச்சமாயிருக்கிறது.

உங்கள் பேரப்பையனே, "ஐயா நான் பர்ஸ்ட், அப்பா செகண்ட், நீங்க தர்ட், அம்மா ஃபோர்த்" என்று எண்ணுகிறான். உங்கள் மகன், "உருப்படியான தமிழ்வழிப் பள்ளி ஒன்றை இம் மாமதுரையில் – சங்கம் வளர்த்த மதுரையில் காட்டுங்கள். அப்படியொரு மழலையர் பள்ளி இருந்தால் உங்கள் பேரனை அங்கே அனுப்புகிறேன்" என்று கூறுகிறான். தமிழ்ப்பற்றுக்காக உயிரைக் கொடுக்கும் மக்களிடையே பிறந்த நீங்கள் 'திருதிரு'வென்று விழிக்கிறீர்கள். அதாவது 'திருதிரு'வென்று தமிழில் விழிக்கிறீர்கள். அது போதாதா!

**இன்னொரு கிரியோல் மொழி உருவாகிறது !**

தமிழ்வழிக் கல்வியைத் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை இப்பொழுதே சீர்ப்படுத்தாவிட்டால், இங்கு ஆங்கிலம் சரிக்குச் சரி கலந்த ஒரு கிரியோல் மொழி உருவாகிவிடும். மேற்கு ஆப்பிரிக்கா, மொரீசியசு, ரியூனியன் பகுதிகளிலெல்லாம் ஆங்கிலம், பிரெஞ்சு மொழி ஊடுருவித் தன்மொழியுடன் கலந்து புதிய மொழியாகிவிட்டன. அங்கு வழங்கிய தாய்மொழிகள் பண்படாத நிலையிலிருந்ததால், எளிதில் 'கிரியோல்' மொழி (கலப்பு மொழி) ஆகி விட்டன. இங்கு பண்படாத மக்களின் பழக்கவழக்கத்தினால் ஒரு புதிய கிரியோல் மொழியாகிக் கொண்டிருப்பதையே யூகிக்க முடிகிறது. "ஆவது அறிவதே அறிவுடைமை அல்லவா?"

*தமிழ்மணி 26.1.1991*

✧ ✧ ✧

# 13. வட்டார வழக்கு

வட்டார வழக்குகள், அனைவரையும் ஒருங்கிணைக்கும் மிகப்பெரிய மக்கள் தொடர்புக் கருவிகள் பல வந்த பிறகும், காணப்படுதல் அவை தவிர்க்க இயலாதவை என்பதையே உணர்த்துகின்றன. மேலும் தமிழில் வட்டார வழக்குச் சொற்கள், இன்றளவும் போதிய அளவு தொகுக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றுள் சில பழந்தமிழ்ச் சொற்களாய் இன்றும் வழக்கில் காணப்படுவனவாயிருக்கும். 'சூறாவளி 'யில் 'வளி'யும் 'திங்கள் கிழமை'யில் திங்களும் முன்பு பெருவழக்காயிருந்தவை. 'திங்களைப் போற்றதும்' என்று சிலப்பதிகாரத்தைத் தொடங்கும் போது, அதை ஓர் அருஞ்சொல் என்றுதானே கருதுகிறோம். சில சொற்கள் ஏட்டில் ஏறாதவையாய், ஆனால் மிக்க சிறப்புடையவையாய்க் காணப்படும். காரியத்தில் 'கருக்கடை ' வேண்டும் என்பார்கள். 'கருக்கடை' என்றால், உன்னிப்பாய்க் கருதிச் செய்வதைக் குறிக்கும். கண்ணின் கருக்கடை, காரியமற்றும் திறனைப்படம் பிடித்துக்காட்டுகிறது. 'பூ எடுத்தல்' பொருந்திய வினைச் சொல்லாகும். பூவைப் ' பறிக்க ' வேண்டாம். அது மிக மென்மையானது என்பதை இதனால் உணரலாம். பல சொற்கள் நாம் பயன்படுத்துவதினின்றும் வேறாகப் பிறிதொரு பொருளை உணர்த்துவதும் உண்டு. ' நெருக்கம் 'என்ற சொல், பழக்கத்தைச் சுட்டும். ' நமக்கும் அவருக்கும் இப்போது நெருக்கமில்லை ' என்பார்கள். மேலும் மரபுச் சொற்கள், இணைத் தொடர்புகள் என இவ்வாறு சொல்வளம் மக்கள் பேச்சு வழக்கில் குவிந்து கிடக்கிறது.

கொச்சை வடிவங்கள், ஒலித்திரிபுபட்டவை, பிழைபட்டவை – தனியே தொகுக்கப்பட்டு ஆராயப்பட வேண்டும். பலர் வட்டார வழக்கு, பேச்சு வழக்கு, உலக வழக்காறு என்றவுடன் மக்கள் அறியாமையாலும் அவசரத்தாலும் முயற்சிச் சுருக்கத்தாலும் செய்யும் திரிபு வடிவங்களையே நினைக்கின்றனர். அவற்றையே தொகுத்து, ஆராய்ந்து நூல்கள்,

கட்டுரைகள் எழுதுகின்றனர். அது தனி ஓர் ஆராய்ச்சி என்பது உண்மையே. ஆயினும் அவற்றுக்கு அப்பால், வட்டார வழக்குகளில் காணப்படும் சொல்வளம், தொடர்வளம் இரண்டையும் தொகுத்தால் இன்று ஏட்டு வழக்கில் காணப்படுவதற்கு நிகரானதும் கூடுதலானதுமான தமிழ்வளம் மறைந்து கிடப்பது புலப்படும். இது ஒரு வகையில் 'தொல்பொருளாய்வு' போல, தோண்டித் துருவியும் தேடி அலைந்தும் சேகரிக்க வேண்டிய பணியாகும். நம் நாட்டில் வண்ணார், தச்சர், பொற்கொல்லர், நெசவு செய்வோர் என இவ்வாறும் வேளாண்மையிலும் பயன்படுத்தப்படும் 'தொழிற்கலைச் சொற்கள்' பல நூறாயிரம் உள்ளன. ஒருமுறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், எம். பில். ஆய்வாளர் வண்ணார் பயன்படுத்தும் தொண்ணூறு தொழிற்கலைச் சொற்களைத் தொகுத்துக் கொண்டுவந்தார். இது போலவே 'உறவுச் சொற்கள்' 'ஒட்டுச் சொற்கள்' என எத்தனையோ தொகுதிகளுக்கு இடமுள்ளது. இசை, கலை, சிற்பம் பற்றியும் பிற தொழில் பற்றியும் அவ்வவ்வினைஞர் – தொழில் வல்லார் வாய் மொழியாகப் பயன்படுத்தும் கவின்கலை மற்றும் தொழிற்கலைச் சொற்கள், கருவிப் பெயர்கள், பட்டறிவு மொழிகள் பல நூறாயிரம் உள. இவை தொகுக்கப்பட வேண்டும். இலங்கைத் தமிழர்கள் பயன்படுத்தும் பகடி, முஸ்பாத்தி, கதைத்தல் வார்த்தைகள் யாவும் உண்மையில் தமிழ்ச் சொற்கள் தானா? கதைத்தல் – உரையாடுதல், பகடி – கேலி பேசுதல், பரிகாசம் செய்தல். இவை இரண்டும் வட்டார வழக்குகள் தான். பகடி ஒருவகைக் கூத்து என்கிறது சிலப்பதிகார உரை. வேடமிட்டு நடிப்பது, ஒருவரைப் போல் செய்துகாட்டிக் கேலி செய்வது என உலக வழக்கில் இதன் பொருள் வளர்ச்சி பலவாகும். முஸ்பாத்தி என்பது மகிழ்ச்சி என்ற பொருளில் ஆளப்படுதல், கொச்சை வழக்காகும். 'பகடி' என்பதைப் 'பகுடி' என எழுதுவது, அச்சொல்லை உச்சரிக்கத் தெரியாமல் செய்யும் பிழையாகும். பகடி என்பதே வட்டாரச் சொல். பகுடி ஒலித் திரிபுற்ற பேச்சு வடிவம். இவை தனித்தனியே சிந்திக்கப்பட வேண்டும். ஆங்கிலத்திலும் நிலைபேறுடைய தரமான பேச்சு வழக்கிற்கே முக்கியத்துவம் தருகின்றனர்.

*தமிழ்மணி 31.8.1991*

✧ ✧ ✧

# 14. தமிழா தமிழா ஒன்றுபடு! தமிழால் தமிழால் ஒன்றுபடு!

மேற்கண்ட வாசகம் அண்மையில் மதுரை நகர்த் தெருக்களில் எல்லாம் காணப்பட்டது. இவ்வாறு உலகத் தமிழர்களை ஒன்றுபட அழைக்கின்றனர். தமிழால் ஒன்றுபடுவது எப்படி ? சாதியால், சமயத்தால், இடத்தால் பிரிந்து நிற்கும் தமிழன், தான் பேசும் மொழியால் மட்டுமே ஒன்றுபட முடியும் என்று நினைக்கிறார்கள்.

இந்த நினைப்பு எவ்வாறு எழுந்தது ? தமிழ் எவ்வாறு தமிழர்களை ஒன்றுபடுத்த முடியும் ? சிங்கப்பூர்த் தமிழ் வேறாகவும் சென்னைத் தமிழ் வேறாகவும் இருந்தால் ஒன்றுபடுத்த இயலுமா ? மொரீசியசு தமிழன் பிரெஞ்சு உச்சரிப்பால் தமிழைச் சிறிது மாற்றி உச்சரித்துப் பேசினாலும் மதுரைத் தமிழனால் அதை விளங்கிக் கொண்டுவிட முடிகின்றது. தென்னாப்பிரிக்கத் தமிழன் இலங்கைத் தமிழனுடன் பெரும் இடர்ப்பாடு எதுவுமின்றித் தமிழில் உரையாட முடிகிறது.

தமிழகத்திலேயே கொங்கு, நாகர்கோயில், நெல்லை, சென்னை, செட்டிநாடு என நன்கு இனம் பிரிந்த கிளை வழக்குகள் காணப்படினும், ஒருவரை ஒருவர் பேச்சில் விளங்கிக் கொள்வதில் சங்கடம் எதுவுமில்லை.

ஜெயகாந்தனின் எழுத்து பட்டப்படிப்புப் படித்த சுப்பிரமணியனுக்கு மட்டுமன்றிச் சுப்பனுக்கும் விளங்கவே செய்கிறது. ஆர். சண்முகசுந்தரத்தின் கொங்குத் தமிழையும் ஆ. மாதவனின் நாகர்கோயில் தமிழையும் மதுரைத் தமிழனால் ஓரளவு விளங்கிப் படிக்க முடிகிறது. மலைவாழ் மக்களுடனும் உப்பளக்காரர்களுடனும் கலந்து பழகி, அவரவர் நடையில் சிலரால் புதினம் படைக்க முடிகிறது. அதைப் படைக்கும் சென்னைவாசியான அவரையும் அதைப் படித்து விளங்கிக் கொள்ளும் திருநெல்வேலிக்காரரையும் அந் நாவல்களையும் இணைத்து, ஒன்றுபடுத்துவது எது ? 'தமிழ்' தானே ?

**சிலப்பதிகாரமும் கம்பராமாயணமும் காந்திமகான் கதையும்**

இளங்கோவின் சிலப்பதிகாரம் கம்பருக்கு விளங்கியிருக்கிறது. நாட்டுப்புற வடிவத்தில் காந்திமகான் கதையை வடித்த கொத்தமங்கலம் சுப்புவுக்கு, முற்கூறிய இரு நூல்களும் விளங்கியுள்ளன. நாம் மேற்சுட்டிய மூன்று நூல்களையும் விளங்கிக் கொள்வதில் தரநிலை வேறுபாடுகளிருந்தாலும், இவை மூன்றும் பலருக்கும் விளங்கவே செய்கின்றன. காரணம் இவை அனைத்திலும் ஒரு பொதுத் தமிழ் ஊடுருவி நிற்பதுதான் !

சிலப்பதிகாரத்திலுள்ள ஐயாயிரத்து ஓர் அடிகளில், இற்றைத் தமிழனுக்கு விளங்காத தொடர்களும், சொற்களும் உள்ளன என்பது உண்மையே. ஆயினும் செம்பாதிக்குமேல், ஓரளவேனும் – ஒட்டு மொத்தமாகவேனும் – ஒன்றிரண்டு சொற்கள், தொடர்களாகவேனும் விளங்கிக் கொள்ளக் கூடியவையாக இருப்பதால் இன்னும் அது நெஞ்சைஅள்ளாமல் போய்விடவில்லை.

**பெரியவனை மாயவனை பேருலகம் எல்லாம்**
**விரிகமல உந்தியுடை விண்ணவனை, கண்ணும்**
**திருவடியும் கையும் திருவாயும் செய்ய**
**கரியவனைக் காணாத கண்என்ன கண்ணே ?**
**கண்ணிமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே ?**

எங்கள் வீட்டு ஆச்சியும் இதை முதலில் தட்டுத் தடுமாறிப் படித்தாலும், ஈடுபாடு ஏற்பட்டவுடன் விரைந்தும் படிக்கிறாள்! அதுவும் முறைபிறழாமல், ஓர் எழுத்துப் பிழை கூட இல்லாமல், அச்சுப் பிசகாமல் 'எஸ். ராஜம்' அன்னைத் தமிழின் அருந்தமிழ்ச் செல்வங்களைப் பதிப்பித்த பிறகு, சங்க இலக்கியமும் சிலப்பதிகாரமும் பிறவும் எளிமையாய் விளங்குவனவே என்ற உண்மை விளங்கியது. சந்திப் பிரித்துப் பதிப்பது கூடாதென்றவர்களும், அதன் பயன்பாடு தெரிந்தபின் அவ்வாறு சில பதிப்புகள் வருவதன் தேவையை உணரத் தலைப்பட்டனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் திருவாசகத்தை இவ்வாறு சந்தி பிரிக்காமலும் அடுத்துச் சந்தி பிரித்தும் ஒவ்வொரு பாடலையும் பதிப்பித்து வெளியிட்டது. கம்பராமாயணம் முழுவதும் அவ்வாறு பதிப்புப் பெற்றது. 'மரே' பதிப்புச் சிலப்பதிகாரத்தில் வரும் குன்றக்குரவைப் பகுதி இது.

**"மலைவேங்கை நறுநிழலின்,**
**வள்ளி போல்வீர் !**
**மனம் நடுங்க முலை இழந்து**
**வந்து நின்றீர், யாவிரோ ?" என**
**முனியாதே-**

'மணமதுரையோடு அரசு கேடுற
வல்வினை வந்து உருத்தகாலை,
கணவனை அங்கு இழந்துபோந்த
கடுவினையேன் யான்", என்றாள்.

நிறுத்தக் குறியிட்டு, பிரித்துப் பதிப்பித்த இது போன்ற பகுதிகளை விளங்கவே இல்லையென்பார் – இது பழந்தமிழ். பழகாத தமிழ் என்பார் – உண்டோ ? எண்ணிப் பாருங்கள்.

சங்க இலக்கியத்தில் கடுஞ்சொல், செறிவு மிக்க தொடர், முன்னைய மொழிநடை என்பனவற்றால் பெரிதும் விளங்காத பகுதிகள் உள்ளன. சற்றே விளங்கிச் சிறிது விளங்காது நிற்பனவும் உள்ளன. எளிதில் இன்றும் விளங்குவனவும் காணப்படுகின்றன. குறுந்தொகையில் சில பகுதிகளைப் படித்துப் பாருங்கள்.

அரியலம் புகவின் அம்தோட்டு வேட்டை
நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன் ( 258 )

பெருந்தண் வாடையும் வாரார்,
இஃதோ - தொழி ! - நம் காதலர் வரவே ? ( 160 )

பாடுக பாட்டே,
இன்னும், பாடுக, பாட்டே - அவர்
நல்நெடுங்குன்றம் பாடிய 'பாட்டே. ( 23 )

'மரே' பதிப்பிலுள்ளபடி காணப்படும் இவற்றை, இன்று விளங்கிக் கொள்வதில் பல நிலைகள் உள்ளன என்பது உண்மையே. எனினும் இவை ஒன்றினொன்று, மிகவும் விலகி விடவில்லை.

எவ்வாறாயினும் பழந்தமிழ் இன்றைய தமிழனுக்கும், ஒரு வட்டாரத் தமிழ் பிறிதொரு வட்டடாரத்தவனுக்கும், ஒரு சமூகத்தமிழ் பிற சமூகத்தவனுக்கும் ஒரு நாட்டுத் தமிழ் மற்றொரு நாட்டுத் தமிழனுக்கும் விளங்குகிற காலம் வரைதான் "தமிழா ஒன்றுபடு, தமிழால் ஒன்றுபடு" என்று பாட முடியும்.

ஒரு மொழி சிறந்த தகவல் தொடர்புச் சாதனமாகப் பயன்பட அதன் பொதுத்தன்மையே அடிப்படையாகும். இப் பொதுத் தன்மையையே ஆங்கில மொழி பேணி வந்துள்ளது. இன்று உலகளாவிய நிலையில் வழங்கும் ஆங்கிலம் நமக்குச் சிறந்த வழிகாட்டியாகும். இதனால்

மொழிக்கு நன்மை என்பதைவிட, அம் மொழியைப் பேசுபவனுக்குத்தான் நன்மை. ஒரு மொழியின் பொதுத்தன்மையைப் பேணுவதை – பேணுமாறு வலியுறுத்துவதை மொழிப்பற்று, மொழி ஆர்வம், மொழி வெறி என்று கருதுதல் தவறு. அது தமிழனுக்கு நல்லது – உலகளாவிய நிலையிலும் அவனை ஒன்றுபடுத்தும் என்பதால்! எனவே இது மனித நேயம் பற்றியதே என்பதை முதலில் மனத்தில் பதிவித்துக் கொள்ளவேண்டும்.

சமஸ்கிருதம், தமிழ், பிராகிருதம், பாலி என எம் மொழியாயினும் அவ்வம் மொழிகள் தோன்றி வளரும் பொழுதே சில கோட்பாடுகளுடன்தான் பிறக்கின்றன. இலக்கியம் தோன்றும் போதே, அது பற்றிய கோட்பாடும் உடன் தோன்றுகிறது. அக் கோட்பாடு மிக நீண்ட காலம் கழித்து வரையறுக்கப்படுகிறது. அதனால், வரையறைப்படுத்துமுன் அக் கோட்பாடே இல்லை என வாதிக்கக் கூடாது. இந்திய மொழியறிஞர்கட்கு – தமிழ் அறிஞர்கட்கு முன்பு தமக்கெனப் பல அடிப்படைக் கோட்பாடுகள் இருந்துள்ளன. அவை நாட்டு மருந்து – சித்த மருத்துவம் போல் 'அறிவியல்' நெறிமுறைப்படுத்தாமலிருக்கலாம்.

ஆனால் இன்று அவற்றை வடிவப்படுத்த நமக்கு வாய்ப்பிருக்கிறது. முதலில் நமக்கென மொழிக் கொள்கைகள் உண்டு என ஏற்றுக்கொண்டு, மேலைப் படிப்பறிவால் அவற்றை வடிவப்படுத்தி, பிறகு அவ்வழிகளில் நம் மொழிகளை அணுக வேண்டும்.

பேச்சு மொழிதான் மொழி. பிழையான வழக்குகளே வழக்காறு என மேலைநாட்டவர் சிலர் தம் கருத்து வழி விவாதிக்கும் போது நன்கு இருபக்கமும் சார்ந்து விவாதித்து உண்மை காண வேண்டும். பேச்சுத் தமிழ் பெருஞ்செல்வம் என்பதில் தடை இல்லை. சோம்பேறித்தனத்தால், அறியாமையால், பிறழ உணர்ந்ததால் சிதைத்தும் குறைத்தும் விரைந்து பேசி விடுகிறோம். அவ்வாறு ' பேசுவது போலவே எழுத வேண்டும் ' என்பதிலே தான் இப்போது விவாதிக்க வேண்டியிருக்கிறது. அதை விடுத்து இனி நாம் பொதுத் தமிழில் பேசுவோம். செம்மொழி / கட்டளைத் தமிழில் எழுதுவோமாக !

*தமிழ்மணி 2.4.1991*

✧ ✧ ✧



தமிழண்ணல்

✧ சிவகங்கை மாவட்டம், நெற்குப்பையில் 12.8.1928 இல் பிறந்த இவர், உயர்பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகத்தில் 42 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய, ஒரு தமிழ் மாணவர்.

✧ சங்க இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர், முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, செவ்வியல் இலக்கியத் தொடர்பான நூல்கள் பல எழுதியவர்.

✧ பேரா. மு.வ. மூலம் 'அறிவுருவும்', அறிஞர் அண்ணா மூலம் 'உணர்வுருவும்' இளம் அகவையிலேயே இவரிடம் பதிவாயின.

✧ மழலையர் முதல் ஐந்தாம் வகுப்புவரை, தாய் மொழியாம் தமிழ் ஒன்றே பாடமொழியும் பயிற்று மொழியும் ஆதல் வேண்டும்; பல்கலைக்கழக உயராய்வுப் பட்டங்கள் வரை– மருத்துவம், பொறியியலுட்பட – தமிழுக்கு, ஆங்கிலத்திற்கு நிகரான, 'மொழிச் சமநீதி' தரப்படவேண்டும்; தமிழை முழுமைபெறக் 'கல்வி மொழி' ஆக்க வேண்டுமெனப் போராடி வருபவர்.

✧ தமிழக அரசின் பொற்கிழிப் பரிசு, திரு. வி.க. விருது, சிறந்த நூற் பரிசு, நல்லாசிரியர் விருதுடன், தமிழ் இலக்கியச் சங்கப் பலகைக் குறள்பீடத்தின் துணைத் தலைவர் – என்பதையும் பெற்றவர். தமிழக முதல்வர் கலைஞரின் 'தொல்காப்பியப் பூங்கா' – நூலை வெளியிடும் வாய்ப்புப் பெற்றவர்.

✧ குன்றக்குடித் திருமடம்: கணக்காயர் பட்டம், மதுரைத் திருவள்ளுவர் கழகம்: தொல்காப்பியச் செம்மல், கோவிலூர்த் திருமடம்: அருந்தவச் செம்மல், ம.கா. பல்கலைக் கழகம்: தமிழ்ச் செம்மல், ச. மெய்யப்பர் பவள விழா விருது: தமிழியக்கச் செம்மல் என்பன சில இவர் பெற்றவை.

✧ 'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை உடையவர். நிலத்தில் யார்க்கும், தம் கொள்கையை, உணர்வை, உறுதியை விட்டுக்கொடுக்க விரும்பாத நெறியை விரும்பிப் போற்றி வாழ்பவர்.

✧ இதனால் இவர் இழந்தவை பல; எனினும் மனத் தளர்ச்சிகள் கடுகளவும் இல! ஒவ்வொரு கணமும் இளமையையும் வலிமையையும் தந்து கொண்டிருப்பது இவர் கற்ற தமிழ்!